வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C


சுடர்: 28 | கதிர்: 264 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 1, சனி 17.08.2013

# கூட்டமைப்பினர் மீது நெடுந்தீவில் தாக்குதல்

## கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 17
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் விந்தன் கனகரத்தினத்துக்கு ஆதரவாக நெடுந்தீவில் பிரசாரம் செய்தவர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதலில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
இந்தத் தாக்குதலை ஈ.பி.டி.பியினரே நடத்தினர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக அமைப்பாளர் பேர்னாட் தெரிவித்துள்ளார்.
ஆயினும் இந்தத் தாக்குதலுக்கும் ஈ.பி.டி.பிக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்று ஈ.பி.டி.பி. சார்பில் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் தவராசா கூறியுள்ளார்.
சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுபவரான விந்தன் கனகரத்தினத்துக்கு ஆதரவாக நெடுந்தீவு மேற்கு ஒற்றைப் பனையடியில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.
இதன்போது அந்த இடத்துக்குச் சென்ற 6 பேர் அடங்கிய குழுவினர் துண்டுப் பிரசுரங்களைப் பறித்துக் கிழித்து அருகிலிருந்த மலக்குழியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.
கூட்டமைப்புக்கு ஆதரவாக நெடுந்தீவில் பல வருடங்களாக வசித்து வரும் ரணசிங்க ஆரியசேன என்பவரும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். அன்று இரவு 9 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற குழுவினர், "கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வியா?" எனக் கேட்டு வீட்டுக்கதவை உடைத்து அத்துமீறி நுழைந்து அவரை கடுமையாகத் தாக்கி உள்ளனர். இதன்போது அங்கு நின்ற பெண் ஒருவரும் தாக்கப்பட்டுள்ளார்.
படுகாயமடைந்த அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அச்சுறுத்தல் காரணமாக தான் தாக்கப்பட்ட சம்பவத்தை வைத்தியரிடம் கூறவில்லை என்றும் கூரையில் இருந்து விழுந்தேன் என்றே தெரிவித்தேன் எனவும் அவர் நேற்று உதயனிடம் கூறினார்.
நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக அமைப்பாளர் பேர்னாட் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆரியசேனவை பார்க்கச் சென்ற பின்னரே அவர் தாக்கப்பட்ட சம்பவம் மருத்துவருக்குத் தெரிவிக்கப்பட்டது.
இவர் தாக்கப்பட்டத்தை அறிந்து கொண்ட புலனாய்வுப் பிரிவினர் வைத்தியசாலைக்குச் சென்று அவரிடம் சம்பவம் தொடர்பில் விசாரித்ததுடன் வாக்கு மூலமும் பெற்றுச்சென்றனர்.
ஆரியசேனவை ஈ.பி.டி.பியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அடங்கிய குழுவி

தொடர்ச்சி: பக்கம் 21

பேச வருகின்றது சீனாஎல்லை ஊடுருவல்கள் குறித்து 06
அடக்குமுறைக்கு அடிபணியோம் போராட்டம் தொடரும் முர்சி ஆதரவாளர்கள் 07
இருதயராஜா மென்பந்துக் கிரிக்கெட் அனலைதீவு லக்கிஸ்ரார் இறுதியில் 22
பரபரப்பான ஆட்டத்தில் கஜானா வெற்றி பெற்றது 23




# சம்பந்தன், சுமந்திரனின் எம்.பி. பதவியை பறிக்குக

## சிங்கள அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு. ஓக.17
"நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான சம்பந்தனும் சுமந்திரனும் பேச்சு நட்த்தியுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்காக அரசு உடன் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். பேச்சு நடத்தியுள்ளமை விசாரணை மூலம் அம்பலமா னால் இவர்களினது நாடாளுமன்ற உறுப்புரிமையை உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச்செய்ய வேண்டும்."

தொடர்ச்சி: பக்கம் 21

# சிறிதரன் எம்.பியிடம் 5 ஆவது முறை விசாரணை

கிளிநொச்சி, ஓக.17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவரது அலுவலகத்தில் வைத்து 5 ஆவது தடவையாகவும் கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இரு மணி நேரமும் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.
சிறிதரன் நேற்றுக் காலை 9.30 மணி முதல் முற்பகல் 11.35 மணி வரை இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்ன டி. அல்வின் மற்றும் பி.சி. திலகரட்ண, டி.சி.உதயகுமார் ஆகியோர் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினரின் அலு

தொடர்ச்சி: பக்கம் 21

# திருமலை மாணவர் படுகொலை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு

ஜெனிவா. ஓக.17
திருகோணமலை மாணவர் படுகொலைச் சம்பவம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முறைப்பாடு செய்யப்பட உள்ளது. 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்து மாணவர்கள் திருகோணமலை கடற்கரையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.
இந்த சம்பவத்தில் உயிரிழந்த ரஜிகர் மனோகரன் என்ற மாணவரின் தந்தை மருத்து வர் காசிப்பிள்ளை மனோகரன் இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் சபையில் மனுவொன்றை தாக்கல் செய்ய உள்ளார். எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரி மைகள் சபையின் அமர்வின் போது இந்த மனு தாக்கல் செய்யப்பட உள்ளது.
படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி, மனோகரன் மனித உரிமைகள் சபையில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய உள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு தாம் சாட்சியமளித்துள்ளதாகவும். இதனால் விசாரணை அறிக்கை தொடர்பில் அறிந்து கொள்

தொடர்ச்சி: பக்கம் 21

## வெலிவேரிய விசாரணைக்கு அவகாசம் கோரும் இராணுவம்

கொழும்பு.ஓக. 17
வெலிவேரியவில் சுத்தமான குடிதண்ணீருக்காகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக, விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ விசார

தொடர்ச்சி: பக்கம் 21

# பிரமந்தனாறில் வியாழன் இரவு இளைஞர் அடித்துப் படுகொலை

## சந்தேகத்தில் நால்வர் கைது

கிளிநொச்சி, ஓக. 17
இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையில் வீதியில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறிக்கொலையில் முடிந்தது. இதன்போது இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பிரமந்தனாறு பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமி - விக்கி (வயது - 20) என்பவரே இவ்வாறு அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
நேற்றுமுன்தினம் இரவு பிரமந்தனாறு வீதியில் இரு இளைஞர் குழுக்கள் தலா இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணம்செய்துள்ளனர். இதன்போது ஒரு பகுதியினர் 'டிம் லைற்' போடாமல் சென்றுள்ளனர். இதனை அடுத்து எதிரே வந்த குழுவினர் இவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பாக மாறியது. இதன்போது இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பிரமந்தனாறுப் பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்களைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார், அவர்களை நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ். சிவ பாலசுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தினர்.

தொடர்ச்சி: பக்கம் 21

# பஸ் – மோ. சைக்கிள் விபத்தில் பளையில் நேற்று குடும்பஸ்தர் சாவு

## இருவர் படுகாயம்

தென்மராட்சி, ஓக. 17
பளை நகர்ப் பகுதியில் இடம்பெற்ற பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயங்களுக்கு இலக்கானார்கள்.
இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு பளைப் பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.
பளை வைத்தியசாலைக்கு சென்றுவிட்டுத் திரும்புகையில் இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி: பக்கம் 21

# குற்றங்களைக் காப்பவரே இங்கு பாதுகாப்புச் செயலர்

## மங்கள எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.17
"குற்றச் செயல்களைப் பாதுகாக்கும் செயலாளர்தான் கோத்தபாய ராஜபக்ஷ. அவர் பாதுகாப்புச் செயலாளர் அல்லர்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
அதிகமான குற்றச் செயல்கள் அரசுடன் தொடர்புடைய தீவிரவாதத்தாலேயே நடத்தப்படுகின்றன என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.
கொழும்பு, இராஜ கிரியவிலுள்ள ஐ.தே.கவின் தொழிற் சங்கப் பணி மனையில்

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஓக.15 க்குள் உயிரிழந்த, புலம்பெயர்ந்த வாக்காளர்களின் விவரங்களைத் தருக

## கிராம அலுவலர்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஓக. 17
2012 ஆம் ஆண்டின் வாக்காளர் தேர்வு இடாபில் பதிவு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உயிரிழந்தவர்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கிராம அலுவலர்களுக்கு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரங்கள் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியினருக்கும் வழங்கப்படவுள்ளன.

வாக்காளர் அட்டைகளை உரியவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் பயன்படுத்தித் தேர்தல் மோசடி செய்ய முற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

2012ஆம் ஆண்டின் வாக்காளர் தேர்வு இடாப்பில் பதிவு செய்து வாக்காளர்களாக உள்ளவர்களில் யாராவது உயிரிழந்திருந்தால் அல்லது வெளிநாடுளுக்குச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டால் அத்தகையவர்களின் பெயர் விவரம், தொடரிலக்கம் உள்ளிட்ட விடயங்களைப் பதிவு செய்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு கிராம அலுவலர்களிடம் தெரிவத்தாட்சி அலுவலர்களால் கோரப்பட்டுள்ளது. (த-4)

## கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம்.ஓக. 17
வவுனியாவில் 3ஆயிரம் மில்லி கிராம் கஞ்சாப் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் கடந்த புதன்கிழமை 2ஆயிரம் மில்லி கிராம் கஞ்சாவுடன் ரயில் நிலைய வீதிச் சந்தியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் கடந்த 9ஆம் திகதி வேப்பம்குளம் பகுதியில் 1000 மில்லி கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இது குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-4)

## ஆளும் கட்சியின் அலுவலகத்தில் தேர்தல் சுவரொட்டிகள் அகற்றல்

தென்மராட்சி. ஓக.17
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளரின் அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகள் வடமாகாண உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் கைப்பற்றப்பட்டு அவை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் வேட்பாளரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து உதவித் தேர்தல் ஆணையாளர் நேரடியாகச் சென்று அவற்றைக் கைப்பற்றிக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக குறித்த வேட்பாளரான குமாரு சர்வானந்தனுடன் தொடர்பு கொண்ட போது. கட்சி அலுவலகத்தினுள் தேர்தல் சுவரொட்டிகள் வைத்திருப்பது தவறில்லையெனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அலுவலகத்தைச் சுற்றி வைக்கப்பட்டிந்த சுவரொட்டிகள், 'கட் அவுட்டு'கள் போன்றவற்றை அகற்றிக் கட்சி அலுவலகத்தினுள் வைத்திருந்ததாகவும், கட்சி அலுவலகத்தினுள் புகுந்து சுவரொட்டிகளை எடுத்துச் சென்றமை மனித உரிமைகள் மீறல் என்பதால் உதவித் தேர்தல் ஆணையாளரின் அத்துமீறல் குறித்து தேர்தல் ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-9)

## ரங்கே பண்டார எம்.பி மீண்டும் ஐ.தே.க.வில்

கொழும்பு. ஓக. 17
கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார, மீண்டும் கட்சிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவருக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆனமடு சுதம்பாய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆனமடு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, அசோக அபேவிக்கிரம, பாலித தேவப்பெரும, ஜோசப் மைக்கல் பெரேரா உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



கடந்த ஆண்டு ஐக்கிய பிக்கு முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு அவரைக் கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

இந்நிலையில் அவருக்கான விசாரணைகள் நிபந்தனைகளின்றி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அவர் முன்னர் வகித்த பதவிகள் யாவும் மீண்டும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவரது இணைப்பாளர்களுள் ஒருவரான ஏ.ஆர். ரபாத் அமீன் தெரிவித்தார். (த)

## 600 பொலிஸார் நல்லூரில் கடமை

யாழ்ப்பாணம், ஓக.17
நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழா நடைபெற்று வரும் நிலையில் அங்கு 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

பொலிஸார் சீருடையிலும், சிவில் உடையிலும் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதோடு, திருட்டுக்கள் இடம்பெறுவதைத் தடுப்பதகுமே இவர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். நல்லூர் ஆலயத்தின் கொடியேற்றத்தில் இருந்து இன்றுவரை திருட்டுக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று அவர் கூறினார். (த-4)

## ராமேஸ்வரம் மீனவரில் 8 பேர் நேற்று விடுதலை

### 41 பேர் தொடர்ந்தும் விளக்கமறியல்

கொழும்பு. ஓக. 17
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராமேஸ்வரத்தைச்சேர்ந்த 49 மீனவர்களில் 8 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 41 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் ஆனந்தி கனகரட்னம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட 41 மீனவர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் 49 பேர் சார்பாகவும் மன்னார் மாவட்ட சிரேஸ்ட சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் மற்றும் சட்டத்தரணி ரி.வினோதன் ஆகியோர் முன்னிலையாகி அவர்களை விடுதலை செய்து இலங்கைக் கடற்படையூடாக இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறு கோரினர்.

இந்நிலையில், அவர்களில் குறித்த 8 மீனவர்களையும் விடுதலை செய்த நீதிவான் ஏனைய 41 மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

## இந்தியக் கொடி ஏற்றச் சென்ற 69 பேர் கச்சதீவில் கைதாகினர்

கொழும்பு.ஓக 17
கச்சதீவில் இந்திய தேசியக் கொடியை ஏற்றச் சென்ற தேவர் தேசியப் பேரவையைச் சேர்ந்த 69 பேரை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கச்சதீவை மீட்கக் கோரியும், அங்கு இந்தியத் தேசியக் கொடியை ஏற்றப்போவதாகவும் தேவர் தேசியப் பேரவையினர் அறிவித்திருந்தனர்.



இதையடுத்து பேரவையின் தலைவர் கே.சி.திருமாறன் தலைமையில் அரசரடியில் உள்ள மூக்கையாத் தேவர் சிலை முன்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கூடினர். சிலைக்கு மாலை அணிவித்த அவர்கள் கச்சதீவுக்குச் செல்வதாகக் கூறிப் புறப்பட்டுள்ளனர்.

தகவலறிந்த பொலிஸார் அங்கு விரைந்து, கே.சி.திருமாறன் உள்ளிட்ட 69 பேரையும் கைது செய்துள்ளனர். அவர்களை திருமண மண்டபத்தில் தங்க வைத்த பின்னர் மாலையில் விடுவித்தாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த)

## சட்டவிரோத வலைகளை பாவித்தவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம். ஓக.17
முல்லைத்தீவு நாயாறு மற்றும் நந்திக்கடல் கடல்நீரேரிகளில் தடைசெய்யப்பட்ட முக்கூட்டுவலை மற்றும் சுருக்கு வலை பாவித்த 6 பேருக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் 16ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.



**கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தால் திடீரென மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போதே நேற்றுமுன் தினம் இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.**

கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தால் திடீரென மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போதே நேற்றுமுன்தினம் இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

நாயாறு கடல் நீரேரிகளில் தடைசெய்யப்பட்ட முக்கூட்டு வலை பயன்படுத்திய 4 பேருக்குத் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 8ஆயிரம் ரூபாவும், நந்திக் கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட சுருக்குவலை பாவித்த 2 பேருக்குத் தலா 4ஆயிரம் ரூபா வீதம் 8 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் இவர்களால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. (த-14-5)

## மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவின் 'எக்ஸ்ரே' இயந்திரங்கள் பழுது

### நோயாளர்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்.மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தின் 'எக்ஸ்ரே' இயந்திரத்தின் மின்கலங்கள் பழுதடைந்துள்ளமையினால் கடந்த ஒரு வருடமாக நோயாளிகளுக்கு நெஞ்சு 'எக்ஸ்ரே' படம் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர் ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைத்தியசாலையில் இந்நோயாளர்களுக்கு நெஞ்சு 'எக்ஸ்ரே' படம் எடுக்க முடியாத நிலை உள்ளது. மேலும் காசநோய் மருந்துகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள மருந்துக் களஞ்சியத்தின் குளிரூட்டியும் பழுதடைந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக உள்ளது.

சுகாதாரப் பணிமனையில் கடமை புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சிலரின் பொறுப்பற்ற செயல்களாலேயே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனை மறுசீரமைக்க சகல உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தும் ஆக்கபூர்வமான பலன்கள் இதுவரை கிட்டவில்லை.

எனவே இதுகுறித்து அதிகாரிகள் விரைந்து கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (த-17)

## 80 அடி உயர மரத்தில் ஏறித் தாதி எதிர்ப்பு

கொழும்பு. ஓக. 17
கண்டி போதனா வைத்தியசாலையின் ஆண் தாதி ஒரு வர் வைத்தியசாலை வளாகத்திலுள்ள 80 அடி உயரமான மரமொன்றின் மேலேறி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

கண்டி வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதியர்களுக்கு இடையில் சில தினங்களாக இடம்பெற்றவரும் முறுகல் நிலை நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும், அந்தப் போராட்டம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த வைத்தியர்கள் சிலரை அறை ஒன்றில் பூட்டி வைத்ததாகக் கூறப்படும் பெண் தாதி ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அந்த இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யக் கோரியே குறித்த ஆண் தாதி மரத்திலேறி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

மரத்தின் மேலேறி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ள தாதியை மரத்திலிருந்து இறக்குவதற்குப் பொலிஸாரும் வைத்தியசாலை அதிகாரிகளும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (த)

## பள்ளிவாசல் முன்பாக இருக்கும் அறிவுறுத்தலை அகற்ற உத்தரவு

கொழும்பு,ஓக 17
மாவத்தகமை, பறகஹதெனிய ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள அறிவுறுத்தல் பலகையை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு பெலச நீதிவான் நாமல் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

பறகஹதெனிய ஜும் ஆப் பள்ளிவாசலின் மௌலவிக்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிக்குமே மேற்கண்டவாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார். குறித்த அறிவுறுத்தல் பலகையை 14 நாள்களுக்குள் அகற்றிவிடுமாறே அவர் உத்தரவிட்டுள்ளார்.

பறகஹதெனிய ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாகவிருந்த அறிவுறுத்தல் பலகையை முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் அண்மையில் சேதப்படுத்த முயன்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர் வீதிகளில் தேர்தல் சுலோகங்கள்

## விதி மீறும் அரசைக் கண்டும் காணாமல் விடும் அதிகாரிகள்



குருநகர், ஓக.17
வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர்களுக்கு ஆதரவுகோரும் சுவரொட்டிகள், பதாகைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள போதும் யாழ். பிரதான வீதி, மவுன்காமல் வீதி ஆகிய இடங்களில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் முடியப்பு றெமிடியஸிற்கு ஆதரவு கோரும் சுலோகங்கள் வீதிகளின் மத்தியில் எழுதப் பட்டுள்ளன.

காப்பெற் வீதியாகப் புனர மைப்புச் செய்யப்பட்டுள்ள இந்த வீதிகளில் பல இடங்களில் வெள்ளை நிறம் கொண்ட அழியாத மையினால் மு.றெமிடியஸ் சட்டத் தரணி, வெற்றிலைச்சின்னம், என்பவற்றுடன் அவரது இலக்கமான 18 அதன் பக்கத்தில் புள்ளியிடப் பட்டுக் காணப்படுகிறது.

யாழ்.பிரதான வீதி யில் மவுன் காமல் வீதிச் சந்தி, டேவிட் வீதிச் சந்தி, கோயில் வீதிச் சந்தி, பஸ்ரியன் சந்தி, சென்.ஜோன்ஸ் கல்லூரி முன்பாகவும், பாங்ஷால் வீதியிலும் இவ்வாறு சுலோகங்கள் காணப்படுகின்றன. எனினும் அவற்றை அகற்றுவதற்கு இதுவரையில் அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. (வ-51)




# கிளிநொச்சியில் 3 ஆசனங்கள் அரசுக்குக் கிடைப்பது நிச்சயம்

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கீதாஞ்சலி உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 17
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை அரசு பெறுவது சர்வ நிச்சயம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட் பாளர்களின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் அண்மையில் கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நடைபெற்றது. இந்த பிர சார நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைப் பாளர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

"போர் காரணமாக அழிவடைந்த இந்தப் பகுதிகள் யாவும் ஜனாதிபதியால் கட்டியெழுப்பப் பட்டு வருகின்றன. இந்த அரசின் கரங்களைப் பலப்படுத்திக் கொள்ள நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் மூன்று ஆசனங்களைக் கைப்பற்றி அரசுக்கு வெற்றியை பெற்றுக் கொடுப்போம்" என்றார். (எ-6)

# இந்த மண் எங்களின் சொந்த மண் அதை அரசுக்குப் புரிய வையுங்கள்

## வவுனியா மாவட்ட வேட்பாளர் ரதன் தமிழ் மக்களிடம் வேண்டுகோள்

வடக்கு-கிழக்கு இணைந்த தாயகமே தமிழ் பேசும் வரலாற்றுத் தாயகம். வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட சூழ் நிலையிலும் எமது தாயகத்தின் விடுதலைக்கான முதல்படியாக இத்தேர்தலை எதிர் கொண்டு இந்த மண் எங்களின் சொந்த மண் என்பதை சிங்கள ஆட்சியாளருக்கு புரிய வைப்போம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் வடமாகாண சபையின் வேட்பாளரும் ஆகிய எம்.எம்.ரதன் தெரி வித்தார்.

பண்டாரிக்குளத்தில் தனது தேர்தல் அலுவ லகத் திறப்பு விழாவில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கட்சிக் கொடியை வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் டேவிட்நாகநாதன் ஏற்றி வைத்தார். அலுவலகத்தை நெடுங் கேணி பிரதேச சபைத் தலைவர் பாலசுப்பிரமணியம் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட கிளைச் செயலாளர் வாமதேவன் ஆகியோர் நாடா வெட்டி திறந்து வைத்தனர். பாண்டியன் குளம் பிரதேசசபை உபதலைவர் எஸ். செந்தூரனும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ரதன் கூறிய தாவது:

இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படு கிறது. கிழக்கு மாகாணத்தை கைப்பற்றிய அரசு மூன்று மாதத்துக்குள் அங்கு தேர்தலை நடத்தியது. 2006 ஆம் ஆண்டு அது நடத்தப்பட்டது. அதன் பின்னர் வேகமாக 2012 ஆம் ஆண்டும் தேர்தல் நடத்தப்பட் டது. ஆனால் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் வடக்கு மாகாணத்துக்கு தேர்தலை நடத்தாது இவ் அரசு பல காரணங்களை முன்வைத்தது. தேர்தலை நடத்தினால் படுதோல்வியை அரசு சந்திக்கும் என்ற பயத்தாலேயே அரசு தேர்தலை நடத்தவில்லை. சர்வதேச அழுத்தத்தால் இப்போது நடத்துகிறது.

> நாம் தோற்றுப் போன இனமோ தோற் கடிக்கப்பட்ட இனமோ அல்ல என்பதை இந்தத் தேர்தலில் நிரூபிக்க வேண்டும்.

இறுதிப் போரில் எமது லட்சக்கணக்கான உறவுகள் கொல்லப்பட்டனர். பலர் அங்கவீனர்களாக்கப்பட்டனர். பலர் காணாமல் போயினர். வன்னி பெரு நிலப்பரப்பில் இருந்து இங்கு வருகை தந்த மூன்று லட்சம் மக்கள் இந்த அரசால் செட்டிகுளத்தில் முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டனர். அப்படித் தமிழினம் துன்பப்பட்டுக் கிடந்தபோதினில், போரில் தோற்ற தமிழினத்தை ஜனநாயக வழியிலும் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத் தில் யாழ்ப்பாண மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்குமான தேர்தல் 2009 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்த அரசு நடத்தியது. அடங்கிப் போய்விடுவோம் என்று அரசு எதிர்பார்த்தது.

முள்ளிவாய்க்காலில் நாம் தோற்றுப் போகவில்லை. அங்கிருந்தே எமது ஜனநாயக வழியிலான போராட்டத்தை ஆரம்பித்தோம் என்ற செய்தியினை வவுனியா நகரசபைத் தேர்தலில் மிகப்பெரும் வெற்றி ஈட்டி நிரூபித்துக் காட்டினோம். இதன் பின் தாயகத்திலே நடந்தேறிய தேர்தல்களில் நாமே வெற்றிவாகை சூடினோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தான் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நாம் சந்தித்து நிற்கின்றோம். நாம் தோற்றுப்போன இனமோ தோற்கடிக்கப்பட்ட இனமோ அல்ல என்பதை இத் தேர்தலில் நிரூபிக்க வேண்டும். எனவே தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெற்றி பெற செய்யவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

# உரிமையா, சலுகையா?

## தீர்மானிக்கக் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே

### கிளிநொச்சி வேட்பாளர் திருலோகமூர்த்தி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 17
சலுகைகளுக்காக சரணாகதி அடைவதா? உரிமைகளைப் பெற்றுக் கௌரவமாக வாழ்வதா? என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் தெளிவான பதிலை அளிப்பதற்கான சந்தர்ப்பத்தை வடமாகாண சபைத் தேர்தல் வழங்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் க.திருலோக மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி இரத்தினபுரத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் உரை யாற்றிய அவர் மேலும் தெரி வித்ததாவது:

போரினால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் வாழும் மாவட் டம் கிளிநொச்சி. இங்குள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை, இந்த மண்ணிலேயே வாழ்ந்து போரின் கொடுமைகளை அனுபவித்த ஒருவரினாலேயே நன்கு புரிந்து கொள்ள முடியும். இதனாலேயே நான் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தாமல் மேற்கொள்ளப் படும் அபிவிருத்தித் திட்டங்களால் பயன் ஏதும் இல்லை.



> முப்பது வருடப் போரினால் சேதமடைந்துள்ள பாதைகளை புனரமைப்பது பதவியிலுள்ள எல்லா அரசுகளின் பொறுப்பு, கடமை. இந்த அரசு மட்டும் அதனைச் செய்து விடவில்லை

முப்பது வருடப் போரினால் சேதமடைந்துள்ள பாதைகளை புனரமைப்பது பதவியிலுள்ள எல்லா அரசு களின் பொறுப்பு, கடமை. இந்த அரசு மட்டும் அதனைச் செய்துவிடவில்லை. உலகெங் கும் அப்படித்தான் நடக்கிறது. உடைந்து கிடந்த வீதியைப் புதுப்பிப்பது அபிவிருத்தி அல்ல. இந்த அரசு போரை நடத்தாமல் விட்டிருந்தால் அந்த வீதிகள் இதனைவிட நன்றாக இருந்திருக்கும் இன்று. எனவே இந்த வேலைகளை எல்லாம் தமிழ் மக்களுக்கான வெகுமதி என்று அரசு பரப்புரை செய்ய முடியாது.

போரின் வடுக்களிலிருந்து மக்கள் மீண்டெழுவதற்கான வழிவகைகளை அரசு செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். அதை இந்த அரசு செய்யவில்லை. தமிழ் மக்கள் தங்களைத் தாமே நிர்வகிக்கக் கூடிய வகையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும். அதையும் செய்ய மாட்டேன் என் கிறார்கள். இவையெல்லாம் தான் அபிவிருத்தி. இவற்றை எல்லாம் செய்வதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காகத் தான் கூட்டமைப்பு உங்களிடம் ஆளும் உரிமையைத்தாருங்கள் என்று கேட்கிறது. எனவே வெறும் வீதிப்புனரமைப்பா? அல்லது அபிவிருத்தியைத் தீர் மானிப்பதற்கான அதிகாரமா? வேண்டும் என்பதை இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டும்.

# கூட்டமைப்பை ஆதரித்து தமிழரின் வசந்த காலத்துக்கு வித்திடுங்கள்

## மன்னார் நகர சபைத் தவிசாளர் வலியுறுத்து

மன்னார், ஓக. 17
தமிழ் பேசும் மக்கள் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமது வாழ்க்கையின் வசந்த காலத்துக்கு வித்திடவேண்டும் என மன்னார் நகர சபைத் தவிசாளர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை யில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடமாகாண தமிழ் பேசும் மக்களுக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் பெறுமதி வாய்ந்த ஒன்றாகும். தமிழ் இனத்தின் விடுதலைக்காக 30 வருட காலமாக சாத்விக ரீதியில் தந்தை செல்வா போராட்டம் நடத்தினார். அது உரிய இலக்கை அடையவில்லை.

எனவே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அது சுமார் 30 வருடங்கள் நீடித்தது. அதுவும் முழுமையான அடைவுகளை எட்ட முன்னரே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இப்போது மீண்டும் அடுத்த கட்டப் போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் மன்னார் மாவட்ட வாக்காளர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து இந்தப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்வது மக்களது தலையாய கடமை.

சுதந்திரத்தின் பிற்பட்ட காலப்பகுதியில் பெரும்பான்மை சிங்கள சமூகம் இலங்கையின் இன்னுமொரு தேசிய இனமான சிறுபான்மைத் தமிழ் இனத்தை அடக்கியாள முற்படுகின்றது. அவர்களின் சுய கௌரவத்தைத் துவம்சம் செய்ய முற்படுகின்றது. இன்று அது விஸ்வரூபம் பெற்றுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராகப் பல வழிகளிலும் தொடுக்கப்பட்டுள்ள போரைத் தோற்கடித்து தமிழர்கள் வெற்றியடைய முழு வடபுல மக்களும் மாகாணசபைத் தேர்தலைக் கச்சிதமாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ், முஸ்லிம் இனங்களின் உறவுகளைப் பலப்படுத்தவும், மலரபோகும் மாகாண சபை அரசியல் முஸ்லிம்களுக்கும் உரிய இடத்தினை வழங்கும் வகையிலும் முஸ்லிம் வேட்பாளரொருவரையும் கூட்டமைப்பு களமிறக்கியுள்ளது. இதனைக் கருத்தில் எடுத்து முஸ்லிம் சகோதரர்களும் கூட்டமைப்பை ஆதரிக்க முன்வரவேண்டும். அதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையிலான உறவை மேலும் கட்டியெழுப்பி நல்லுறவை இறுக்கமாக்கிக் கொள்ள முடியும். மன்னார் மாவட்ட மக்கள் கபட வார்த்தைகள் மற்றும் சலுகைகளுக்கு ஏமாறாது தமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்தல் வேண்டும். யாழ்.மாவட்ட அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் நான் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன். நமது முதலமைச்சர் வேட்பாளரான சி.வி.விக்னேஸ்வரனை உங்கள் அதிகூடிய வாக்குகளைக் கொண்டு வெற்றி பெறச் செய்து அவரை முதலமைச்சர் ஆசனத்தில் அமர வைக்க வேண்டும் எனத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினத்தையொட்டி மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக.17
இவ்வருட சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினர் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே சிறுவர் சித்திரப் போட்டியை நடத்தவுள்ளனர். இதற்கான ஆக்கங்களை மாணவர்களிடமிருந்து பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

பாலர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக வெவ்வேறு தலைப்புகளில் சித்திரங்களை வரைந்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் பாலர் பிரிவுப் போட்டியில் 'சிறுவனான நானும் எனது தேசமும்' எனும் தலைப்பிலும், தரம் 6 தொடக்கம் தரம் 11 மாணவர்கள் கனிஷ்ட பிரிவில் 'நாம் காணும் நாளைய இலங்கை' என்னும் தலைப்பிலும், தரம் 12, 13 வகுப்பு மாணவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் 'சிறுவர்கள் எமது வலு நாளைய உலகின் அபிவிருத்தியில்'' என்னும் தலைப்பிலும் சித்திரங்கள் வரைந்து அனுப்ப வேண்டும்.

ஆக்கங்களை வகுப்பாசிரியர் அல்லது பாடசாலை ஆசிரியர் மற்றும் அதிபரின் பரிந்துரையுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், திணைக்களம், இல.69 எஸ்.டீ.எஸ். ஜயசிங்க மாவத்தை, கொஹுவேய நுகேகொட என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வசதிகளைக் காணாத கிராமம்

அக்கராயன், ஒக.17
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிளாலிக் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் காணப்படுகின்றனர்.

ஏ-9 சாலையிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் கிராமம் அமைந்துள்ளது. மின்சார வசதி இல்லாததால் இரவு வேளைகளில் பயணிக்கும் போது மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமத்தின் பிரதான வீதி, உள்ளக வீதிகள் என்பன புனரமைக்கப்படாத நிலையில் மோசமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. தமக்கும் அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருமாறு மீளக்குடியமர்ந்த இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

அம்பலப்பெருமாள் குளத்தின்

# புனரமைப்பு தொடர்பாக மக்கள் கடும் விசனம்

அக்கராயன், ஒக.17
துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் புனரமைப்புத் தொடர்பாகக் கிராம மக்கள் குற்றம் சாட்டியதுடன் கடும் விசனமும் வெளியிட்டுள் ளனர்.

இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இரண்டு ஆண்டுகளாக இழுபறியான நிலையில் காணப்படுவதுடன் குளத்தின் உட்பகுதியில் இருந்தே மண் பெறப்பட்டு அணைக்கட்டை உயர்த்துவதற்குப் பயன் படுத்தப்படுகிறது. வழக்கமாக பிற இடங்களி லிருந்து மண்கொண்டு வரப்பட்டு அணைக் கட்டு வேலைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கமாகும்.

ஆனால் குளத்தின் வேலையைப் பொறுப் பெடுத்த ஒப்பந்தகாரர் செலவைக் குறைப்பதற் காக இதற்கு மாறாக நடந்து கொள்வதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகளில் தமக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி தொடர்பாக இந்தப் பகுதியைச் சேர்ந்த கமக்கார அமைப்பினர் உரிய அதிகாரிகளுக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

மேலும் கோடை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புப் பணிகள் ஒப்பந்த தாரர் மழைகாலம் வரை நீடிப்பதால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# கடிதம் எழுதுவதோடு கடமை முடிந்திடாது

## மீனவர் பிரச்சினை குறித்து தி.மு.க.

சென்னை, ஒக.17
தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்பாக பிரதமருக்குக் கடிதம் எழுவதுடன் கடமை முடிந்து விட்டதாகக் கருதுகின்றார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. அந்தப் பிரச்சினை குறித்து எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளது தி.மு.க.சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நேற்று நடைபெற்ற தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**"தமிழக முதலமைச்சர் மீனவர்கள் தாக்கப்படும் போதெல்லாம் பிரதமருக்கு கடிதம் எழுதுவதோடு தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்.**

அந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை காரணமின்றிகடுமையாகத் தாக்குவதுடன், அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கை யால் தமிழக மீனவர்கள் பலரின் உயிர் பறிபோயிருப்பதுடன், பெரும் சொத்து அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக தமிழகக் கடல்எல்லைக்குள்ளேயேநுழைந்து தமிழக மீனவர்களைத் தாக்குகின்ற அராஜகமான நடவடிக்கைகளில் சிங்கள மீனவர்களும், சிங்களக் கடற் படையினரும் தீவிரம் காட்டி வருகின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தமிழக மீனவர்களுக்கு தக்க பாதுகாப்பு கோரி மத்திய அரசிடம் பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு தேவையான நடவடிக்கை களை இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

மத்திய அமைச்சர் நாராயணசாமி அண்மையில் செய்தியாளர்களிடம் கூறும்போது மீனவர் பிரச்சினைக்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு எழுதிய கடிதத்திற்கு பதிலை எதிர்பார்த்து இருப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் தமிழக முதலமைச்சர் மீனவர்கள் தாக்கப்படும் போதெல்லாம் பிரதமருக்கு கடிதம் எழுதுவதோடு தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார். இனியாவது மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து அவர்களைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கெள்ள வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# நெருக்கமான குடியிருப்புகளில் தவறணை அமைப்பதை நிறுத்துக

## கைதடி வடக்கு பிரிவு பொது அமைப்புகள் உரிய தரப்பினருக்கு மனு

தென்மராட்சி, ஒக.17
உற்பத்தியாளர்கள் இல்லாத பிரதேசத்தில் நெருக்கமான குடியிருப்பு உள்ள பகுதியில் கள்ளுத் தவறணை அமைக்கப்படுவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கைதடி வடக்கு பிரிவு பொது அமைப்புக்கள் அமைச்சர் உட்பட உரிய அதிகாரிகளுக்கு மனு அனுப்பியுள்ளார். பொதுமக்களின் குடியிருப்புகளுக்கு மத்தியில் புதிதாக கள் விற்பனை நிலையம் அமைப்பது அந்தப் பகுதி மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதுடன் வெவ்வேறு பிரச்சினைகளும் எழ வாய்ப்பு உள்ளன. அத்துடன் சமூகச் சீர்கேடு, சுகாதாரச் சீர்கேடு, தகாத சொற்பிரயோகங்கள், மதுப்பிரியர்களின் இரவு நடமாட்டங்கள் போன்ற இழிவான செயற்பாடுகள் ஏற்படலாமென கருதப்படுகின்றது.

எனவே அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி கள்ளுத் தவறணை அமைப்பதை உடனடியாக நிறுத்துமாறு 200 இற்கு மேற்பட்ட பொதுமக்கள்கையொப்பமிட்ட மனு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கதவை உடைத்து வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக.17
வீட்டுக் கதவை உடைத்து நகை, பணம், பித்தளைக் குத்துவிளக்கு திருடப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலையில் கடந்த 9 ஆம் திகதி பிற்பகல் வீட்டுக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரம், 2 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

அல்வாய் வடக்கில் பகல் வேளை கடந்த ஜூலை 31 ஆம் திகதி கோயிலிலிருந்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைக் குத்துவிளக்கு திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நவியிடம் கூட்டமைப்பு வலியுறுத்தும்

## காணாமல்போனோர் விசாரணைக் குழுவை ஏற்கமுடியாது என்கிறார் சுரேஷ்



யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழுவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் தெரிவித்துள்ளது.

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இம்மாத இறுதியில் இலங்கை வரும்போது காணாமல்போன தமிழர்கள் குறித்தும், இறுதி போரின்போது இராணுவத்தினரால் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்தும் நீதியான விசாரணை நடத்த சர்வதேச விசாரணைக் குழுவை நியமிக்குமாறு வலியுறுத்துவோம்" எனவும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

காணாமல்போனோர் தொடர்பில் உண்மைநிலைவரங்களைக் கண்டறிய ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழு தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் போரின் போது காணாமல்போனோரின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்டுத் தருமாறு அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்தனர். சர்வதேச சமூகத்திடமும் முறை யிட்டுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளில் இந்த விசாரணை தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐ.நாவில் இந்த சிபாரிசுகளை அமுல்படுத்துமாறு கோரி இரண்டு தடவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், இலங்கை அரசு எதனையும் செய்யவில்லை. தான்தோன்றித்தனமாக இருக்கிறது.

தற்போது நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை, பொதுநலவாய மாநாடு என்பவற்றை முன்னிட்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே காணாமல்போனோர் விசாரணைக்குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. சர்வதேச விசாரணைக்குழு ஊடாகவே தமிழருக்குத் தீர்வு கிடைக்கும் - என்றார்.

# வீதிக்கு வந்த பெயர்ப்பலகை விஷமிகளின் கைவரிசை




பாஷையூர் சென்.அன்ரனிஸ் வீதியின் பெயர்ப் பலகை சில விஷமிகளால் அடியோடு பெயர்க்கப்பட்டு வேறொரு வீதியில் போடப்பட் டுள்ளது. கடந்த ஒரிரு தினங்களுக்கு முன் இரவு வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அடியோடு தூக்கப்பட்ட அன்ரனிஸ் வீதிக் குறியீட்டுப் பெயர் பலகை பாஷையூர் புதுக் குடியிருப்புப் பகுதியில் உள்ள வீதியில் வைக் கப்பட்டுள்ளது. (வ-135)

# தனியார், அரசசார்பற்ற ஊழியருக்கு ஒன்றரை நாள் விடுமுறை வழங்குக

## தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.17
தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும் என்று வடமாகாண தொழில் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டியது கட்டாயம். ஒன்றரை நாள் நிறுவனங்கள் தமது நிறுவன முகாமைத்துவத்துக்கு ஏற்ப வாரத்தில் எந்த கிழமைகளிலும் தமது விருப் பத்துக்கு ஏற்ப விடுமுறைகளை வழங்கலாம். வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைதான் முழுநாள் விடுமுறையை வழங்க வேண்டிய அவசியம் இல்லை. ஊழியரின் தேவைக்கு ஏற்பவும் நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கு ஏற்பவும் விடுமுறைகளை வழங்க முடியும்.

ஆனால் வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை அவசியமானதாகும். இந்த விடுமுறை நாள்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வேலைநாள் அல்லாத மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்-என்றார். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூரில் நடந்த மருத்துவ முகாம்



இராணுவத்தின் மக்கள் நலனோம்புத்திட்ட செயற்பாட்டு அமைப்பினரின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் பாஷையூரில் நேற்று இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது. பாஷையூர் அந்தோனியார் மகளிர் பாடசாலையில் நடைபெற்ற மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் 51 ஆவது படைப்பிரிவின் தளபதி அபேநாயக்க மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டனர். கண்பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்குதல் மற்றும் வைத்திய பரிசோதனைகள், தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் தொடர்பான ஆலோசனைகள் இரத்த அழுத்தப் பரிசோதனை என்பவற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்ட பல்வேறு இடங்களைச் சேர்ந்தோரும் பாஷையூர் மக்களுமாக நூற்றுக்கணக்கானோர் இந்த மருத்துவ முகாமில் பயனடைந்தனர்.

(ஒ-135)

# காலபோக நெற்செய்கையின் அளவை அதிகரிக்க ஏற்பாடு

## அதற்கான முயற்சியில் குடாநாட்டு விவசாயத் திணைக்களம்

அச்சுவேலி, ஓக.17

யாழ்.மாவட்டத்தில் இந்தவருடம் காலபோக நெற் செய்கை அளவை அதிகரிப்பதற்கு மாவட்ட விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்த வருடத்துக்கான நெற் பயிர்ச் செய்கையின் உத்தேச இலக்கு 12 ஆயிரம் ஹெக்ரேயராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த வருடம் 11, 096 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகளுக்கான விதைநெல்லை வழங்க விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளைசெய்துள்ளது. பி.ஜி.406 நான்கு மாத சிவப்பு நாடு விதைநெல்லை விவசாயிகளுக்கு வழங்கவுள்ளது. விதைநெல்லை யாழ்.மாவட்ட விவசாயிகள் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

ஹேலீஸ் நிறுவனமும் இந்த வருடம் யாழ்.மாவட்டம் உட்பட வடபகுதியில் ஐந்து மாவட்டங்களிலும் விதை நெல்லை நியாய விலையில் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஹேலீஸ் நிறுவனம் பி.ஜி. 406, பி.ஜி. 352, பி.ஜி 358, ஏ.ரி.362, பி.ஜி 360, பி.ஜி 300, ஏ.ரி 308 ஆகிய விதை நெல்லினங்களை விவசாயிகளுக்கு வழங்கவுள்ளது.

கடந்த வருடம் நெற்பயிர்ச் செய்கையில் எதிர்பாராத வறட்சி, எதிர்பாராத மழை வெள்ளம், நோய்த் தாக்கம் போன்ற நிலைமைகளால் நெற்பயிர்ச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

அறுவடைகாலத்தில் மழைவெள்ளம் வயல்களில் தேங்கி நின்றதால் அறுவடை செய்த நெல்லை வெளியே எடுத்துச்செல்ல முடியாமலும் அறுவடை செய்ய முடியாமலும் சேதங்கள் ஏற்பட்டன. இதனால் யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்பாராத பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருந்தனர். தற்போது பெய்திருக்கும் மழை ஈரத்தை பயன்படுத்தி வயல் நிலங்களை விவ சாயிகள் பண்படுத்தி வருவதோடு தாழ் நில வயல்களில் மரபு வழி நெல்லினங்களை விதைப்புச் செய்தும் வருகின்றனர்.

(வ-11)

## தற்காலிக மண்பாதை மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஓக.17

தொண்டமானாறு நீர் ஏரியை ஊடறுத்து அமைக்கப்பட்ட தற்காலிக மண்பாதை மக்கள்பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. சபைத் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் மண்பாதையை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி குறித்த தற்காலிக மண்பாதை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

திறக்கப்பட்ட மண்பாதையின் இரு மருங்கிலும் மின் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் தற்காலிக மண்பாதை கடந்த வருடமும் அமைக்கப்பட்டது. (வ-17)



## கூ. சபையின் நூல் வெளியீடு தடைப்பட்டுப் பின் நடந்தது

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபை கடந்த புதன்கிழமை முற்பகல் நடத்த இருந்த நூல் வெளி யீட்டு விழா சிலரின் தலையீட்டால் தடைப் பட்டு சில மணிநேரத்தின் பின் நடை பெற்றது.

நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு குறித்த நேரத்துக்கு வந்திருந்த பல திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள் மணிக்கணக்கில் காத்து நின்றனர்.

வீரசிங்கம் மண்டபத்தில் புதன்கிழமை நூல் வெளியீட்டை நடத்த ஏற்கனவே திட்டமிட்டு சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்திருந்தன. சகலருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே வீரசிங்கம் மண்டபத்தில் குறித்த நேரத்தில் தாம் ஒரு நிகழ்வை நடத்த வேண்டும் என்று கூறி மண்டபத்தை ஆளுநர் பயன்படுத்திக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சில மணி நேரத்தின் பின்னர் ஆளுநரின் நிகழ்வு நிறைவடைந்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறிய பின்னரே வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு சபையினர் நூல் வெளியீட்டை நடத்தினர்.

அதுவரை திணைக்கள அதிகாரிகள் மற்றும்நூலின்பிரதிகளைப்பெறுவதற்காக உரிய நேரத்துக்கு வந்திருந்தவர் கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.


இது தொடர்பாக கூட்டுறவுச் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது: ஆளுநரின் அலுவலகத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தமக்கு குறித்த நேரத்துக்கு மண்டபம் தேவை எனத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதனால் எமது நிகாவை காலதாமதம் செய்ய வேண்டி ஏற்பட்டது எனத் தெரிவித்தனர். (ஒ-4)

# துரித கதியில் வடிகால் புனரமைப்பு

பருத்தித்துறை தொடக்கம் நெல்லியடி வரை வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. இதில் மாலுசந்தி-நெல்லியடி பகுதியில் நீர் வழிந்தோடும் வடிகால் பகுதியின் பணிகள் மிகவும் துரித கதியில் இடம்பெறுகின்றன.

குடாநாட்டில் தற்போது இரவு நேரங்களில் பெய்து வரும் மழை காரணமாக தாமதமாக நடை பெற்ற பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. (வ-422)





நல்லூர்க் கந்தனின் ஐந்தாம் நாள் வீதியுலாக் காட்சி

### ஜெயம் பெற அருள்வாய்

புவனமெல்லாம் பொலிவுற்றுப்
புனிதமாய்த் திகழ்கிறதே
அவனியிலே பவனி வரும்
அருட்குமரன் பதந்துதிக்க
கருணை கூர்ந்து கணப் பொழுது
கடைக் கண்ணாற் பார்த்தாலென்ன
கலியுகத்தினில் நாம் ஜெயம் பெறவே
காத்திடுவீர் நல்லை வேலோனே!

*த. கந்தசாமி.*

### நவின்றிடுவாய் நல்லாட்சி

நாட்டிலின்று நடப்பவை தானறியாது
நாட்டமின்றி நீயும் விலகிட முடியாது
கூட்டங்கள் போடுகின்றார்
கொத்தாகத் தாம் வெற்றி பெற
தேட்டமின்றி நாமிங்கு உன்னடியை
தேடியே வந்துள்ளோம் இன்று உன் ஞான
எழில் முகம் கண்டு பரவசப்பட
ஏற்றமுடன் நீயும் ஐவைந்து திங்கள்
மதியம் சாய் வேளையதில்
கோல மாமயிலேறி சங்கரன் மைந்தனே
வீதியுலா வந்தே
கோலாகலமாய் உன் மக்கள் வாழ்ந்திட
கோலோச்சிடுவாய்

*தெல்லியூர்த்தேவி*

### கல் மனமும் கரையும்

நல்லூருக்குப் போனால் நீ நலம் பல பெறுவாய்
நாளை உனதாக நீ கருதப்படுவாய்
அல்லும் பகலும் முருகனுக்காய் ஆக்கப்படுவாய்.
அடுத்தவர் நெஞ்சில் நீ வணங்கப்படுவாய்

சொல்லும் செயலும் ஒன்றாக உணரப்படுவாய்
சுருதியாம் ஆன்மிக ஒளியால் கவரப்படுவாய்
வெல்லும் சைவ நீதியில் வளர்க்கப்படுவாய்
வேண்டும் வரங்களால் நிறைக்கப்படுவாய்

புல்லுமனம் உடையோர் திருத்தப்படுவர்
பொழுதுபோக்காக வருவோர் கவனிக்கப்படுவர்
கல்லுமனம் உடையோர் கரைக்கப்படுவர்
கர்வமாய் வருவோர்கள் தணிக்கப்படுவர்

இல்லாத பொல்லாத நகைகளை உடம்பெல்லாம் அடுக்கி
இருக்கும் அடியார்களைக் குழப்பாதீர்கள் - அது
அதிகமாய் வேண்டாமென்று, எழில் நல்லூர் முருகன்
எளிமையாய் அடியார்களுக்கு அருள் தரும் அழகு பாரீர்


சி.ராஜா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவில் கொடியேற்ற சென்றவர்கள் கைது

சென்னை, ஓக.17
கச்சத்தீவை மீட்க வலியுறுத்தி அங்கு இந்திய தேசியக் கொடியை ஏற்றுவதற்காக சென்ற பாரத் மக்கள் கட்சியினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் அருகே ஆர்ப்பாட்டம் நடத்திய பாரத் மக்கள் கட்சியினர், பின்னர் இலங்கை கடற்படையினரின் அத்துமீறல்களை கண்டித்தும், தமிழக மீனவர்களின் நலன்களை பாதுகாக்க வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பியவாறு கச்சத்தீவு நோக்கி ஊர்வலமாக புறப்பட்டனர்.
அதையடுத்து 50க்கும் மேற்பட்டவர்களை கைது செய்த பொலிஸார் பின்னர் அவர்களை விடுவித்துள்ளனர். (ற)



நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இடம்பெற்ற இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில், உரையாற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

## சுதந்திர தின விழாவில் சண்டை

### கொடியேற்றினான் 3 வயதுச் சிறுவன்

புதுடில்லி, ஓக.17
இந்தியாவின் முசோரியில் நடந்த சுதந்திர தின விழாவில் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சியினர் இடையே யார் கொடியேற்றுவது என்பதில் எழுந்த சண்டையை அடுத்து அங்கிருந்த மூன்று வயதுச் சிறுவன் ஒருவனை வைத்துக் கொடியேற்றினர் அந்தப் பகுதி பொதுமக்கள்.
முசோரியில் உள்ள காந்தி சவாக் என்ற இடத்தில் நேற்று சுதந்திர தின விழா நடைபெற்றது. அப்போது கொடியேற்றுவது யார் என்ற பிரச்சினை இரு கட்சியினருக்கும் இடையே ஏற்பட்டது. விழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள் பிரச்சினையை அவர்களால் தீர்க்க எவ்வளவோ முயற்சித்தும் பிரச்சினை தீர்க்க முடியவில்லை.
கடைசியாக, விழாவில் விநோத உடைப் போட்டியில் கலந்து கொள்ள வந்திருந்த 3வயது சிறுவனை கொடியேற்ற வைத்து, இந்தியாவின் சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளனர் அந்தப் பகுதி மக்கள். (ற)

## எல்லை மீறிப் பேசுகிறார் குஜராத் முதலமைச்சர்

### காங்கிரஸ் கடும் கண்டனம்



புதுடில்லி, ஓக.17
பிரதமராகும் ஆசையில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி எல்லை மீறிப் பேசி வருகின்றார் என்று காங்கிரஸ் தலைவர் திக்விஜய் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இந்திய சுதந்திரன தினத்தை முன்னிட்டு புதுடில்லி செங் கோட்டையில் பிரதமர் மன் மோகன் சிங் தேசியக் கொடியேற்றி வைத்து நாட்டு மக்களுக்கு சுதந்திரதின உரையாற்றினார்.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மோடி பிரதமரின் சுதந்திரதின உரையில் பாகிஸ்தானுக்கு எதிரான கடும் நிலைப்பாடு இல்லை என்று கூறியிருந்ததுடன், நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்க தயாரா என்று மன்மோகன்சிங்குக்கு சவால் விடுத்திருந்தார்.
அதற்கு காங்கிரஸ் கடும் கண்டனம்தெரிவித்துள்ளது. அக்கட்சியின் மூத்த தலைவரான திக்விஜய் சிங், "பிரதமராகும் ஆசையில் நரேந்திர மோடி எல்லை தாண்டிப் பேசிவருகிறார். அதனாலேயே பிரதமர் மன்மோகன்சிங்கை அவர் விவாதம் நடத்த அழைத்திருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.
இதேபோல் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் கபில் சிபலும் மோடியின் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "மோடியின் ஒவ்வொரு உரையிலும் தவறான தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களே நிறைந்திருக்கின்றன" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பேச வருகின்றது சீனா

## எல்லை ஊடுருவல்கள் குறித்து




புதுடில்லி, ஓக.17
இந்திய - சீன எல்லைப் பகுதியில் இடம்பெறும் ஊடுருவல்கள் குறித்து பேச்சுகள் நடத்துவதற்கு சீன அதிகாரிகள் குழுவொன்று இந்தியா வரவுள்ளது என்று புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
சீன வெளியுறவுத்துறை துணை அமைச்சர் லியுசான் தலைமையிலான அதிகாரிகள் குழுவே புதுடில்லி வரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்திய மத்திய வெளியுறவுச் செயலாளர் சுஜாதா சிங் தலைமையில் எதிர்வரும் 20ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தப் பேச்சுக்களின்போது நதிநீர் பங்கீடு, எல்லை பிரச்சினை போன்றவை தொடர்பாகவே இந்திய தரப்பு அதிகம் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளது என்று தெரிகிறது. எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்தும் இரு தரப்பு அதிகாரிகள் பேச்சுக்களை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பிரதமர் மன்மோகன் சிங் சீனாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அவரது சுற்றுப்பயண அலுவல்கள் குறித்தும் இந்தப் பேச்சுக்களில் முடிவு செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மீனவர்கள் போராட்டம்

சென்னை, ஓக.17
கனிம மணல் கொள்ளையில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய வலியுறுத்தி நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
மணல் அள்ளப்படுவதால் இயற்கை வளம் பாதிக்கப்படுவதுடன், தங்களின் வாழ்வாதாரமும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (ற)

# இந்திய எல்லையில் தொடர்ந்தும் சூடு



பூஞ்ச், ஓக.17
ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்தியா - பாகிஸ்தான் இராணுவத்தினரிடையே துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்துள்ளது.
பூஞ்ச் பகுதியில் இந்திய நிலைகள் மீது நேற்றுக் காலை பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதில் இந்திய ராணுவத்தினர் 3 பேரும் சில பொதுமக்களும் காயமடைந்தனர்.
கடந்த ஒருவார காலத்தில் பாகிஸ்தான் மேற்கொண்ட 10ஆவது போர் நிறுத்த ஒப்பந்த மீறல் இதுவாகும். அதைத் தொடர்ந்து இந்திய தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது. அதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு பாகிஸ்தான் இராணுவம் கனரக ஆயுதங்கள் மூலமும் தாக்குதல் நடத்தியது என்றும், அதற்கு இந்தியத் தரப்பால் வலுவான பதிலடி கொடுக்கப்பட்டது என்றும் இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
இருதரப்பினரிடையேயான இந்த மோதல் விடிய விடிய நிகழ்ந்துள்ளது. அதனால் எல்லைப் பகுதியில் தொடர்ந்தும் பதற்ற நிலை காணப்படுகின்றது. (ற)

## அதிக வரதட்சணைக்காக மகனுக்கு சிகரெட்டால் சூடு

### வேலூரில் பயங்கரம்

சென்னை, ஓக.17
மனைவி யின் வீட்டிலிருந்து வரதட்சணை வாங்குவதற்காக சொந்த மகனுக்கு சூடு வைத்து சித்ரவதை செய்தார் என்று கணவன் மீது மனைவி ஒரு வர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
வேலூர் சார்பனாமேட்டை சேர்ந்தவர் நஸ்ரின். இவருக்கும் சத்துவாச்சாரியை சேர்ந்த மசூதுக்கும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 3 வயதில் ஆண் குழந்தை உள்ளது. திருமணத்தின்போது நஸ்ரினுக்கு அவரது பெற்றோர் 30 பவுன் வரதட்சணை கொடுத்துள்ளனர்.
திருமணத்திற்கு பின்னர் மசூது மனைவி நஸ்ரினிடம் உனது தாய் வீட்டில் இருந்து இரண்டு லட்சம் பணம் வாங்கி வா என்று கூறி சித்ரவதை செய்துள்ளார். அத்துடன் அவரது குழந்தையின் மார்பு, வயிறு பகுதிகளில் சிகரெட்டால் சூடு போட்டு சித்ரவதை செய்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
அதனால் அதிர்ச்சி அடைந்த நஸ்ரின் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சம்பவம் வேலூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## மின் உற்பத்திக்கு அனுமதி



சென்னை, ஓக.17
கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல் அணு உலையில், 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அணுமின் நிலைய வளாக இயக்குநர் சுந்தர் தெரிவித்துள்ளார்.
இதற்கான அனுமதியை அணு சக்தி ஒழுங்கு முறை ஆணை [illegible] இறுதிக்குள் 400 முதல் 500 மெகா வாட் வரையான மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் எனவும், டிசெம்பர் இறுதிக்குள் [illegible] மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திறன் எட்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## 'தலைவா' திரைப்படத்தை வெளியிட அனுமதியுங்கள்

### வலியுறுத்தி உண்ணாவிரதம்



சென்னை, ஓக.17
தலைவா படத்தை வெளியிட அனுமதி வேண்டி படக்குழுவினர் நடத்தவுள்ள உண்ணாவிரதத்தில் நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தை சந்தரசேகரும் கலந்து கொள்கின்றனர்.
இது வரை எவ்வளவோ முயற்சி செய்தும் தலைவா படம் வெளியாகவில்லை, நாளைக்குள் வெளியாக வேண்டும் என நடிகர் விஜய், இயக்குநர் விஜய், தயாரிப்பாளர் சந்திரப்பிரகாஷ் ஜெயின் ஆகியோர் தினசரி ஒரு பேட்டி, பத்திரிகையாளர் சந்திப்பு என்று நடத்தி வருகின்றனர்.
இது குறித்து அரசு தான் செய்ய வேண்டியது எதுவும் இல்லை என தெளிவுபடுத்திவிட்டது. பொலிஸாரோ இது தங்கள் வேலையல்ல என்றும், சினிமாத் துறையினர் முடிவு செய்ய வேண்டிய விடயம் என்றும் கூறிவிட்டனர். ஆனால் திரையரங்கு உரிமையாளர்களும், விநியோகஸ்தர்களும் எங்களுக்கு பாதுகாப்பு வழங்கினால் மட்டுமே வெளியிடுவோம் என்கிறார்கள். இவ்வாறு இழுபறியில் இருக்கிறது தலைவா திரைப் படம்.
இந்த நிலையில், தலைவா படத்தை வெளியிட முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என விஜய்யும் அவரது குழுவினரும் திரும்பத் திரும்ப கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில் தலைவா திரைப்படத்தை வெளியிடுமாறு கோரி சென்னையில் உண்ணாவிரதம் நடத்தப்படவுள்ளது. அதில் படத்தின் நாயகன் விஜய், எஸ்ஏ சந்திரசேகர் மற்றும் விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## எகிப்து தாக்குதலுக்கு ஒபாமா கண்டனம்



நியூயோர்க், ஓக.17
எகிப்தில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை கடுமையாகக் கண்டித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, எகிப்துடன் நடத்தப்படவிருந்த கூட்டு இராணுவப் பயிற்சியையும் இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பராக் ஒபாமா, "இடைக்கால அரசின் ஆதரவு பெற்ற இராணுவம், முன்னாள் ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்கள் மீது எடுத்த நடவடிக்கை ஏற்கத்தக்கதல்ல. அபாயகரமான வழியில் எகிப்து நுழைந்துள்ளது. எகிப்தில் அதிகரித்து வரும் வன்முறையை கண்டிக்கும் வகையில், அடுத்த மாதம் நடத்தப்படவிருந்த கூட்டு இராணுவப் பயிற்சி இரத்துச் செய்யப்படுகிறது. எகிப்துடன் உறவைத் தொடரவே அமெரிக்கா விரும்புகிறது. எனினும் பாரம் பரியமாக இருந்து வரும் ஒத்துழைப்பு, வழக்கம் போல் நீடிக்க வாய்ப்பு இல்லை" என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, எகிப்து இராணுவத்துக்கு அளிக்கப்பட்டு வரும் 130 கோடி டொலர் மதிப்பிலான வருடாந்த இராணுவ நிதி உதவி நிறுத்தப்படுமா என்பது குறித்து ஒபாமா கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (ற)

# அடக்குமுறைக்கு அடிபணியோம்

## போராட்டம் தொடரும் என்கின்றனர் முர்சி ஆதரவாளர்கள்



கெய்ரோ, ஓக.17
அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டாலும், அரசுக்கெதிரான போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர் எகிப்தில் அரசுக்கெதிரான போராட்டங்களில் ஈடுபடும் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சியின் ஆதரவாளர்கள்.
எகிப்தில் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சியின் ஆதரவாளர்கள் மீது அந்தநாட்டுப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 623 பேர் உயிரிழந்தனர். இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர்.
இந்தநிலையில் போராட்டங்களை முன்னெடுத்துவரும் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியின் செய்தித்தொடர்பாளர் கெஹாத் எல் ஹதாத் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "எம்மில் எத்தனை பேரைக் கொன்றாலும் போராட்டம் தொடரும். அரசின் அடக்குமுறையை உடைத்து, முர்சியைப் பதவியில் அமர்த்தும் வரை பேராடுவோம்" என்று தெரிவித்துள்ளார்.
ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து எகிப்தின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன. அவற்றை அடக்கும் முயற்சியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இறங்கியுள்ளனர். நாடு முழுவதும் கொந்தளிப்பான சூழ்நிலை நிலவுவதால் ஒருமாத காலத்துக்கு அவசரகால நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற)

**ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து எகிப்தின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன.**

## மன்னிப்பு கோரினார் மெனிங்

நியூயோர்க், ஓக.17
அமெரிக்காவுக்கு எதிராக இழைத்த குற்றங்களுக்காக அந்த நாட்டு இராணுவ வீரர் பிரெட்லி மெனிங் மன்னிப்புக் கோரியுள்ளார்.
அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் பல்வேறு இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஊடாக வெளியிட்ட குற்றச்சாட்டில் பிரெட்லி மெனிங் 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இவர் மீது 22 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இவர் மீதான வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.
விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே மெனிங் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். அவர் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படும் பட்சத்தில் பிரெட்லி மெனிங்கிற்கு 90 வருட சிறைத் தண்டனை விதிக்கப் படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## ஈராக்கில் குண்டு வெடிப்பு: 33 பேர் சாவு

பாக்தாத், ஓக.17
ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொடர் கார்க் குண்டுத் தாக்குதல்களில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
ஏராளமானோர் காயமடைந்துள்ளதால் அவர்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்குவதில் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# தாக்குதல் நடக்கலாம் 'உஷார்'

## இந்தியாவை எச்சரிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க், ஓக.17
இந்தியக் கடலோர நகரங்கள் மீது லஷ்கர் ஈ தொய்பா அமைப்பு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது.
இதுகுறித்து அமெரிக்க உளவுத்துறை விடுத்துள்ள தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
"இந்தியக் கடலோர நகரங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு லஷ்கர் ஈ தொய்பா அமைப்பு திட்டமிட்டுள்ளது. அதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தற்போதே இந்திய அரசு உடனடியாக மேற்கொள்வது, தாக்குதல் முயற்சிகளை முறியடிப்பதற்குப் பெரிதும் உதவியாக அமையும்.
மும்பையில் தாக்குதல் நடத்திய லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் கடற்படை பிரிவு தலைவரான யூசுப் என்பவரால் இந்தத் தாக்குதல் திட்டம் வடி வமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்படுகின்றது.
மும்பையில் கடல்வழியாக ஊடுருவி, தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு இரு நாள்களுக்குமுன்னரும்இதுபோன்ற எச்சரிக்கையை அமெரிக்க உளவுத்துறை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
அதேவேளை, அந்தமான் - நிக்கோபார் தீவுகளின் மீதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் அமெரிக்க உளவுத்துறை அமைப்பு தெரிவித்துள்ளது. (ற)

## குரைத்த சிங்கத்தால் வெளுத்தது 'சாயம்'



பீஜிங், ஓக.17
மிருகக்காட்சிச் சாலையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆபிரிக்க சிங்கமொன்று திடீரெனத் குரைத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நாயைக் காட்டி சிங்கம் என்று ஏமாற்றி வந்த மிருகக்காட்சிச்சாலை நிர்வாகத்தின் சாயமும் வெளுத்தது.
சீனாவில் மிருகக் காட்சிச் சாலையொன்றில் ஆபிரிக்க சிங்கமொன்று அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்வையிடுவதற்கு பெரும் எண்ணிக்கையானோர் தினமும் திரண்டனர். மிருகக் காட்சிச்சாலை நிர்வாகத்துக்கும் பணம் நன்றாக புரண்டது.
இந்தநிலையில் கடந்தவாரம் அந்தச் சிங்கம் பார்வையாளர்களை நோக்கித் திடீரெனக் குரைக்கத் தொடங்கியது. அதைப் பார்த்த பார்வையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். அப்போதுதான் மிருகக் காட்சிச் சாலை நிர்வாகிகள் நாயைக் காட்டித் தங்களை ஏமாற்றி வந்தமை அவர்களுக்குப் புரிந்தது. சிங்கத்துக்குப் பதிலாக திபெத்தில் உள்ள மஸ்டிப் வகை நாயை அடைத்து வைத்திருத்துள்ளனர் மிருகக்காட்சிச்சாலை நிர்வாகத்தினர்.
இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மிருகக்காட்சிச் சாலை அதிகாரிகள்,
" உடல் முழுவதும் ரோமம் வளரும் திபெத்திய மாஸ்டிப் நாய் தூரத்தில் இருந்து பார்க்கும்போது சிங்கத்தைப் போலத் தோன்றும். இனப்பெருக்கத்துக்காக ஆண் சிங்கம் வேறு ஓர் இடத்துக்கு அனுப்பப்பட்டதால், அந்த கூண்டில் ஊழியர் ஒருவர் தான் வளர்த்த நாயை அடைத்து வைத்துவிட்டார்" என்று கூறிச் சமாளித்துள்ளது. (ற)



நியூஸிலாந்தின் தலைநகர் வெலிங்டனில் நேற்றுக்காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் 6.8 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் நிலத்தின் கீழ் 10 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து எந்த விதத் தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை. (ற)

## சீனாவில் அதிகரிக்கும் நிர்வாண திருமணங்கள்

பீஜிங், ஓக.17
சீனாவில் நிர்வாண திருமணம் எனப்படும் புதிய வகை திருமண முறை இளைஞர்களிடையே மிக வேகமாகப் பரவி வருகிறது.
உலகம் முழுவதும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினம் கொண்டாடப்படுகின்றது. எனினும் சீனாவில் அந்நாட்டு பாரம்பரியத்தின்படி ஓகஸ்ட் 13ஆம் திகதியே காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் அதிகளவான காதலர்கள் காதலர் தினத்தை கொண்டாடி மகிழ்ந்தனர்.
அதனை முன்னிட்டு இக்கால இளைஞர்கள் எவ்வகை திருமணங்களை விரும்புகின்றனர் என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.
இளைஞர்களில் பெரும்பாலானோர், பாரம்பரிய முறைப்படியான திருமணங்களை விரும்பவில்லை. நிர்வாணத் திருமணம் என்று கூறப்படும் வரதட்சணை வாங்காமல், எளிமையான முறையில் திருமணம் செய்து கொள்வதையே விரும்புகின்றனர்.
கடந்த சில ஆண்டுகளாக சீன இளைஞர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ள இவ்வகை திருமண முறை நாடு முழுவதும் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது.
இந்நிலையில் ஆய்வில் பங்கேற்ற 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் நிர்வாணத் திருமணத்தை ஆதரித்துள்ளனர் என்று ஆய்வை மேற்கொண்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியப் பேரவையால் விருதுக்கு தெரிவான நூல்கள்

இலங்கை இலக்கியப் பேரவையால். 2012 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் விருதுக்கும், சான்றிதழுக்கும் தெரிவு செய்யப்பட்ட சிறப்பு நூல்கள்- அதன் ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

அதன் அடிப்படையில் விருது பெறும் நூல்களும் அதன் ஆசிரியர்களின் விவரங்களும் வருமாறு:-

**விருது பெறுபவை**

ஆய்வு- 'பருத்தித்துறையூராம்' பா.இரகுவரன்-தும்பளை. நாவல்- 'உப்புக்காற்று' கலையார்வன்- யாழ்ப்பாணம். சிறுகதை- 'தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்' தெணியான்-வல்வெட்டித்துறை. காவியம்-தரமான நூல்கள் கிடைக்கப்பெறவில்லை. கவிதை 'குறியிடல்' தில்லைநாதன் பவித்திரன்- திருகோணமலை. சிறுவர் இலக்கியம்- 'செல்லமே'. எம்.ரீ. சஜாத்-கிண்ணியா. பல்துறை -'பொருள் வெளி'. லறீனா அப்துல் ஹக்-பூவெலி கொட. அறிவியல்- 'ஓர் ஈர நெஞ் சனின் உளவியல் உலா'. புண்ணியா மீன்-கண்டி. சமயம்-'யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள்'. மு.சிவலிங்கம்-இணுவில். நாடகம் -'முத் துக்குமாரன் நாடகங்கள்'. எஸ். முத்துக்குமாரன்- மட்டக்களப்பு.மொழி பெயர்ப்பு -'சுடுமணல்'. திக்கு வல்லை கமால்.

**சான்றிதழ் பெறுபவை**

ஆய்வு-1 'அல்குர் ஆன் ஓர் ஆய்வு கூடம்' மௌலவி காத் தான்குடி பௌஸ்'.II ஆவது 'சம் பூர்' கோ.திரவியராசா மூதூர்.

நாவல்- 'மாமன்னன் சங்கிலியன்' செங்கை ஆழியான்-யாழ்ப்பாணம். மொழி பெயர்ப்பு- 'எங்கள் கிராமம்' இரா.சடகோபன்-கொழும்பு. கவிதை-I 'நீயுருட்டும் சொற்கள்'. ந.மயூரரூபன்-வல்வெட்டி. II 'பாயிஸா அலி கவிதைகள்' எஸ்.பாயிஸா அலி-கிண்ணியா. சிறுகதை-I 'நிமிர்வு' அனாதரட்சகன்- நல்லூர். II 'முடிவில் தொடங்கும் கதைகள்' கெக்கிராவசஹானா. அறிவியல்- I 'காசநோய்' டாக்டர் சியமுனாநந்தா-யாழ்ப்பாணம். 11 'மனிதவள முகாமைத்துவம்' ந.கெங்காதரன்- யாழ்ப்பாணம். பல்துறை- 'பூத்திடும் பனந்தோப்பு' வே. தபேந்திரன்-கைதடி. II 'பகிர்வு' சமரபாகு சீனா உதயகுமார். சமயம்-I 'பெரிய புராண வசனத்தில் சைவ சித்தாந்தம்' கு.றஜீபன்-ஏழாலை. II 'சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்' கு. சோமசுந்தரம்-கொழும்பு. (ந)

# அகற்றப்படுமா மின்கம்பம்



நவாலி சின்னப்பா வீதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் வீதி அகலிப்பு செய்யப்பட்டு தார் வீதியாக்கப்பட்டு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது.

இந்த நிலையில் அங்குள்ள மின் கம்பங்கள் வீதியின் நடுவில் நிற்பதால் அந்த வீதியில் செல்லும் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச் செல்ல முடியாமல் சிரமத்துடனேயே பயணத்தை மேற்கொண்டு தொடர வேண்டியுள்ளது.

இவற்றை அகற்றி வீதியோரம் நடுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் பல தடவை கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை நேரில் பார்வையிட்டு ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோருகின்றனர். (ந-100)

# எஸ்.எஸ்.பி பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஒக.17

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடந்த வாரம் நியமிக்கப்பட்ட எல்.எஸ். பத்திநாயக்க தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய எம்.எம். ஏக்கநாயக்க வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே பத்தி நாயக்க நியமிக்கப்பட்டார். (ஒ-4)

# உயர்கல்வி மாணவர்களுக்கு ஆங்கிலம் செறிவூட்டல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ். அமெரிக்க தகவல் கூடத்தால் உயர்கல்வி மாண வர்களுக்கான ஆங்கிலம் புலமைப்பரிசில் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

நான்கு மாதங்கள் கொண்ட இந்தப் பயிற்சிநெறியில் உயர்தரப் பரீட்சை மாணவர்கள் பங்குபெறலாம். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இல.159, 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் கூடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இந்தப் பயிற்சிநெறி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி அமெரிக்க தகவல் கூடத்தில் இடம் பெறவுள்ள தேர்வுப் பரீட்சை மூலமாகவே அனுமதிகள் வழங்கப்படும். இவ்வாறு அமெரிக்க தகவல் கூடம் அறிவித்துள்ளது. (ஒ-14)

# 'ஆழ்கடல் வென்றவர்கள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.17

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் 'ஆழ்கடல் வென்றவர்கள்' என்ற நூலின் மீள் பதிப்பு வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வல்வெட்டித்துறைச் சந்தி பழைய நகராட்சி மன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைச் சிகரம் ஆ.அதிரூபசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி. செ.செல்வகுணா. வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். சிதம்பரக் கல்லூரி அதிபர் கே.இராசதுரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து நூலை மன்றத்தின் வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கத்தினர் வெளியிட்டு வைப்பர். (ந-14)

# சந்நிதியில் தவறிய பணம் யாருடையது?

வடமராட்சி, ஒக.17

திருவிழா நடைபெற்றுவரும் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடலில் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இப்பணம் சந்நிதி கோயிலில் இயங்கிவரும் பருத்தித்துறை பிரதேச செயலக தற்காலிக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து இழந்த பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# வருடாந்த பொதுக்கூட்டம்

சுழிபுரம், ஒக.17

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் ச.கனகராசன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப் பட்ட பின்னர் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறும். (ந-28)

# வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு செவ்வாயன்று கொடி

யாழ்ப்பாணம், ஒக.17

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பாகி தொடர்ந்து 12 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர் வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும் சப்பரத் திருவிழாவும் இடம்பெற்று இரவு 12 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் தினமும்காலை9மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு பகல் பூசைகள் இடம் பெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி இரவு 8 மணிக்குமாலை [illegible] (ந-14)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிப்புனரமைப்பு பூர்த்தியானால்

# குரும்பசிட்டி வரை தனியார் பஸ் சேவை


யாழ்ப்பாணம், ஓக.17
வீதிப் புனரமைப்புப் பணிகள் சீர்செய்யப்பட்டால் உடனடியாக குரும்பசிட்டி வரை பஸ் சேவையை வழங்க தனியார் பஸ்கள் தயாராகவுள்ளன என்று குப்பிளான் தனியார் பஸ் சங்கத் தலைவர் எஸ்.இன்பம் தெரிவித்தார்.

மீள்குடியமர்வு செய்யப்பட்டு 2 வருடங்கள் கடந்த நிலையிலும் குரும்பசிட்டிப் பிரதேசத்துக்கு இதுவரை தனியார் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்கள் பஸ் சேவையைப் பெற முடியாமல் 2 கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்து குப்பிளானில் இருந்து பஸ் சேவையைப் பெற வேண்டியுள்ளது.

இந்த நிலையில் பொதுமக்களால் பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு அமைவாக தனியார் பஸ் சங்கம் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

குப்பிளானில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் உள்ள குரும்பசிட்டி வரையான வீதி மிகச் சேதமடைந்துள்ளதால் குப்பிளான் பஸ் சேவையை குரும்பசிட்டி வரை நீடிக்க முடியாத நிலை உள்ளது.

பொதுமக்களுக்கான குறித்த பஸ் சேவையை நடத்துவதற்கு வீதிப் புனரமைப்பைத் துரிதப்படுத்தினால் அடுத்த வாரமே பஸ் சேவையை நடத்த தயாராகவுள்ளோம்-என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-14-86)



நெடுங்காலமாக புனரமைக்கப்படாது இருந்த யாழ்.பண்ணை- ஊர்காவற்றுறை வீதியின் ஆரம்ப புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-21)

# போக்குவரத்துக்கு நீர் குழாய் இடையூறு



குருநகர், ஓக.17
கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டுநடைபாதைக்கும் கிரவல் போடும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

ஆனால் இந்த வீதியின் கரையோரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தண்ணீர் குழாய் ஒன்று போக்குவரத்துக்கு இடையூறான நிலையில் உள்ளது.

இதனால் இந்த வீதியூடாக இரவில் பயணிப்போர் போக்குவரத்துக் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். (வ-51)

# பயணிகள் படகில் அதிகளவு எடை ஏற்றிச்செல்லத் தடை

## அனலைதீவுக்கான பயணத்தின்போது



யாழ்ப்பாணம், ஓக.17
அனலைதீவு பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாகவே அனலைதீவுக்கான பயணிகள் படகில் அதிகமான பொருள்களை பயணிகளுடன் ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்தார்.

அனலைதீவு படகுச் சேவையில் பொருள்களை ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் கஷ்டங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து இது தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச செயலரிடம் கேட்டபோது:

பயணிகள் படகில் பயணிகளுடன் சிமெந்துப் பைகள், அரிசி மூடைகள், எண்ணெய் பரல்கள் போன்றனவும் பெருமளவு பொருள்களும் எடுத்துச் செல்லப்படுவதாகவும் அதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே மிகக் கூடுதலான பாரமான பொருள்களை பயணிகளுடன் எடுத்துச் செல்வதற்குத் தடை செய்யுமாறும் கோரப்பட்டது.


நாற்பது பயணிகள் மட்டுமே செல்லக் கூடிய படகில் பயணிகளுடன் இவ்வாறு பொருள்களையும் எடுத்துச் செல்வது கஷ்டமானது என்பதுடன் பயண நேரமும் அதிகரிக்க நேர்கிறது.

வாரத்தில் ஒருநாள் பொருள்களை ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வியாபாரிகள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கென பொருள்களைக் கொண்டு செல்வோர் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நண்பகல் 12 மணிக்குப் புறப்படும் படகில் பயணிகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் அந்தச் சேவையில் அதிகமான பொருள்களை எடுத் துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தம்முடன் கொண்டு செல்லும் குறிப்பிட்டளவு பொருள்களுக்குத் தடை இல்லை. கடல் பயணத்தில் மக்களுடைய சிரமங்கள் தவிர்க்கப்படுவதுடன் பாதுகாப்பும் முக்கியமானது. இவ்வாறு பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-7)

# அனுமதி வழங்கப்பட்டும் மாணவருக்கு பால் இல்லை

## பெற்றோர் கவலை



அச்சுவேலி, ஓக.17
யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் மாணவர்களுக்குத் தேவையான அளவு பாலைப் பெற்றுக் கொள்ள முடியாததால் பல பாடசாலைகளில் பால் வழங்கப்படுவதில்லை எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு தூய பசுப்பால் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் தோறும் பால் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு மாணவருக்கு 150 மில்லிலீற்றர் பால் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை நடைபெறும் தினங்களில் இரண்டாம் தவணையில் குறிப்பிடத்தக்களவு பால் வழங்கப்படவில்லை. மாணவர் தொகை குறைவான ஆரம்பப் பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்கள் பாலைக் கொள்வனவு செய்து வழங்கி னர். அதுவும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பால் விற்பனை நிலையங் களில் லீற்றர் ஒன்றுக்கு 60 ரூபா செலுத்தியே பால் கொள்வனவு செய்யப்பட்டது.


நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயிலும் கனிஷ்ட இடைநிலை பாடசாலைகள் மற்றும் பெரிய பாடசாலைகளில் கல்வி பயி லும் மாணவர்களுக்கு பால் வழங்கப்படவில்லை.

பாடசாலை மாணவர் எண்ணிக்கை அளவுக்கு ஏற்ற அளவு பாலை என்ன விலை கொடுத்தும் யாழ்.மாவட்டத்தில் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதால் பசுப்பால் வழங்கும் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அதிபர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை நடைபெறும் தினத்தில் மட்டும் பாடசாலை களுக்கு பால் வழங்கும்போது ஏனைய தினங்களிலும் தவணை விடுமுறை காலத்திலும் பாலை யாருக்கு விற்பனை செய்வது என்ற குழப்ப நிலையில் பண்ணையாளர்கள் பாடசாலைகளுக்கு பால் வழங்குவதற்குப் பின்னடித்து வருகின்றனர்.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பசுப்பால் வழங்கல் செயற்பாடு கைக்கு எட்டியது வாய்க்கு கிட்டாத நிலையில் போய்விட்டதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11)

# ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பயனடைந்த நடமாடும் சேவை



நவாலி, ஓக.17
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய அடையாள அட்டை வழங்குவது குறித்த நடமாடும் சேவையின் முதல் நாளில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் செயலக உத்தியோகத்தர்கள் பட்டதாரி பயிலுநர்கள் மானிப்பாய், இளவாலை பொலிஸார் சமாதான நீதிபதி வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் ஆனந்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புதிதாக அடையாள அட்டை தொலைந்த, சேதமடைந்த, பெயர் மாற்றம் தொடர்பான பணிகள், திருமணப் பதிவு, பிறப்பு-இறப்பு பதிவு போன்ற பணிகளும் இடம்பெற்றன.

தெளிவற்ற அடையாள அட்டைக்கான முறைப்பாடுகள் பொலிஸாரால் ஏற்றுக்கொள் ளப்பட்டு உடனுக்குடன் அதன் பிரதிகள் வழங்கப்பட்டன. (வ-100)

# வழிகாட்டல் தொழிற்சந்தை பளையில் 24 இல்

பளை, ஓக.17
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வேலை வாய்ப் புக்களை எதிர்பார்க்கும் இளைஞர், யுவதிகளுக் கான வழிகாட்டல் தொழிற்சந்தை எதிர்வரும் 24 ஆம் திகதி பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்திய சீலனின் வழிகாட் டலில் உற்பத்தித் திறன் மேம் பாட்டு அமைச்சின் கீழ் உள்ள மனிதவள வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத் துக்கு அமைய பளை பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி அலுவலரினால் இதற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

தொழிற்சந்தையில் தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தகைமை, திறமை அடிப்ப டையிலான வேலைவாய்ப்புக்களை தேடிக் கொள்வது தொடர்பாக கருத்துரைகள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளச்சாராய நிலையம் முற்றுகை

## வெலிமலுவவில் மூவர் கைது

கம்பஹா. ஓக.17
கம்பஹா பொலிஸ் பிரிவில் பெம்மல - வெலிமலுவ பகுதியில் இரகசியமாக இயங்கி வந்த சட்டவிரோத மதுபான தயாரிப்பு இடம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.
பாணந்துறை வலான மத்திய குற்றத் தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் அதிகாலை 2.40 அளவில் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் மது தயாரிப்பில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த இடத்தில் இருந்து 158 சட்டவிரோத மது போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.
அத்துடன் மது தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் அதனை ஏற்றிச்செல்ல பயன்படுத்தப்பட்ட ஓட்டோ என்பவையும் மீட்கப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் சபுகஸ்கந்த, கலஹெமட்டிஹேன மற்றும் யக்கல பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.
அவர்கள் நேரங்களை மாற்றி மாற்றி மிகவும் சூட்சமமான முறையில் மதுபானம் தயாரித்து வந்துள்ளதாக பாணந்துறை வலான மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் களிடம் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)




மட்டக்களப்பு புளியந்தீவு தூய மரியாள் பேராலய திருவிழா இறுதி நாள் கூட்டுத்திருப்பலி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதனை முன்னிட்டு திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் திருவிழாக் கூட்டுத்திருப்பலியை நடத்த வருகைதந்த மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையை அருட்தந்தையர்கள் சகிதம் ஆயர் இல்லத்திலிருந்து பங்கு மக்கள் வரவேற்று பவனியாக அழைத்து வருவதையும் காணலாம். (வ)

# அம்பாந்தோட்டை உப்பளம் உற்பத்தியில் சாதனை



கொழும்பு.ஓக.17
இந்த ஆண்டு அம்பாந்தோட்டை உப்பளத்திலிருந்து சாதனை படைக்கத்தக்க உற்பத்தி கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.
அதற்கமைய இந்த ஆண்டில் 80,000 மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்று அரசு தெரிவிக்கிறது. உற்பத்தி உயர்வடைந்து சென்றுள்ளதால் தற்போது உப்பளச் செயற்பாடுகளுக்கு மேலதிக ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ச-22)

# எரிபொருள்களில் கலப்படம் திருமலை நிலையத்துக்கு சீல்

திருகோணமலை, ஓக.17
திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான உவர் மலை கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.
குறித்த நிலையைப் பொறுப்பதிகாரியால் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் ஆகியன கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்ததைத் தொடர்ந்து கடந்த 13 ஆம் திகதி சீல் வைக்கப்பட்டுள்ளது.
கலப்படம் செய்து விற்கப்பட்ட எரிபொருள்களால் வாகனங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து கிழக்கு மாகாண எரிபொருள் பிராந்திய முகாமையாளரால் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையம் சீல் வைக்கப்பட்டது.
திருகோணமலை மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான ஒரே எரிபொருள் நிரப்பு நிலையமாக செயற்பட்டு வந்த குறித்த நிலையத்தில் பொறுப்பில் இருந்தவர்கள் செய்த மோசடியால் இதனை நம்பியுள்ள பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் எரிபொருள் தேவையும் பொது மக்களின் எரிபொருள் நுகர்வும் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளன. (வ-40)



# 15 ஆடுகளுடன் மூவர் கைது

ஹற்றன், ஓக.17
ஹற்றன் செனன் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி, வாகனமொன்றில் ஆடுகளை ஏற்றிச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு தலவாக்கலையிலிருந்து கொழும்புக்கு இறைச்சிக்காக ஆடுகளைக் கொண்டு சென்றபோதே இவர்கள் கைதாகியுள்ளனர்.
மேலும் சந்தேகநபர்கள் வசமிருந்து 15 ஆடுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் மூவரும் கொழும்பு தெமட்டகொடையைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (வ)



# அருகி வருகின்றது புகையிலைச் செய்கை

## மட்டக்களப்பு விவசாயிகள் கவலை

மட்டக்களப்பு.ஓக.17
மட்டக்களப்பு மாவட்டத்தில் புகையிலைச் செய்கை முற்றாக அருகி வருகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
மட்டக்களப்பு.பொலநறுவை மாவட்டத்தின் பிரதேசங்களில் முன்னர் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.
கடந்த காலப் போரால் செய்கை பண்ணாப்படாது போன புகையிலைச் செய்கை தற்போது முற்றாக அருகி வருகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போது நாட்டில் புகையிலை உற்பத்தி மட்டுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.
தேவைக்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்துக்கும் செய்கை பண்ணுவதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் இரா. ஹரிகரன் தெரிவித்தார். (ச)



# மதப் பயங்கரவாதத்தை அரசு கண்டும் காணாமலிருக்கிறது

## இது ஏன் என காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கேள்வி

அம்பாறை, ஓக.17
பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்துவிட்டதாகக் கூறும் அரசு, நாட்டில் தாண்டவமாடும் மதப் பயங்கரவாதத்தைக் கண்டும் காணாதிருப்பது ஏன்?
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் செறிந்து வாழும் முஸ்லிம் மக்கள் தமது ஐந்து வேளைத் தொழுகைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கென பள்ளிவாசல் ஒன்றை விஸ்தரிக்கவோ அல்லது புதிய பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கோ உரிமையுடையவர்கள்.
ஆனால் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனமும் கீழ்த்தர, மனிதாபிமானமற்ற செயற்பாடும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.
இந்த ஈனச் செயலை, பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிஸார் பார்த்து நிற்கத்தக்கதாக மேற்கொள்ளப்பட்டமை கவலையளிப்பதாக அமைந்துள்ளது.
நாட்டின் இன்றைய நிலை சிறுபான்மை மக்களை அச்சத்துடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது.
குறிப்பாக நாட்டின் சிறுபான்மை இனங்களுள் ஒன்றான முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மதப் பயங்கரவாதம் கோரத் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# போஷாக்கு உணவு தொடர்பான விழிப்புணர்வூட்டும் பேரணி

மட்டக்களப்பு, ஓக. 17
போஷாக்கு மாதத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த போஷாக்கு உணவு தொடர்பான விழிப்புணர்வூட்டும் ஊர் வலம் நேற்றுமுன் தினம் வியா ழக்கிழமை இடம்பெற்றது.
கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் தியாவட்டுவான் அறபா வித்தியாலயத்துக்கு முன்பாக இருந்து ஆரம்பமான பேரணி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் வரை சென்றது. பேரணியில் கலந்து கொண்டோர் 'பால் ஒரு நிறை உணவு', 'தினமும் அருந்தினால், ஆரோக்கியம் பெறலாம்', 'வாழ்க்கையைப் பேணுவோம் சூழலைப் பாதுகாப்போம்', 'சமபோஷாக்கான உணவும் உடற் பயிற்சியும்', 'உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவோம்' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திச் சென்றனர்.
கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரீக் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வு பேரணியில் மீள்குடி யோற்றப் பிரதேச பாடசாலைகளான பாலைநகர் ஹிஸ் புல்லாஹ் வித்தியாலயம், தியாவட்டுவான் அறபா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை வாகனங்களுக்கு இனி 'ஸ்டிக்கர்'

பாடசாலை மாணவர்களுக்கான வாகனங்களுக்கு மஞ்சள் நிறம் பூசும் நடவடிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.
இதனை அகில இலங்கை பாடசாலை மாணவ போக்குவரத்து சங்கத் தலைவர் மல்ஸ்ரீ த சில்வா தெரிவித்துள்ளார்.
இதற்காக ஸ்டிக்கர் ஒன்று வழங்கப்படவுள்ளது. மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருடனான கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## லொறி மோதி பிக்கு சாவு

மிஹிந்தலை றம்பேவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பிக்கு ஒருவர் உயிரிழந்தார். பாதையோரமாகச் சென்ற பிக்குவே லொறியினால் மோதப்பட்டு உயிரிழந்தார்.
லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (எ)

# இந்திய வம்சாவளி மக்களுக்கும் இந்திய அரசின் உதவி வேண்டும்

## பிரபா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு.ஓக.17
இந்திய அரசின் உதவிகள் மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியாவின் சகல பாகங்களிலிருந்தும் வந்திருந்த சுமார் 30 பேர் அடங்கிய முன்னணி ஊடகவியலாளர்கள் என்னிடம் அமைச்சர் பஸில் ராஜ பக்ஷவை சந்திக்க ஒழுங்கு செய்து தருமாறு கேட்டிருந்த தன் பிரகாரம், அமைச்சருடனான சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன்.
இந்தச் சந்திப்பில் இலங்கையின் உல்லாசத்துறையின்



வளர்ச்சிக்கு இந்திய உல்லாசப் பயணிகளின் பங்கு மகத்தானது என்று அமைச்சர் தெரிவித்திருந்தார்.
எமது நாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு இந்திய அரசின் உதவிகள் போதுமானதாக இல்லை என்றும் கூறினார். எனவே இந்திய அரசின் உதவிகள் மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.
வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் நிலங்கள் மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
இலங்கையில் 15 லட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்ற உண்மை தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுக்கு தெரிவதில்லை. எனவே குடிசைகளுக்குள் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பெருந்தோட்ட மலையக இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கையில் இந்திய அரசு மூலம் ஒளி ஏற்படுத்தப்பட வேண்டும்- என்றார். (ச)

## மதங்கள் இழிவுபடுத்தப்படுவதை தடுப்பதற்கு புதிய சட்டம் விரைவில்

கொழும்பு.ஓக.17
மதங்கள் இழிவுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்கு பௌத்த சாசன அமைச்சு புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்யவுள்ளது.
அச்சு ஊடகங்களிலும் இணையத்தின் வழியாகவும் மதங்களின் கற்பிதங்களுக்கு புறம்பான வகையிலோ அல்லது மதக் கொள்கைகள் கோட்பாடுகளை இழிவுபடுத்தும் வகையிலோ தகவல்களை வெளியிட தடை விதிக்கப்படவுள்ளது.
முதல் கட்டமாக பௌத்த மதத்தை இழிவுபடுத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் வரைவுச் சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்தையோ அதன் கொள்கை கோட்பாடுகளையோ இழிவு படுத்தக் கூடிய அச்சு மற்றும் இணைப் பிரசுரங்களை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
அமைச்சின் செயலாளர், பௌத்த சாசன ஆணையாளர் மற்றும் நான்கு பீடங்களின் பீடாதிபதிகளினால் பரிந்துரை செய்யப்படும் நபர்களினால் இந்த சட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**" முதல் கட்டமாக பௌத்த மதத்தை இழிவுபடுத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய வகை யில் வரைவுச் சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.**

உத்தேச வரைவுச் சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி கிடைத்தவுடன் நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்படும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (எ)

# மாளிகாவத்தை பகுதிக்கு 12 மணிநேர நீர்வெட்டு

கொழும்பு. ஓக.17
கொழும்பு பகுதியில் நீர்க் குழாய் பொருத்தல் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று 17ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8.00 மணி முதல் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணி வரையிலான 12 மணி நேர நீர்வெட்டு கொழும்பின் சில பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.



மாளிகாவத்தை வீதி, மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை பிளேஸ், பஞ்சிகாவத்தை வீதியில் எல்பின்ஸ்டன் சந்தி முதல் ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தை, சேதவன சந்தி வரையிலான பகுதி மற்றும் அதனுடன் தொடர்புடைய வீதிகள், ஓராபிபாசா மாவத்தை, ஹல்ஸ்டொப் வீதி, சென். செபஸ்தியன் மேடு, ஹூசைனியா வீதி, ஸ்ரீ சங்கராஜ மாவத்த வீதி உட்பட அதனுடன் இணைந்த வீதி பகுதிகளில் இந்த நீர் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
நீர் வெட்டினால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியம் குறித்து கவலை தெரிவிக்கும் நீர் வழங்கல் சபை முன்கூட்டியே நீரைச் சேமித்து சிக்கனமாகப் பாவிக்கும்படி கேட்டுள்ளது. (எ)

# கிறிஸ்தவர்கள் நிலை குறித்து பாப்பரசரின் பிரதிநிதி கரிசனை



கொழும்பு,ஓக.17
இலங்கையிலும் மதசகிப்புத் தன்மையற்ற சம்பவங்கள் இடம்பெறுவதாக சுட்டிக் காட்டியுள்ள இலங்கைக்கான பாப் பரசரின் பிரதிநிதி அதி வண. ஜோசப் ஸ்பட்டேரி இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களின் நிலைமை குறித்து கரிசனை வெளியிட்டிருக்கின்றார்.
ஜனநாயகம் மேலோங்கியுள்ள நாடுகளிலும் கூட கிறிஸ்தவர்கள் தமது மதத்தைப் பின்பற்றும் விடயத்தில் அவர்கள் மத ரீதியாக ஒடுக்கப்படுவதாகவும் பாப்பரசரின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.
மதங்கள் மீதான ஒடுக்கு முறை, மத சகிப்புத் தன்மை யற்ற நிலை என்பவற்றின் ஊடாக, தீய சக்திகள் தலை யெடுத்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. சகிப்புத் தன்மையுடன் இத்தகைய தீமைகளில் இருந்து விலகியிருந்து, அயலவர்களுக்குநன்மை செய்ய வேண்டும்- என்றார். (எ)

## பஸ்ஸில் கப்பம் பெறுவது குறித்து முறைப்பாடுகள்

கொழும்பு. ஓக.17
கொழும்பு-குணசிங்கபுரம் தனியார் பஸ் நிலையத்தில் இருந்து தொலைதூரப் பயணச் சேவைகளுக்குப் புறப்பட்டுச் செல்லும் பஸ் ஒன்றிலிருந்து தினமும் 1,500 ரூபா வரை கப்பம் பெறப் படுவதாக தகவல்கள் கிடைத் துள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார்.
இந்தக் கப்பம் பெறும் நடவடிக்கை தொடர்பாக சம்பந்தமாக பஸ் சங்கங்களும் போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு முறைபாடுகளை முன்வைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.
யாழ் - கொழும்பு பஸ்களிலேயே இவ்வாறு கப்பம் பெறப்படுவது கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)



ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பால் மா உற்பத்திகள் சிலவற்றின் தொகுதி இலக்கத்தை சோதனை செய்யும் நடவடிக்கையில் சுகாதா[illegible] ஈடுபட்டனர். கோட்டை மாநகரசபை மேயர் ஜன[illegible] சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டார்.

# சிங்கப்பூரிலிருந்து வெளியேற முயன்ற இலங்கைப் பெண் கைது

கொழும்பு.ஓக.17
சிங்கப்பூரிலிருந்து சட்ட விரோதமாக வெளியேற முயன்ற பெண் ஒருவரை குடிவரவு சோதனைச்சாவடி அதிகாரிகள் கைது செய்தனர். சிங்கப்பூர் - மலேசியா துவாஸ் சோதனைச்சாவடியின் பொருள்கள் சோதனைப் பிரிவில் மலேசிய லொறி ஒன்றினைக் குடிவரவு அதிகாரிகள் சோதனையிட்டனர்.
சோதனையின்போது லொறிச் சாரதியின் இருக்கையின் பின் பகுதி திரைச் சீலையால் மூடப்பட்டிருந்ததை கண்டனர்.
உடனடியாக திரைச் சீலையை விலக்கிய அதிகாரிகள், அங்கு ஒரு பெண் சுருண்ட நிலையில் மறைந்திருப்பதைப் பார்த்தனர்.
இதைத்தொடர்ந்து, லொறிச் சாரதியான 54 வயதுடைய மலேசியப் பிரஜையையும் திரைச்சீலைக்கு பின்னால் மறைந்திருந்த இலங்கையைச் சேர்ந்த 29 வயது பெண்ணையும் அதிகாரிகள் கைது செய்தனர்.

**" குடிவரவுச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். லொறியை அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். குற்றத்திற்கு பயன் படுத்தப்பட்ட அந்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

குடிவரவுச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட அந்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.
வீசா முடிவடைந்த நிலையில் இந்தப் பெண் சிங்கப்பூரில் தங்கியிருந்து வெளியேற முயற்சித்துள்ளார். இந்த நிலையில், சட்டவிரோதமாக தங்கியிருந்தமை, சட்டவிரோதமாக வெளியேற முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இலங்கைப் பெண்ணுக்கும் சட்டவிரோத ஆள்கடத்தல் குற்றத்திற்காக மலேசிய லொறி சாரதிக்கும் தண்டனை வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேசியவாத எழுச்சி தலையெடுக்கும் எகிப்தில் இனிமேல் என்னாகும்...?

எகிப்திலே அரபுவசந்தம் ஏற்பட்டதும், அதன் விளைவாக, பல தசாப்த காலமாக ஆட்சியிலிருந்த ஹொஸ்னி முபாரக் பதவி இழந்தபோது எகிப்திய மக்கள் வீதியில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததும் நேற்றுப் போல் இருக்கிறது. தமக்கு இனி ஒரு சிறப்பான எதிர்காலம் உருவாகும் என்று அவர்கள் நம்பினார்கள். தமது ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இன்று சிதறடிக்கப்பட்டுவிட்டன.

ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியான மோர்ஸியை பதவிநீக்கம் செய்த இராணுவத்தினர், அவரது ஆதரவாளர்கள் மீது மிகவும் மோசமான அடக்கு முறை களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள். தலைநகர் கெய்ரோவிலும் அலெக்சாந்திரியாவிலும் மற்றும் சில நகரங்களிலும் முகாம்களை அமைத்து அவற்றுள் இருந்தவாறு இராணுவ ஆட்சியாளர்களுக்கு அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது இராணுவம் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளது. இராணுவத்தின் ஹெலிகள் மேலே வட்டமிட புல்டோசர்கள், கவசவாகனங்கள் சகிதம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் நடத்திய தாக்குதலில் 450 பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், 2000 பேர் வரை காயமடைந்திருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எகிப்தின் வரலாற்றில் இதனைப் பேரழிவு எனக் கொள்வது தப்பன்று.

தேர்தல் வாக்குறுதிகளை மோர்ஸி நிறைவேற்றத் தவறிவிட்டார் என்றும் மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டை இட்டுச் சென்றுவிட்டார் என்றும் மோர்ஸிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டன. ஆர்ப்பாட்டங்களைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு, அதில் தலையிட்ட இராணுவத்தால் ஜூலை 3ஆம் திகதி மோர்ஸி பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால் முந்திய ஆர்ப்பாட்டங்களைவிட பல மடங்கு பெரிய ஆர்ப்பாட்டங்கள் மோர்ஸிக்கு ஆதரவாக இன்று நடைபெறுகின்றன. இராணுவம் நீதியாக நடந்துகொள்ளுமேயானால் மோர்ஸியை மீண்டும் பதவியில் அமர்த்தியிருக்கலாம். அல்லது மற்றொரு தேர்தலை நடத்தியிருக்கலாம்.

டெங் சியாஓபிங்கின் ஆட்சியின்போது பதவிநீக்கம் செய்யப்பட்ட மிதவாத சீர்திருத்தவாதியான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹூயாஓபாங்கின் மரணத்தை அடுத்து-

சீனப் பல்கலைக்கழக மாணவர்கள் தலைநகர் பெய்ஜிங்கிலுள்ள தியனன்மென் சதுக்கத்தை முற்றுகையிட்டு அமைதியான முறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தை முறியடிக்க சீன இராணுவம் மிகவும் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது.

இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பெய்ஜிங்கிற்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற மற்றைய நகரங்களுக்கும் சுமார் 3 லட்சம் படையினர் அனுப்பப்பட்டனர். புல் டோசர்கள், டாங்கிகள், கவசவாகனங்களின் உதவியுடன் நடத்தப்பட்ட மிகமோசமான அடக்குமுறையின்போது இறந்தோர் நூற்றுக்கணக்கானோர் அல்லது ஆயிரக்கணக்கானோர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. சீன அரசு சேத விவரங்களை இதுவரை வெளியிடவில்லை.

எகிப்தில் மோர்ஸியின் முஸ்லிம் சகோதரத்துவக்கட்சி ஆதரவாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கையும், தியனன் மென்சதுக்க பாணியிலேயே அடக்கப்பட்டுள்ளது.


ஆனால் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரி இம்மாத முற்பகுதியில் பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில், எகிப்தில் ஜனநாயகத்தை நிலைநாட்ட இராணுவம் தலையிட்டதாகத் தெரிவித்தார்.

பொதுவாகவே, மேற்கு நாடுகள் தங்களது நலன்களைப் பாதுகாக்கும் எவருக்கும் ஆதரவு வழங்கத் தயார் என்பது ஒரு கைவந்த சூத்திரமாகி விட்டது. எகிப்தில் முபாரக் போன்றோ, லிபியா வில் கடாபி போன்றோ, டுனிசியாவில் பென் அலி போன்றோ அல்லாமல் மோர்ஸி மக்களினால் தெரிவுசெய்யப்பட்டவர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இராணுவத்தால் பதவி கவிழ்க்கப்பட்டபோது அமெரிக்கா மௌனம் சாதித்தது. எகிப்தில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்கியது.

அரபு வசந்தம் ஏற்பட்ட நாடுகளில் அமெரிக்கா எதிர்பாராத வாறு இஸ்லாமிய தேசியவாதம் எழுச்சியடைந்தது. இது அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்பட்ட பெரும் தோல்வி என்று நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

எகிப்தில் இன்று இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களும் இஸ்லாமிய தேசியவாத எழுச்சியின் விளைவுகளே. எகிப்தில் இராணுவ அடக்குமுறைகளுக்கு முடிவுகட்டப்படவேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மோர்ஸி மீண்டும் பதவியில் அமர்த்தப்படவேண்டும் என்பதே ஜனநாயக விரும்பிகளின் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

# இலங்கையில் அதிகரிக்கிறது சிறுவர் மீதான வன்முறை



2011 இல் சிறுவர்களுக்கு எதி ரான பாலியல் மீறல்கள் தொடர்பில் இலங்கைப் பொலிஸ் நிலையங்களில் மொத்தம் 2,000 வரையான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை யில், 2012இல் இது தொடர்பான முறைப்பாடுகள் 5,000 வரை அதிகரித்திருந்ததாக நாடாளுமன்ற புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு அமெரிக்காவை தளமாகக் கொண்ட 'ரைம்' சஞ்சிகையில் அஞ்சனி திரிவேதி எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் தற்போது சிறுவர்கள் வன்முறைகளுக்கு ஆளாவதானது நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. இலங்கையில் ஒவ்வொரு நாளும் மூன்று தொடக்கம் ஐந்து சிறார்கள் வரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுகின்றனர்.

### 2012 இல் அதிகரித்த வன்புணர்வு சம்பவங்கள்

2011இல் 1463 சிறார்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஆனால் இதே எண்ணிக்கை 2012இல் 1759 ஆக உயர்ந்ததாகவும் பொலிஸாரின் அதிகாரபூர்வத் தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் உள்ளதாகவும் யுனிசெப் குற்றம் சுமத்தியுள்ளது.

2011இல் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் மீறல்கள் தொடர்பில் பொலிஸில் மொத்தம் 2000 வரையான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளையில், 2012இல் இது தொடர்பான முறைப்பாடுகள் 5000 வரை அதிகரித்துள்ளதாக நாடாளுமன்ற புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பாலியல் வன்முறைகள் தவிர சிறுவர்கள் மீதான ஏனைய வன்முறைகள், கடத்தல்கள், காணாமற்போதல்கள் போன்ற பல்வேறு முறைப்பாடுகள் 2011ஐ விட 2012இல் 64 சதவீதமாக அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளின் மூலம் தற்போது இவ்வாறான மீறல்கள் தொடர்பில் முறைப்பாடு மேற்கொள்ளப்படுவது அதிகரித்துள்ளதாகவும், இலங்கையில் குடும்ப ஒற்றுமை என்பது இறுக்கமாகப் பேணப்படுவதால் சிறுவர்கள் மீதான மீறல்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்வது மிகக் குறைவாக இருப்பதாகவும், வன்முறைகள் தொடர்பாக குறிப்பாக முறையற்ற பாலியல் மீறல்கள் தொடர்பில் முறைப்பாடு செய் வது மிகக் குறைவாக உள்ளதாகவும், இலங்கையில் பாலியல் வன்முறை களால் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காகப் பணியாற்றும் அரசசார்பற்ற நிறு வனம் ஒன்றின் நிறுவுனரான அலியா விற்னி - ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 26 ஆண்டுகளாகத் தொடர்ந்து இடம்பெற்று 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போரின் விளைவால் இவ்வாறான சிறுவர் வன்முறைகள் ஏற்படலாம். இவ்வாறான சிறுவர் கள் மீதான வன்முறையானது கலாசாரப் பிறழ்வுகள் போன்ற கலாசார சார் குறைபாடுகளால் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவற்றின் காரணமாக வன்முறைகளும், மீறல்களும் தொடர்ந்தும் ஏற்படுகின்றன என இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி றெசா ஹொஸைய்னி தெரிவித் துள்ளார்.

**பாலியல் வன்முறைகள் தவிர சிறுவர்கள் மீதான ஏனைய வன்முறைகள், கடத்தல்கள், காணாமற் போதல்கள் போன்ற பல்வேறு முறைப் பாடுகள் 2011ஐ விட 2012இல் 64 சதவீதமாக அதிகரித்துள்ளது**

### பணிப் பெண்களாய் தாய்மார் பாதிக்கப்படும் பிள்ளைகள்

குடும்பத்தில் ஏற்படும் வறுமைநிலை காரணமாக வெளிநாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை தேடிச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இந்தப் பெண்களின் பிள்ளைகள் பாதுகாப்பற்றவர்களிடம் குறிப்பாக வன்முறைகளில் ஈடுபடும் ஆண் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் போது சிறுவர்கள் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். பிலிப்பைன்சுடன் ஒப்பிடும்போது அங்கு இலங்கையைப் போலவே பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்கின்றனர். ஆனால் இலங்கையில் 100,000 மக்களுக்கு கிட்டத்தட்ட 17 சிறார்கள் இவ்வாறான வன்முறைக்கு ஆளாகும் அதேவேளையில், பிலிப்பைன்சில் 100,000 மக்களுக்கு 6 சிறார்கள் மட்டுமே பாதிக்கப்படுகின்றனர்.

10 வயதான சிறுமி ஒருவர் ஒரு ஆண்டின் முன்னர் அவரது தந்தையாரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இந்தச் சிறுமி இரவு நேரங்களில் பயங்கரக் கனவுகளைக் கண்டு திடுக்கிட்டு விழிக்கிறார். இந்தச் சிறுமி உடல், உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சிறுமியின் தாயார் வெளிநாடொன்றின் பணிப் பெண்ணாக உள்ளார். இவரது உறவினர்களும் இவரைப் பராமரிப்பதில் விருப்பங்கொள்ளாத நிலையில், தற்போது சிறுவர் விடுதி ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளார். இந்தச் சிறுமிக்கு இதைவிட வேறெந்த இடமும் பாதுகாப்பாக இருக்காது. இவரது தாயார் இலங்கைக்குத் திரும்பி வந்து தனது மகளைப் பொறுப்பெடுப்பார் என நாம் நம்புகிறோம் என கொழும்பில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் சிறுவர் உளவியலாளரான எஸ்தர் ஞானகன் குறிப்பிட்டுள்ளார்.

நான் முதன் முதலாக இலங்கை வந்த[illegible] பாலியல் வன்புணர்வுக்கு உள்ளான இளம் யுவதிகளைச் சந்தித்தபோது, இலங்கையில் பல சிறார்கள் இவ்வா றான மீறல்களுக்கு உட்படுகின்றனர் என்கின்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். முறையற்ற பாலியல் வன் புணர்வுகளால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்களின் தாய்மார் வெளிநாடுகளில் பணி பெண்களாக உள்ளனர் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

இவ்வாறான சிறார்கள் குடிபோதைக்கு அடிமையான அவர் களது தந்தையர்கள் மற்றும் வளர்ப்புத் தந்தையர்களின் பாதுகாப்பின் கீழ் வளர்வதால் இவர்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இது தொடர்பில் விழிப்புணர்வு பெற்ற சிறுமிகள் தமக்கு நிகழ்ந்த வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடு செய்யும்போது அவர்கள் பல ஆண்டுகள் வரை நீதிமன்றுக்குச் சென்று வரவேண்டியுள்ளது என நிறுவுனரான அலியா விற்னி - ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

### குற்றம் இழைத்தவர்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர்

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறார்களுக்குப் பாதுகாப்பளிப்பதுடன், இவர்கள் சந்தித்த வன்முறைகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அவர்களுக்கு ஆதரவாக இருப்பதற்கான பணியை மேற்கொள்வதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. சிறார்கள் மீதான வன்முறைகளை விசாரணை செய்து நீதி வழங்குவதற்கு பல ஆண்டுகள் செல்கின்றன. குற்ற மிழைத்தவர்கள் மிகவும் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஆனால் இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் பராமரிப்பு விடுதிகளில் வாழவேண்டிய நிலை இலங்கையில் உள்ளது என இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி றெசா ஹொஸைய்னி தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையைச் சந்திப்பதற்கு அதிகாரிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இலங்கை முழுமையும் தற்போது சிறார்கள் மற்றும் பெண்களுக்கான முறைப்பாடுகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு 36 பாதுகாப்புப் பிரிவுகள் உள்ளன. சிறார்கள் வன்முறைகளை ஆராய்ந்து தீர்ப்பைக் கூறுவதற்காக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று கொழும்பின் புறநகர்ப் பகுதியிலும், பிறிதொரு சிறப்பு நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், இலங்கையில் சிறுவர் சந்திக்கும் வன்முறைகள் மிக அதிகமாக உள்ளன. தற்போதும் இவை தொடர்பான வழக்குகள் முடிவின்றி நிலுவையிலுள்ளன.

(நன்றி -புதினப்பலகை)

## பேரக் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடும் தாத்த

பேரக்குழந்தைகளுடன் நேரத்தைப் பகிர்ந்து கொள்ளும் தாத்தா - பாட்டி [illegible] அமெரிக்க ஆய்வில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து பொஸ்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சமூகவியல் துறை பேராசிரியர், சாரா மூர்மன் கூறியதாவது: தாத்தா - பாட்டி மற்றும் பேரக் குழந்தைகள் ஆகியோ ருக்கிடையே, ஆரோக்கியமான உறவு முறைகள் இருந்தாலும், இரு தரப்பினருக்குமே மன அழுத்தம் என்பது சாதாரணமாக உள்ளது.

இருவரும் மனதளவில் உணர்ச்சி பூர்வமாக ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர். இது மன ரீதியில், ஆரோக்கியமான வி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் : சாலிக விமலசேன
தமிழில் : வீ.எஸ்.ரீ


நவிப்பிள்ளை


தமரா குணநாயகம்

# நவிப்பிள்ளை வருகையால் விழி பிதுங்கும் அரசு

**ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவிப்பிள்ளையின் இலங்கைக்கான பயணம் குறித்து ஐ.நா.சபையின் இலங்கைக்கான முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் வெளியிட்ட கருத்தென 'மவ்பிம' வெளியிட்டுள்ள கட்டுரையின் தமிழாக்கம் இது.**

வெலிவேரியாவில் பொது மக்களின் ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டமை, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை, பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுவது போன்ற பரபரப்பான சம்பவங்களின் மத்தியில் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவிப்பிள்ளை இந்த மாதத்தின் கடைசி வாரத்தில் இலங்கைக்கான தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைப்பாடு குறித்துக் கண்டறிந்து தமது பக்கச் சார்பற்ற சுதந்திரமான, அறிவிப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிப்பதே நவிப்பிள்ளையின் இலங்கைக்கான பயணத்தின் நோக்கமாகும்.

கடந்த மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் நவிப்பிள்ளையை இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ள அனுமதிப்பது, அரசின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை சுதந்திரமானதும் நியாயமான முறையிலுமான விதத்தில் நடத்துதல் என்பன உட்பட பல நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக இலங்கை அரசு உறுதியளித்திருந்தது.

கடந்த ஐ.நா.மனித உரிமைகள் சபையின் மாநாடு முடிவடைந்து ஐந்து மாதங்களின் பின்னர், தமது இலங்கைக்கான பயணம் குறித்த பலவித சர்ச்சைகளின் முடிவில் இந்த மாத இறுதியில் இலங்கைக்கான தமது பயணத்தை மேற்கொள்ளும் நவிப்பிள்ளை தமது பயணத்தின் போது கடந்த ஐந்து மாத கால இடைவெளியில் இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதுடன், அவை குறித்து இலங்கை அரசுத் தலைவர்கள், சிறுபான்மையினப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை குறித்து கலந்துரையாடிக் கருத்துக்களைத் திரட்டுவார் எனத் தெரியவந்துள்ளது. இலங்கைக்கான தமது பயணத்தின்போது இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களையும் சந்தித்துப் பேச நவிப்பிள்ளைக்கு அதிகாரம் இல்லாத போதிலும், இலங்கை அரசின் அனுமதி பெற்று அவர் அத்தகைய சந்திப்புக்களையும் மேற்கொள்ள முயலக் கூடும் என்பது தெளிவானதொன்றே.

கடந்த மார்ச் மாதத்து ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் நவிப்பிள்ளையின் இலங்கைக்கான பயணத்துக்கு அனுமதியளிக்க இலங்கை அரசு இணங்கிக் கொண்டமையால் எந்த வகையிலும் அவரது இலங்கைக்கான பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க எம்மால் இயலாதென்பதும் வெளிப்படையானதொன்றே.

கடந்த ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இத்தகைய சர்வதேச அழுத்தங்களுக்கு இடமளிக்க இயலாதென அந்தக் கூட்டத் தொடரில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட பிரதிநிதிகள் நேரடியாக மறுப்புத் தெரிவித்திருப்பார்களானால் எம்மால் நவிப்பிள்ளையின் இலங்கைக் கான பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடிந்திருக்கும். இத்தகைய பின்னணியில் நாம் விரும்பாவிட்டாலும் கூட இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நவிப்பிள்ளையை நாம் வரவேற்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

**நாட்டின் அண்மைக் காலச் சம்பவங்கள் அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்த வல்லன.**

தமது இலங்கைக்கான பயணத்தின் போது நவிப்பிள்ளை நிச்சயமாக நாட்டின் வட பகுதிக்கு பயணம் மேற்கொள்ளப் போகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இதனால் அண்மைய வெலிவேரியா மற்றும் கிராண்ட்பாஸ் சம்பவங்கள் எமக்குப் பின்னடைவை ஏற்படுத்துமென்பது நிச்சயமே. சிலவேளை நவிப்பிள்ளை மேற்குறித்த இடங்களுக்குச் சென்று அந்தப் பகுதிப் பொது மக்களையும் சந்தித்து உண்மையைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

அண்மைக் காலத்தில் மேற்குறித்த பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் கூட எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் நவிப்பிள்ளையால் முன் வைக்கப்படவுள்ள இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்படக்கூடும்.

உண்மையில் நாமறிந்த வரையில் இத்தகைய வெளியார் அழுத்தங்களின் பின்னணியில் அமெரிக்காவும், பிரிட்டனுமே செயற்படுகின்றன. எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டின் தலைமைப் பொறுப்பை பிரிட்டனே வகித்து வருகிறது. அந்த வகையில் நவிப்பிள்ளை தமது இலங்கைப் பயணத்தின் பின்னர் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கவிருக்கும் அவரது இடைக்கால அறிக்கை, பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முக்கியத்துவம் வகிக்கத்தான் போகிறது. மற்றொரு புறம் அமெரிக்காவும், பிரிட்டனும் இலங்கை அரசு மீது இத்தகைய கடும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான காரணம் இலங்கை மக்கள் மீதான பற்றின் காரணமாகவல்ல என்பது முக்கியமானதொன்றாகும். இலங்கையில் கால் பதிக்கும் நோக்குடனேயே அவை இவ்விதம் நடந்து கொள்கின்றன. ஆனால் அதற்கான வாய்ப்புக்களை எமது அரசே ஏற்படுத்திக் கொடுக்கிறது என்பது கசப்பானதொரு உண்மையே.

இதனாலேயே பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அந்த நாடுகளால் இலங்கை மீது அழுத்தம் மேற்கொள்ள முடிகிறது. மற்றொரு வகையில் அவர்களின் இத்தகைய நிபந்தனைகளை ஏற்றுச் செயற்படுவது தொடர்ச்சியாக அவர்களது தாளத்துக்கு ஆடும் நிலையை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தி வைக்கும். இவைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து நாம் சரியானதொரு முடிவை மேற்கொள்ள வேண்டுமென்பது தெளிவாகிறது. ஜனநாயக நடைமுறை என்பது பொது மக்களின் நிர்வாக நடைமுறை எனக் கொள்ளத் தக்கது. எமக்குப் பொருத்தமான சரியான வெளியுறவுக் கொள்கையைக் கடைக் கொள்ளத் தக்க அரசொன்றை நாட்டு மக்களாகிய நாமே தேர்ந்தெடுத்தாக வேண்டும். அது அமெரிக்காவினதோ, பிரித்தானியாவினதோ தேவைக்கேற்ற விதமாக, வலோற்காரமாக உருவாக்கப்படத் தக்கதொன்றல்ல. அதற்காக நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**மக்களது கவனத்தை திசை திருப்பும் அரசின் எத்தனம்**

இன்று நாட்டில் பொது மக்களது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன. பொது மக்கள் பிரச்சினைகள் மத்தியில் வாழ நேர்ந்துள்ளது. பிரச்சினைகள் அதிகரிக்க அதிகரிக்க மக்கள் அரசை விமர்சிக்க ஆரம்பிப்பர். அரசு இத்தகைய விமர்சனங்களுக்கு அஞ்சுகிறது. இதனால் பொதுமக்களது கவனத்தைத் திசை திருப்ப அரசு ஆர்வம் காட்டுகிறது. தமிழ், முஸ்லிம் பிரச்சினைகள் புதிது புதிதாக உருவாவதும், உருவாக்கப்படுவதும் இதனாலேயே ஆகும்.

1981, 1983 ஆம் ஆண்டுகள் காலப் பகுதியில் இத்தகைய விதத்திலேயே பிரச்சினைகள் உருவாகின; உருவாக்கப்பட்டன. 1981 ஜூலை வேலை நிறுத்தத்தால் எழுபதாயிரம் பேர் தமது தொழில்களை இழக்க நேர்ந்தது. 1983 ஆம் ஆண்டில் சிறுபான்மை தமிழ் மக்களுடனான பிரச்சினை காரணமாக கறுப்பு ஜூலை கலவரங்கள் ஏற்பட்டன. நாட்டின் இன்றைய சுமுகமற்ற சூழலுக்கு இவற்றை நாம் உதாரணங்களாகக் கொள்ளலாம்.

நவிப்பிள்ளையின் இலங்கைக்கான பயணம் குறித்து நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். சில வேளை நிலைமையின் தீவிரம் காரணமாக அவரால் இலங்கை நிலவரம் தொடர் பாக ஜெனிவா மனித உரிமைகள் சபைக்கு வழங்கவிருக்கும் இடைக்கால அறிக்கை இலங்கைக்கு எதிரான கடும் விமர்சனங்கள் கொண்டதொன்றாக அமையக்கூடும். அவ்விதம் அமையு மானால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை பொறுத்திருக்காமல் எதிர்வரும் செப்ரெம்பரில் கூடவுள்ள மனித உரிமை கள் சபைக் கூட்டத் தொடரிலேயே இலங்கைக்கு எதிராக மற்றொரு பிரேரணை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கான வாய்ப்பு நிறையவே உள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வடமாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது என்பதோடு அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு நிறையவே உண்டு. அதன் பின்னர் பாதுகாப்புப் படைத் தரப்புக்கும் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே சிக்கல்கள், மோதல்கள் உருவாகுமானால் அதனால் ஏற்படத்தக்க வெளிநாடுகளின் அழுத்தங்கள் முன்னைய வற்றை விட பன்மடங்கு வலுமிக்கதாக அமையக்கூடும். உண்மையில் வெலி வேரியா சம்பவம் தொடர்பாக அமெரிக்காவோ , பிரிட்டனோ கடும் விமர்சனமெதனையும் மேற்கொள்ளவில்லை.

வெலிவேரியா சம்பவம் அமெரிக்காவுக்கோ, பிரிட்டனுக்கோ முக்கியமானதொன்றல்ல. இறுதிப் போர் வேளையில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் குறித்து உலகத்துக்கு வெளிப்படுத்துவதே அந்த நாடுகளின் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது. அதற்கு அவசியமான சாட்சியங்களைத் திரட்டுவதே அவர்களது தற்போதைய முக்கிய முனைப்பாகும். இந்த மனிதப் படுகொலைகள் குறித்து முக்கியத்துவம் வழங்கும் அவர்களது அடிப்படைத் தேவை இந்த நாட்டைப் பிரித்துவிடுவதாகும். ஆதலால் வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் உருவாகும் சகல நிலைமைகளும் இலங்கையை இரண்டாகப் பிளவுபடுத்தும் முனைப்புடன் செயற்படும் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உட்பட்ட வெளிநாடுகளுக்குப் பெறுமதி மிக்கவையாய் அமையும். அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை இலக்கு வைத்து அந்த நாடுகள் செயற்படுவதற்கான காரணம் இதுவே. அத்தகையதொரு திட்டத்தின் அடிப்படையிலேயே நவிப்பிள்ளை யின் இலங்கைக்கான பயணம் திட்ட மிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவை யாவும் எம்மிடமிருந்து உரிமைகளைப் பலாத்காரமாக பறித்தெடுக்கும் நோக்கிலான செயற்பாடுகளே என்பதை நாம் மீண்டும் மீண்டும் கவனத்தில் கொண்டாக வேண்டும். கடந்த ஆண்டு மார்ச் மாதத்து ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை முன் வைத்த போது இது சாதாரண ஒரு பொது விடயம் என எமது வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. அவ்விதம் தெரிவித்ததுடன் அந்தப் பிரேரணையின் அறிவுறுத்தல்களை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் ஏற்படுத்தும் யோசனையை முன் வைத்ததன் மூலம் சர்வதேச சமூகம் மீண்டும் எம்மை விமர்சிப் பதற்கு அரசு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. ஆதலால் தற்போது தோளில் தூக்கி மாட்டிக் கொண்ட மேளத்தை அடித்தே ஆக வேண்டி நேரிட்டுள்ளது. அரசு தற்போது பல தரப்பட்ட கருத்து வெளிப்பாடுகளூடாக நவிப்பிள்ளையை நோக்கிக் கர்ச்சிப்பதால் பயனேதும் விளையப் போவதில்லை. நவிப்பிள்ளை தனக்கு வழங்கப்பட்ட கடமையையே கனகச்சிதமாக முன்னெடுத்துச் செல்கிறார் என்பதே யதார்த்தமாகும்.


---

# பாட்டிகளுக்கு மன அழுத்தம் குறைவு

மாகும். அதே நேரத்தில தாத்தா - பாட்டிகளுக்கு பேரக் குழந்தைகள் ஆதரவு தருவதாலோ அல்லது அவர்களது ஆதரவைப் பெறுவதாலோ அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால் தாத்தா - பாட்டிகள்தான். மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள். பேரக்குழந்தைகள் கடைக்கு போய் வருவது, கேட்பதை வாங்கிக் கொடுப்பது, பண உதவி மற்றும் வீட்டு வேலைகள் போன்றவற்றைச் செய்வது போன்றவை. இ[illegible] இடையே உள்ள நெருக்கத்தை அதிகரிக்கிறது. ஒருவரிடமிருந்து ஒருவர் பரஸ்பர உதவிகளைப் பெறுவதும் செய்வதுமாக இருந்தால் தாத்தா - பாட்டிகளின் மன அழுத்தமும் குறையும் பேரக்குழந்தைகளுக்கும் மனதளவில் இது நன்மையை ஏற்படுத்தும். 1985 - 2004 ஆம் ஆண்டு வரை நடந்த இந்த ஆய்வில் மேற்கண்ட உண்மை உறுதியானது. இவ்வாறு அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 17
நல்லூர் கந்தன் ஆலய ஆறாம் திருவிழாவான இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'அன்பே சிவம்" என்ற பொருளில் நவராஜின் சிறப்புச் சொற்பொழிவும், ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை, சுன்னாகம் சொர்ணவரத காளி அம்பாள் அறநெறிப் பாடசாலை, அரியாலை ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாட சாலைகளின் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசைக் கச்சேரியில் பாடல்களை திருமதி சுகன்யா வசந்தன் வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்- திருமதி வனஜா ஈஸ்வர சர்மா, மிருதங்கம்- எஸ். துரைராஜா, கடம்- ஏ.செல்வரத்தினம் வழங்குவர்.

இசை அரங்கில் பாடல்களை அருணந்தி ஆரூரன் வழங்க அணிசேர் கலைஞர்களாக வயலின்- ரி.திவாகரன், மிருதங்கம்- எஸ். திவ்வியரூப சர்மா, கெஞ்சிரா- எஸ். சிவ சுந்தரசர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (ந-86-7)




நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இளம்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் உ.இராதாகிருஷ்ணனின் மாணவிகளின் வயலின் இசைக் கச்சேரியின் போது..... (வ-7)

## சிறார்களிடம் நற்பண்புகளை விருத்தி செய்யவேண்டும்

### முன்னாள் நீதிபதி வசந்தசேனன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.17
நாட்டின் எதிர்காலம் வளம் மிக்கதாக அமைவதற்கு சிறுவர்களின் மனதில் நற்பண்புகளை வளர்க்கவேண்டும். அதன் மூலம் தான் அவர்கள் நற்பிரஜைகளாக உருவாகுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வு நிலை மாவட்ட நீதிபதியும், மானிப்பாய் சத்தியசாயி பாடசாலைப் பணிப்பாளருமான ஆர்.வசந்தசேனன்.

பாலர் கல்விக் கழகத்தின் ஞானக் குழந்தைகள் இல்ல 47 ஆவது வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நடைபெற்ற நிகழ்வை ஒரு விளையாடுப் போட்டியாக நான் பார்க்கவில்லை. சிறுவர்களின் பண்பு விருத்தி விழாவாகவே பார்க்கின்றேன்.

சிறுவயதில் இருந்தே சிறுவர்களிடம் நற்பண்புகளை விருத்தி செய்யவேண்டும். அவ் வாறு செய்யாது விட்டால் அவர் கள் கற்கும் கல்வியில் பய னில்லை.

நாட்டின் எதிர்காலம் வளம்மிக்கதாக அமைவதற்கு சிறுவர்களின் உள்ளங்களில் நல்ல எண்ணங்களை வளர்க்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கருத்துக்களை ஊட்டவேண்டும்.

மிகத் தொலைவிலுள்ள கிராமப்புறத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பது அரிது. அவர்களையும் நாம் கருத்தில் கொண்டு எமது சேவைகளை விரிவுபடுத்தவேண்டும். வெறும் பேச்சோடு நின்றுவிடாது செயலிலும் ஈடுபடவேண்டும் என்றார். (ந-400)

## நாளை மின்வெட்டு

கிளிநொச்சி-சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132,000 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தின் இணைப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி நேரம் மின் தடைப்படும்.

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ். மாநகர சபைப் பகுதி, குருநகர், பாஷையூர், காக்கைதீவு, மீனாட்சி புரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ். பிரதான வீதி, பண்ணைப் பகுதி, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, நாவலடி, பூம்புகார், கொழும்புத்துறை, மணியந்தோட்டம், செம்மணி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு, ஒக. 17
கடந்த காலத்தில் இடம் பெற்ற நிஷாப்புயல் காரணமாக அழிவுண்ட கொக்குவில் கிழக்கு நந்தாவில் மனோன்மணி அம்பாள் சனசமூக நிலைய கட்டடத்தை புனரமைப்புச் செய்வதற்காக பன்முகப்படுத்திய நிதியின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஐம்பதாயிரம் ரூபாவினை ஒதுக்கியுள்ளார்.

நந்தாவில் மனோண்மணி அம்பாள் சனசமூக நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிதி கிடைத்துள்ளதை பொதுமக்கள் வரவேற்றுள்ளனர். (ந-86)

## கார்த்திகைத் திருவிழாவில் இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஒக.17
நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 15ஆம் திருவிழாவான கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் உட்பிர காரத்தில் ஆறுமுக சுவாமி வாயிலில் நடைபெறும் இந்த நிகழ்வுக்காக கலைஞர்கள் தமது ஒத்திகை நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளனர். எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கார்த்திகைத் திருவிழா இடம்பெறும். (ந-7)


## விண்ணப்பிக்கலாம்

வலி. வடக்கு, ஒக 17
வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் அழகுக் கலையும் மனையியலும் தொடர்பான மூன்று மாதகால பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறி, இம் முறை இணுவில் கிழக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலகம், உடுவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இப் பயிற்சி நெறி செப்ரெம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது. (ந-86)



யாழ். ஆஸ்பத்திரி வீதியில் திருமுழுக்கு அருளப்பர் ஆலயப் பகுதியில் புனரமைக்கப்பட்ட பாலத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுறும் நிலையில் உள்ளன. இந்தப் பாதையூடாக நடைபெற்ற போக்குவரத்துக்கள் மற்றும் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் தற்போது கோயில் வீதியூடாக நடைபெற்று வருவது குறிப் பிடத்தக்கது. (ந-135)

## மூன்று வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 17
நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் பகுதியில் உள்ள மூன்று வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த வீதிப் புனரமைப்புக்காக சபை ஒன்பது மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கோண்டாவில் தபாலக வீதி, காளிகோயிலடி வீதி, முத்துமாரி அம்மன் கோயிலடி வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன. (ந-17)

## சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்ட சிறுவன்

யாழ்ப்பாணம், ஒக. 17
தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் திருவிழாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 15 வயதுச் சிறுவனிடமிருந்து மூன்று கைத்தொலைபேசிகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கோயில் திருவிழாவின்போது திருட்டுப் போன கைத்தொலைபேசி களே அவை என்பது தெரியவந்துள்ளதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோயிலுக்குச் சென்றவர்களிடம் கைத்தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன. அதில் ஒருவர் கைத்தொலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கோயிலில் சிவில் உடையில் நின்ற பொலிஸார் குறித்த சிறுவனை சந்தேகத்தின் பேரில் விசாரித்தனர். அவனிடமிருந்து சிம் கார்ட் ஒன்றையும் மீட்டனர். அது பற்றி விசாரணை செய்தபோது அது தொலைபேசி திருடப்பட்டதாக முறையிட்டவரது 'சிம்' எனத் தெரியவந்தது. அதனடிப்படையில் அவனிடம் மேலதிக விசாரணை மேற் கொண்ட பொலிஸார் மூன்று கைத்தொலைபேசிகளையும் மீட்டுள்ளனர்.

குறித்த சிறுவன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சீர்திருத்தப் பாடசாலை ஒன்றில் தங்க வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-4)

## பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன

நெடுந்தீவு வர்த்தகர் அமரர் வ.ஐ.நல்லதம்பி ஞாபகார்த்தமாக நெடுந்தீவிலுள்ள முன்பள்ளிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மத்தியிலுள்ள தென்னிந்திய திருச்சபை பகல் பராமரிப்பு நிலையத்தில் நெடுந்தீவு முன்பள்ளிகளின் ஒன்றிய இணைப்பாளர் திருமதி ச.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோர் கலந்துகொண்டு பாடசாலை உபகரணங்களை வழ்ங்கினார்கள். (ந)

## சுயதொழில் பயிற்சிநெறி

கிளிநொச்சி, ஒக.17
கரைச்சிப் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள 20 பயனாளிகளுக்கான தேவைப் பாட்டின் மீதான பயிற்சிநெறி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக மனிதவலு அபிவிருத்தி அலுவலர் த.கமலதாஸன் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

வளவாளராக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பி.அமல்ராஜ் கலந்துகொண்டு பயிற்சி வகுப்புக்களை நடத்தினார். பிரதேசத்தில் மிக்ஸர் தயாரிப்பு, தச்சுவேலை, ப... வேலை, தையல், சிறு... ஆகிய சுயதொழில் முயற்சியில் ஈடுப... 20 பேர் இ... பயிற்சி நெறியில் கலந்து கொ...னர். (ந-9)

## நாய்களுக்கு கருத்தடை

யாழ்ப்பாணம், ஒக. 17
கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலியாக நடமாடும் நாய்களைப் பிடித்து அவற்றுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் கருத்தடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் இந்தக் கட்டாக்காலி நாய்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோப்பாய் பிரதேசத்தில் 112 நாய்களுக்கும், உரும்பிராயில் 85 நாய்களுக்கும், அறுவைச் சிகிச்சை மூலம் கருத்தடை செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து புத்தூர், அச்சுவேலி, இருபாலை, நீர்வேலி போன்ற பிரதேசங்களில் உள்ள கட்டாக்காலி நாய்கள் இவ்வாறு பிடிக்கப்பட்டு கருத்தடை செய்யப்படவுள்ளன. குறிப்பாக குடாநாட்டில் நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. [illegible] ...வதோடு ...துச் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. (ந-17)



நல்லூர் முருகன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையினரால் கோயில் சூழலில் திரியும் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படுகின்றன. நாயை சுருக்குத் தடத்தில் பிடிக்கிறார் ஊழியர். (ந-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீருக்கு ஏங்கும் துணுக்காய் கிராமங்கள்

அக்கராயன், ஒக.17
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.
அடிப்படை வசதிகள் குறைவாக உள்ள உயிலங்குளம் இந்தியன் வீட்டுத் திட்டப் பகுதியில் இரண்டு திறந்த கிணறுகள் தோண்டப்பட்ட போதிலும் இவற்றின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடையாத நிலையில் காணப்படுகின்றன.
இங்கு துணுக்காய்ப் பிரதேச சபையினரால் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது.
ஆனால் குடிதண்ணீரைத் தொடர்ந்து வழங்குவதற்கு நிதி நெருக்கடி பெரும் தடையாக விளங்குவதாகப் பிரதேச சபையினரால் தெரிவிக்கப்படுகின்றது.
துணுக்காய்ப் பிரதேச சபையால் அம்பலப்பெருமாள் குளம், உயிலங்குளம், பழைய முறிகண்டி, தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய கிராமங்களுக்கும் பௌசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)




## பஸ்கள் தரித்துச் செல்லாத நெடுங்கேணி பஸ் நிலையம்

நெடுங்கேணி, ஒக. 17
நெடுங்கேணி பஸ் நிலையத்தில் பஸ்கள் தரித்துச் செல்வதில்லையெனத் தெரிய வருகின்றது.
நெடுங்கேணி பஸ் நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த ஒரு பஸ்ஸும் இங்கு தரித்து நிற்பதில்லை. தற்போது மாடுகளின் தரிப்பிடமாக இது காட்சியளிக்கின்றது. மேலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் இரவு வரை மதுச்சாலையாகவும் பயன்படுத்தப்படுறது.
ஆகவே இந்த பஸ் நிலையத்தின் அவல நிலையைப் போக்க வேண்டுமாயின் இங்கு பஸ்கள் தரித்துச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென நெடுங்கேணி மக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (க-435)

## மயானத்தை ராணுவம் ஆக்கிரமித்ததால் மக்கள் அவதி

மாங்குளம், ஒக.17
கனகராயன்குளம் பகுதியிலுள்ள இந்து மயானப் பகுதியையும் அந்தப் பகுதியில் முகாமிட்டிருக்கும் படைப்பிரிவினர் அபகரித்து வைத்துள்ளதால் அந்தப் பகுதி மக்கள் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர். வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட இந்த இடத்தை இந் தப் பகுதி மக்கள் இந்து மயானமாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் போரின் பின்னர் அந்த இடத்தில் ராணுவத்தினர் முகாமொன்றை அமைத்திருந்தனர்.
ஏ-9 வீதியில் 561 ஆவது படைப்பிரிவின் ராணுவ முகாமுக்கும் கனகராயன் குளத்துக்குச் சொந்தமான விவசாயப் பண்ணைக்கும் இடையிலுள்ள சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பிலேயே இந்த மயானம் அமைந்துள்ளது.
மயானம் இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ளதால் அந்தப் பகுதிக்குள் பொது மக்கள் செல்ல முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த இடத்தை இராணுவத்தினரே பயன்படுத்தியும் வருகின்றனர்.
இதனால் தற்போது புகையிரத வீதிக்கு அருகிலுள்ள இடம் மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
இதனால் இந்த மயானத்தில் எரிக்கப்படும் பிணங்களிலிருந்து வரும் துர்நாற்றமும், புகையும் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே தம்மால் பயன்படுத்தப்பட்டு வந்த இந்து மயானத்தை மீண்டும் அதே இடத்தில் இயங்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென இந்தப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)



சின்னப் பல்லவராயன்கட்டில் காணிகள் இனம் காட்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று தமது காணிகளைப் பார்வையிடும் பொருட்டு குழுமி நிற்கின்றனர். (க-18)

### தபால் வாக்களிப்பு தொடர்பான கூட்டம்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பது தொடர்பான கூட்டமொன்று கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இடம் பெற்றது.
இதில் தபால் மூல வாக்களிப்பைக் கையாளும் முறை, தபால் மூலம் வாக்களிப்பு தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை, அலுவலர்களுக்கான கடமை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி, வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர், திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க-402)

### மினிபஸ் சேவை

அக்கராயன், ஒக.17
கிளிநொச்சி மாவட்டம் கோணாவில், யூனியன்குளம், அக்கராயன் கிழக்குப் பகுதி மக்களது நன்மைகருதி மினிபஸ் சேவையொன்றுஇடம்பெற்றுவருகின்றது.
இந்தப் பகுதி மக்கள் மீள்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் பஸ் சேவைகள் இடம்பெறாமையால் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். யூனியன்குளம் பாலம் புனரமைக்கப்படாமையே பஸ் சேவைகள் இடம்பெறாமைக்கான முக்கிய காரணமாகக் காணப்பட்டது.
தற்போது இந்தப் பாலம் தற்காலிக அடிப்படையில் புனரமைக்கப்பட்டதால் மினிபஸ் சேவையொன்று கடந்த வாரம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. (க-18)

## மின்சாரத்துக்காக காத்திருக்கும் கனகராயன்குளப் பகுதி மக்கள்

மாங்குளம், ஒக.17
கனகராயன்குளப் பகுதியில் ஏ-9 வீதியிலிருந்து 50 மீற்றர் தூரம் உட்புறமாகத் தள்ளியிருப்பவர்களுக்குக் கூட மின்சாரம் வழங்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
தம்மைக் கடந்து தமது வீடுகளுக்குமேல்மின்சார இணைப்புக்கள் சென்றபோதும் தமக்கு மின்வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.
கனகராயன் குளத்திலிருந்து உள் வீதிகளாக அமைந்துள்ள புகையிரத நிலைய இணைப்பு வீதி, பழையகண்டி வீதி, விஞ்ஞானகுளம் வீதி, புதுக்குளம் வீதி, பண்டாரவன்னியன் வீதி, ஆலங்குளக் கிராமம் உட்பட பல இடங்கள் இன்னமும் மின்சாரத்தைக் காணாத நிலையிலேயே உள்ளன. இதனால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்கிலேயே கல்வியைத் தொடர்கின்றனர்.
இதனைவிட சில நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள மின்னேற்றும் விளக்குகளைப் பயன்படுத்த முடியாத நிலையும் காணப்படுகின்றது.
எனவே மாணவர்களின் கல்விக்கு உதவுவதோடு, தமது அன்றாட வாழ்க்கையையும் சீர் செய்வதற்கு மின்சாரத்தை வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)

## ஆலயத்தின் சூழலில் தூய்மை பேணுங்கள்

### கிளி. கந்தசுவாமி ஆலய நிர்வாகம் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக. 17
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயத்தின் சுற்றுப்புறச்சூழலை தூய்மையாக வைத்திருப்பதற்கு கரைச்சிப் பிரதேச சபையினர் உதவ வேண்டும் என கோயில் நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இந்தக் கோயிலின் சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும் வேலைகளை கரைச்சிப் பிரதேச சபையே மேற்கொள்வது வழக்கமாகும். இந்த ஆலயத்தின் உற்சவ காலத்தில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கமாகும். இந்த நிலையில் கோயிலின் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க உதவுமாறு இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-426)

## குமாரபுத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஒக.17
கிளிநொச்சி குமாரசாமிபுரத்தில் அதிகரித்துக் காணப்படும் சட்ட விரோத மதுபான உற்பத்தி களைக் கட்டுப்படுத்த வேண்டு மென கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள குமாரசுவாமிபுரம் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றன.
அத்துடன் இந்த நடவடிக்கை காரணமாகப் பல்வேறு வகையான சமூகச் சீரழிவுகளும், குடும்பப் பிணக்குகளும் இங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன.
ஆனால் இந்த நடவடிக்கைகள் இதுவரை உரிய அதிகாரிகளால் நிறுத்தப்படவில்லையென இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-6)

## குளக்கட்டின் துவாரங்களை அடைக்குமாறு கோரிக்கை

### கனகராயன்குளம் மக்கள் விடுத்தனர்

மாங்குளம், ஒக.17
கனகராயன் குளக்கட்டில் ஏற்பட்டுள்ள துவாரங்களை மழைக்கு முன்னர் சீர்செய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கடந்த ஆண்டு ஏற்பட்ட பெருமழையினால் குளம் நிரம்பியதுடன் குளக்கட்டில் துவாரங்களும் ஏற்பட்டுள்ளதால் குளத்து நீர் குடிமனைக்குள் புகக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
கடந்த மழையின்போது நெடுங்கேணி பிரதேச செயலகத்தினால் இந்தப் பகுதிப் பொது மக்கள், ராணுவத்தினர் ஆகியோரின் உதவியுடன் அணைக்கட்டில் ஏற்பட்ட துவாரங்கள் தற்காலிகமாக அடைக்கப்பட்டன.
ஆனால் இன்னமும் நிரந்தரமான புனரமைப்பு வேலைகள் இடம்பெறவில்லை. மேலும் ஏ-9 வீதியில் உள்ள குறிசுட்டகுளம், கனகராயன்குளம் ஆகிய குளங்களில் உடைப்பு ஏற்பட்டு ஏ-9 வீதிக்குக் குறுக்காக நீர் பாயக்கூடிய அபாய நிலையும் உருவாகும்.
எனவே குளங்களுக்கு அருகில் இருக்கும் கிராம மக்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டுமாயின் கனகராயன்குளத்தின் அணைக்கட்டில் ஏற்பட்டுள்ள துவாரங்களை மழைக்கு முன்னர் அடைத்து விடுமாறு அந்தப் பகுதி கிராம சேவகரிடமும், வவுனியா வடக்கு பிரதேச செயலரிடமும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)

## அரச பொது ஊழியர் சங்கம் கிளி, முல்லையில் ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஒக.17
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டக் கிளைகளின் அங்குரார்ப்பணக் கூட்டங்கள் ஒக்டோபர் மாதம் 16ஆம் மற்றும் 18 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
போர்ச் சூழ்நிலை காரணமாக 2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாமலிருந்த மேற்படி இரு கிளைகளையும் ஊழியர்களின் நலன்கருதி மீண்டும் இயங்க வைக்குமாறு உறுப்பினர்கள் சங்கத் தலைவரிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி இரு கிளைகளையும் புனரமைப்பதற்கான ஒழுங்குகளை சங்கத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.
இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்துக்கான கூட்டம் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை மண்டபத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கூட்டம் 18 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்திலும் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.
இதற்கான சகல ஒழுங்குகளையும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தியும் முல்லை மாவட்ட இணைப்பாளர் எஸ். பற்குணராஜாவும் மேற்கொண்டுள்ளனர்.
மேற்படி சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேரவிரும்புவோர் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-115)

### வருமானவரி பரிசோதகர் பதவி வெற்றிடம்

கரைச்சிப் பிரதேச சபையில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர் அடுத்தமாத ஆரம்பத்தில் ஓய்வுபெறவுள்ளதால் மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பிரதேச சபைத் தவிசாளர் வடமாகாண முதன்மைச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் ஒரே தடவையில் அளவுக்கதிகமான பணியாளர்களை இடமாற்றம் செய்தமை மற்றும் ஓய்வு, பணி விலகல், தற்காலிக விடுமுறை பெற்றமை போன்ற காரணங்களால் சபையில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சந்தைகள், இறைச்சிக் கடைகள், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. வருமானப் பரிசோதகர் இல்லாவிடின் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுமென்றும் பிரதேச சபைத் தவிசாளர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க)

## கிளிநொச்சி நகரில் அனுமதிக்கப்படாத இடங்களில் அமைக்கப்படும் வீடுகள்

கிளிநொச்சி நகரில் தாழ்ந்த நிலங்களிலும் மின்சாரக் கோபுரங்களுக்கு அருகிலும் அனுமதி பெறாது வீடுகளை அமைக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது. ஆனந்தபுரம், இரத்தினபுரம் பகுதிகளிலேயே இவ்வாறு வீடுகள் அமைக்கப்படுகின்றன. கிளிநொச்சி நகரில் காணி பிடிக்க வேண்டும் என்ற நோக்குடன் வசதி படைத்த சிலர் மழை காலத்தில் வெள்ளம் பாயும் பகுதிகளிலும், மின்சாரக் கோபுரங்களுக்கு அருகிலும் இவ்வாறு வீடுகளை அமைத்து வருகின்றனர். இவ்வாறான வீடுகளை அமைக்கும் பணிகளுக்கு அரச அதிகாரிகளின் மறைமுக ஆதரவும் இருப்பதாகத் தெரிய வருகின்றது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆட்படுவீர்கள். குடும்பத்தில் பல விடயங்களையும் நீங்கள் பார்க்க வேண்டி வரும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.



**இடபம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**மிதுனம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசுக் காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கடகம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புகக் கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.



**சிங்கம்:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.



**கன்னி:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

**நாளை**

ஆவணி-02 ஞாயிற்றுக்கிழமை 18.08.2013
திதி: துவாதசி பி.ப.2.59 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப.05.31 வரை
சுபநேரம்: 9.05 - 10.35 வரை
இராகுகாலம்: 04.35 - 06.05 வரை



**துலாம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுங்கள்.



**விருச்சிகம்:** மன உளைச்சல் ஏற்படும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். மற்றவர்களுக்கு பணம் வாங்கித் தருவதிலும் குறுக்கே நிற்க வேண்டாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.



**தனுசு:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்கக் கூடும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பழைய பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காண்பது நல்லது. உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.



**மகரம்:** நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.



**கும்பம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.



**மீனம்:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 1 | 5 | | | |
| | | 1 | | 2 | | 9 | 8 | |
| 5 | | 7 | 4 | | | | | 2 |
| 6 | 5 | | | 9 | 3 | 8 | | |
| | | | 2 | 6 | 7 | | | |
| | | 2 | 8 | 5 | | | 6 | 9 |
| 7 | | | | | 2 | 4 | | 6 |
| | 3 | 5 | | 7 | | 2 | | |
| | | | 5 | 4 | | | 7 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 4 | 2 |
| 5 | 8 | 4 | 1 | 3 | 2 | 7 | 6 | 9 |
| 1 | 2 | 7 | 9 | 6 | 4 | 5 | 8 | 3 |
| 6 | 7 | 1 | 2 | 4 | 5 | 9 | 3 | 8 |
| 2 | 9 | 3 | 6 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 4 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 | 7 | 6 |
| 7 | 4 | 6 | 8 | 2 | 1 | 3 | 9 | 5 |
| 8 | 1 | 5 | 4 | 9 | 3 | 6 | 2 | 7 |
| 9 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
02.01.1943



மறைவு
17.07.2013

## அமரர் சுப்பிரமணியம் ஆறுமுகம்

கடந்த 17.07.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி.இணையம் மூலம் ஆறுதல் தெரிவித்தோர், துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி, ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்று தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**சோழாவத்தை,**
**மகாத்மா வீதி, நெல்லியடி,**
**021 226 4104, 077 455 1007**

**குடும்பத்தினர்.**

# நீங்கா நினைவலைகளில் ஐந்தாண்டு

மலர்வு
24.08.1940



உதிர்வு
17.08.2008

## திருமதி வின்சன்டி போல் பிலோமினா

ஐந்தாண்டு சென்றாலும் ஈரவிழி காயவில்லை
உங்கள் அன்பு முகம் பார்க்காது உள்ளம் வாடுதும்மா
வார்த்தை ஏதுமில்லை எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பியழுகின்றோம் அம்மா!

தேடுகின்றன விழியெல்லாம் வழியோரம்
உமைக்காண முடியவில்லையே
உங்கள் வரவு இனிச் சாத்தியமில்லை என்றபோதும்
மறுஜென்மம் எனும் சொல்லை மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் மனதில் உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்—அம்மா
உம் ஆன்மா அமைதியில் சாந்திபெற
எல்லாம் வல்லவரை வேண்டுகின்றோம்.



'றோஸ் கோட்',
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

என்றும் நினைவுகளுடன்
கணவர்,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார்,உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்போன ஏணி மீட்பு

வலி.வடக்கு, ஒக.17

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் காணாமல் போன இரும்பிலான ஏணி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்து பொலிஸார் மற்றும் வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களால் மீட்கப்பட்ட சம்பவம் இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் நோயாளர்களின் விடுதிகளுக்கு அண்மையில் கட்டடத்தில் பழுது பார்த்துவிட்டு வைக்கப்பட்ட ஏணியே காணாமல் போயிருந்தது. ஏணியுடன் கழிவு நீர் செல்லும் வாய்க்காலை துப்புரவு செய்ய அமைக்கப்பட்ட மான்ஹோலுக்கு போடப்பட்ட இரும்பிலாலான மூடியையும் எவரோ திருடிச் சென்றுள்ள னர்.

இதனை அவதானித்த வைத்திய சாலை ஊழியர்கள் அயலில் தேடுதல் நடத்திய வேளையில் வைத்திய சாலைக்கு பின்புறம் உள்ள பற்றைக்குள் மான் ஹோல் மூடி காணப்பட்டதுடன் பொலிஸார் குறிப்பிட்ட இடத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தொலைபேசியில் உரையாடிய ஒருவரை பிடித்து விசாரித்ததைத் தொடர்ந்து ஏணி ஒளித்து வைக்கப்பட்டிருந்த வீட்டை அவர் அடையாளம் காட்டியிருந்தார்.

அங்கு ஏற்கனவே இரும்புக் குழாய்கள் வெட்டிக் கொண்டு இருந்த இருவர் பொலிஸார் வருவதைக் கண்டு தப்பி ஓடிய போதிலும் வழக்குப் பதிவு செய்யாத நிலையில் பொலிஸார் பொருள்களை மீட்டுள்ளனர்.

இத்தகைய நிகழ்வுகள் திருடர்களுக்கு சாதகமாக அமைவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (வ-86)

# வீதி மூடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## கொடிகாமத்தில் நேற்று



தென்மராட்சி, ஒக.17

கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள வீதியை மறித்து ரயில் நிலையத்தின் மேடை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பெருமளவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வீதி ரயில் நிலைய களஞ்சியக் கட்டடத்தின்.(குட்செற்) பாவனைக்கென முன்னைய காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அந்த வீதியை ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் ஆசிரியர்களுடன் பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வீதியை மூடி மேடை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் அந்த வீதியைத் தொடர்ந்து பாவிக்க அனுமதிக்க வேண்டும் என போராட்டம் நடத்துவதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த வீதியைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்குமாறு கோரும் மனு பிரதேச சபை உறுப்பினர் கு.சர்வானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## அடித்துக் காயப்படுத்திய குற்றம் 22 பேர் கைதாகினர்

### செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.17

பிறரை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது தவிர, சந்தேகத்தின் பேரில் 18 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 9 பேரும், சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்த குற்றச்சாட்டில் 16 பேரும், திருடிய குற்றச்சாட்டில் 4 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 6 பேரும், கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 2 பேரும், மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 5 பேரும், வீட்டினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் ஒருவரும், வீசா இல்லாமல் இங்கு தங்கியிருந்த இந்தியப்பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவரவரது குற்றத்துக்கேற்ப அபராதம் விதிக்கப்பட்டும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளதோடு, சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்-என்றார். (வ-4-86)

## காசோலை மோசடி இரு முறைப்பாடுகள் பதிவு

### பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி தெரிவிப்பு



கொழும்பு, ஒக.17

5 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் 2 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக நோக்கில் பெறப்பட்ட காசோலைகளே அவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி மற்றும் காங்கேசன்துறை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எஸ்.பத்திநாயக்க ஆகியோர் இதனைத் தெரிவித்தனர்.

யாழ். வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஒருவர், 3 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைப் பெற்று வங்கியில் பணம் வைப்பிலிடாது மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் குறித்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-4-86)

## பிரதேச செயலகத்தில் களவாடப்பட்ட 3 கைபேசி

தென்மராட்சி, ஒக.17

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஒரே நாளில் மூன்று கையடக்கத் தொலைபேசிகள் இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை பொதுமக்கள் தினமாதலால் மேசைகள் மீது வைக்கப்பட்டிருந்த வேளையில் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரினதும் அங்கு வந்த பொதுமக்கள் இருவரினதும் கையடக்கத் தொலைபேசியே களவாடப்பட்டுள்ள்தாகத் தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர் தனது மேசையில் வைத்துவிட்டு பொதுமக்களுக்கு சேவைகளை வழாங்கிக் கொண்டிருந்த வேளையிலும், பொதுமக்களுக்கு வைக்கப்பட்டுள்ள மேசையில் வைத்துவிட்டு தமது தேவைகளை எழுதிக்கொண்டிருந்த பொதுமக்கள் இருவரினதும் தொலைபேசிகள் கையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பாலைக் குற்றிகளுடன் சிக்கியது லான்ட்மாஸ்ரர்



சட்டவிரோதமாக பாலை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற நபர் கொக்குவில் நாச்சிமார் கோயிலடியை அண்மித்த இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். பாலை மரங்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் லான்ட்மாஸ்டருடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பாலை மரங்கள் எங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன என்பது தெரியவரவில்லை. மரக்கூட்டுத்தாபனத்தினருக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)

## உரமானியம் குறித்து பதிவுகள்

தென்மராட்சி, ஒக.17

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான உர மானியம் தொடர்பான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

உரமானியத்துக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால் அமைப்புக்குட்பட்ட அனைத்து நெற் செய்கையாளர்களையும் உடனடியாக பதிவு செய்யுமாறு அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

### முடிவில்லாத் துயரில் ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**சுகுணராசா நிமலன்**

தோற்றம் 1981.04.22 — மறைவு 2006.08.17

அனுதினமும் உம் நினைவுகளுடன் உம் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, அக்கா, அத்தான், மனைவி, மகன், மருமக்கள்.

கரந்தன், நீர்வேலி.

(31340)(13.6.13)

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி வரதலக்ஷ்மி வைற்றஸ்**



தோற்றம் 31.10.1939 — உதிர்வு 03.09.2010

பாசத்துடன் அரவணைத்து அன்புடன் எம்மைத்தாங்கி எம் குடும்பத்தைக் கட்டிக்காத்த எமது அன்புத்தாய் இன்று எம்மை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனாலும் நீங்காத உங்கள் நினைவுகளுடன் ஏங்கித்தவிக்கும்

அன்புக் கணவர், மகள், மகன், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

இல.61, விபுலாநந்தர் வீதி, அரியாலை.

சி/11303) (45.6.3)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபாபதி மனோரஞ்சனா



காரைநகர், நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபுறோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி மனோரஞ்சனா 13.08.2013 இல் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசபாபதியின் அன்பு மனைவியும், சத்தியசொரூபி (வயலின் ஆசிரியை), சத்தியசிவம் (RYERSON UNIVERSITY AEROSPACE ENGINEER) ஆகியோரின் அன்புத் தாயாரும், தீபனின் அன்பு மாமி யாரும், நிலாவின் அன்புப் பேர்த்தியும், தியாக லிங்கம் (லண்டன்), தர்மராசா (நியூயோர்க்), கனகராசா (கனெக்ஸ்), பஞ்சலிங்கம் (சிவமணி CTBC) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தநாயகி, மங்கையர்க்கரசி, காஞ்சனா, திருமகள் (ருத்திரா), சொர்ணாம்பிகை ஆறுமுகம் (காரைநகர்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தவராசா மற்றும் கமலாதேவி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை இறுதி அஞ்சலிக்கு கனடாவில் வைக்கப்பட்டு மறுநாள்ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று , பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மா.கனகசபாபதி (கணவர்)
T.P- 416 267 6999

சொர்ணாம்பிகை ஆறுமுகம் (மைத்துனி)
T.P- 021 300 6529

புதுறோட், காரைநகர்.

(31402)(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

கொக்குவில் அச்சுக்கூட வீதியில் (Press Lane) அமைதியான சூழலில் நன்னீர், சுற்றுமதிலுடன் கூடிய 2 பரப்பில் அமைந்த புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு. இது K.K.S வீதிக்கும் ஆடியபாதம் வீதிக்கும் மிக அண்மையாக உள்ளது.

தொடர்பு: 077 247 0590, 077 111 3142, 077 854 3106 (31380) (7.6.3)


## வைக்கோலுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக.17

வரணிப் பிரதேசத்தில் தற்சமயம் வைக்கோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து இப் பகுதிக்கு வரும் வைக்கோல் கொள்வனவாளர்களை நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது. முன்னர் இங்கு வைக்கோல் விற்க முடியாத நிலை இருந்து வந்தது. தற் சமயம் தமது சொந்தத் தேவைக்கே இங்குள்ளவர்கள் வைக்கோலை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த போக நெல் அறுவடையின்போது நெல் அறுவடை செய்யும் இயந்திர உதவி கொண்டு பெரும்பாலான விவசாயிகள் நெல் அறுவடை செய்ததே இதற்குக் காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-122)

## விபத்து; உயிர்ச் சேதம் இல்லை



பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் இரு வாகனங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின. அவற்றை செலுத்தி வந்தோரும் சிறு காயங்களுக்குள்ளாகினர். (வ-17)


## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு மாதிரி வினாத்தாள்

அனைத்து பெற்றோர்கள், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புலமைச்சுடரின் இறுதிக்கருத்தரங்கு வினாத்தாள்

**20ஆம், 21 ஆம் திகதிகளில்**

உங்கள் அபிமான உதயன், சுடர்ஒளி நாளிதழ்களில் புள்ளித்திட்டத்துடன்கூடிய விடைகளுடன் வெளிவரவுள்ளன.

இன்றே உங்கள் பிரதிக்கு முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு :
தொ. பே. : 011 5738855, 071 6850005


## சந்தையில் நேற்று பனம்பழங்களும்



யாழ்ப்பாணம், ஒக.17

திருநெல்வேலி சந்தையில் நேற்று மரக்கறிகளுடன் பனம் பழங்களும் விற்பனைக்கு வந்திருந்தன.

பனம்பழம் ஒன்று 25 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து தற்போது இங்கு வந்துள்ளவர்களும் பனம்பழத்தை விரும்பி வாங்கிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. கணிசமான அளவு பனம்பழம் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டிருந்ததாகவும் மக்கள் அவற்றை விரும்பி வாங்கிச் சென்றதாகவும் வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-7)

## இசை நாடகத் துறையை வளர்த்தெடுக்க சைவத் தமிழ் நிறுவனங்கள் முன்வரவேண்டும்

யாழ்ப்பாணம், ஒக. 17

எமது பாரம்பரியம் மிக்க இசைக்கலை வடிவம் அருகிச் செல்கிறது. இசை நாடகத் துறையை வளர்ப்பதற்கு சைவத்தமிழ் நிறுவனங்கள் முன்வர வேண்டும். இவ்வாறு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

கீரிமலை சிவபூமி மடத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு நடைபெற்ற இசை நாடக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

புராண இதிகாச வரலாறுகளைத் திருக்கோயில்களிலும், சமய வைபவங்களிலும் கிராம அரங்குகளிலும் வளர்த்த இசை நாடகத்துறையினருக்கு எமது சமூகம் எப்போதும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை பக்தி உணர்வுக்கு ஆட்படக் கூடியதாக உணர்வு பூர்வமாக இசை நாடகங்கள் எமது சமூகத்தில் அரங்கேற்றப்பட்டன.

இதனூடாக ஆன்மிக சிந்தனை வழங்கப்பட்டது.

இத்துறையின் வளர்ச்சியில் நாம் அக்கறை செலுத்தாது விடுதல் பெரும் தவறாகும். இன்று நாட்டார் வழக்கியல் கழகம் அரிச்சந்திர மயான காண்டத்தை மேடை யேற்றுவது மகிழ்ச்சிக்குரியது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் இதுபோன்ற இசைக்கலை நிகழ்வுகளை இவர்கள் மேடையேற்றுகிறார்கள். பட்டதாரி மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் எனப் பலரும் இணைந்து இதனை வழங்குகிறார்கள். இசை நாடகத் துறையை வளர்ப்பதில் பேராசிரியர் அமரர் சு.வித்தியானந்தன் அரும்பாடு பட்டார். நடிகமணி வைரமுத்து போன்ற கலைஞர்களை அழைத்து இந்தக் கலையின் சிறப்பை மாணவர்கள் தெரிந்து கொள்ளச் செய்தார்.

இன்றைய சமூகம் இவற்றை உணர்ந்து இந்தக் கலை வடிவத்தைப் பாதுகாக்க ஒன்று பட்டு உழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

### பட்டச் சான்றிதழ் வழங்கல்

1. கலைமாணி (சிறப்பு/ பொது)
2. வணிகமாணி
3. இசைமாணி
4. நடனமாணி

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் 21.08.2013 (புதன்கிழமை) தொடக்கம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள்அலகில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா500/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

(C/11189)(3.6.11)


### வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெரு நாவலர் வீதி சந்திக்கு அருகில் இல. 64, மருதடி வீதியில் அமைந்துள்ள மூன்று பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. பிரித்தும் விற்கப்படும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். (9.00-6.00 வரை) (31405) (7.6.3)

தொடர்பு: 077 602 8888,021 222 7286

### திருமண சேவை

டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், சைவ போசனமுள்ள மணமக்கள், செவ்வாய் பாவம் கூடிய குறைந்த மணமக்கள் வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்கள், விவாகரத்து பெற்ற உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களும் எம்மிடமுள்ளனர். (31403) (7.6.3)

நாலிங்கலிங்கம் திருமண சேவை
இல. 435/3, கோயில் வீதி, நல்லூர். தொ.பே. 077 607 0862

### ST.ANTONY'S
### கணினிகள் மலிவு விற்பனை

IBM Full Set - 12900/=
HP D/C Full Set - 24750/=
TAP PC 7" - 11900/=

ஒரு வருட உத்தரவாதம்
Free - 4GB Pen/ WeBcam/ Headphone
Wifi connection மற்றும் கணினிசார்பான உதிரிப்பாகங்கள், திருத்தங்கள் உண்டு.

187, K.K.S வீதி, யாழ். நகர்.
(C/11129) (3.6) 0212224865 / 0750698608

### வீடு விற்பனைக்கு - சுண்டுக்குளி

All Reasonable offers Considered. 67 Crossette Lane (றக்காலேன் முடிவில், கற்பகவிநாயகர் கோயில் அருகில்) 5 அறைகள் கொண்ட இரட்டை மாடிவீடு நவீன வசதிகள், அறைகளுக்கு 3 இணைந்த குளிப்பு /கழிவு அறைகள், மின்சாரம், வாயு (gas), விறகுக்கு ஏற்ற மூன்று சமயல் அறைகள். வீட்டு நிலப்பரப்பு 3115 சதுரஅடி, காணி 3 பரப்பு. வீட்டைப் பார்த்த பின் விலை நியமிக்கலாம்.

தொடர்பு: 077 634 3863
Sureka.goringe@gmail.com.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் 140,000பேர் பாதுகாப்பற்ற பாலுறவில்

கொழும்பு; ஓக.17
நாட்டில் 140000 பேர் ஒவ்வொரு நாளும் பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.
பாலியல் தொழிலாளிகள் மற்றும் திருமணத்திற்கு புறம்பான உறவுகளின் மூலம் இவ்வாறு தனிப்பட்ட நபர்கள் பாலுறவு கொள்வதாக சுகாதார அமைச்சின் பால்நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.
தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எயிட்ஸ் நோய்த் தடுப்பு தொடர்பான விழிப் புணர்வு நடவடிக்கைகளின் ஊடாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.
எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை 20 வீதமாக உயர்வடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த எண்ணிக்கை 100 வீதத்தினால் அதிகரித்துள்ளது. விரும்பத்தகாத பாலுறவுகளைத் தவிர்ப்பதன் மூலம் பால் நோய்களைத் தவிர்க்க முடியும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (எ)

# அரச சொத்துக்கள் எவற்றையும் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடாது

கொழும்பு. ஓக.17
ஐ.ம.சு.மு. வேட்பாளர்கள் அரச சொத்துக்களை பயன்படுத்தவோ தேர்தல் சட்டங்களை மீறவோ கூடாதென எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் தேர்தல் சட்டத்தை மீறும் வேட்பாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஐ.ம. சு.மு. செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.
மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தேர்தலில் போட்டியிடும் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் விடுமுறை பெற்றே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும். அரச வாகனங்களை ஒப்படைக்கவும் பணிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள் போன்றோருக்கும் தமது வாகனங்களை கையளிக்குமாறு அறிவித்துள்ளோம்.
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேர்தல் ஆணையாளர் எமக்கு கடிதம் மூலம் அறிவித்து வருகிறார். அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (எ)

## தேர்தல் மாவட்டங்களில்
# அரசியல்வாதிகளுக்கு விடுதிகளை ஒதுக்க இடமளிக்க வேண்டாம்

வடமாகாண சபைத் தேர்தல் இடம் பெறும் மாவட்டங்களில் உள்ள அரச சுற்றுலா விடுதிகள், ஓய்வுகால விடுதிகள் மற்றும் வாடி வீடுகளை அரசியல் வாதிகளுக்கு முன்னதாகவே முழுமையாக ஒதுக்கிக் கொடுக்க இடமளிக்காதிருக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அமைச்சுக்களுக்கும் செயலாளர்களுக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளார்.
இது சம்பந்தமாக பலதரப்பட்ட முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்கு தினமும் கிடைத்துவருவதன் காரணமாகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசியல்வாதிகள் இந்த விடுதிகளில் தங்கியிருந்து வேட்பாளர்களுக்கு அனுசரணை வழங்குகின்றனர்.
தேர்தலின்போது தனிப்பட்ட ரீதியில் தேர்தல்கள் ஆணையாளருக்குப் பொறுப்புக் கூறும் அதிகாரிகள் குழுவொன்று சேவையில் அமர்த்தப்பட்டுள்ளது.
இந்த விடுதிகளில் தங்கியிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் குறித்து அந்த அதிகாரிகள் மூலம் தகவல்களைப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ-22)

# பொன்டேரா நிறுவனம் மீது வழக்குத் தொடர முஸ்தீபு

## தொழிற்சங்கவாதி சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு. ஓக.17
பொன்டேரா நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என சுகாதார சேவைகள் தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.
பால் மாவில் டிசிடி பதார்த்தம் இருப்பதாக பரிசோதனைகளில் தெரிய வந்துள்ள நிலையில் தமது நிறுவன உற்பத்தி பால்மா சிறந்தது என பொன்டேரா நிறுவனம் பிரச்சாரம் செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொன்டேரா நிறுவன பால்மா தொடர்பிலான விளம்பரங்களுக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் தற்காலிக தடை விதித்துள்ள போதும், அந்த உத்தரவை மீறி நிறுவன உற்பத்திகள் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.
இதன்மூலம் நீதிமன்றம் அவமதிக்கப்படுவதாகவும் அதனை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.
பால் மாவில் இரசாயன பதார்த்தம் அடங்கியுள்ளதாக நியூசிலாந்து அரசே ஏற்றுக் கொண்டுள்ளதுடன் பொன்டேரா நிறுவன பணிப்பாளர் பதவி விலகியுமுள்ளார்.
ஆனால் இலங்கையை சேர்ந்த அந்த நிறுவன பிரதிநிதிகள் மக்களை ஏமாற்றி பொருள்களை விற்பனை செய்ய முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ)



தேசிய கைப்பணிக் கண்காட்சி ஷில்பா 2013, கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமானது. பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கண்காட்சியில், அமைச்சர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# புகைப்பவர்களின் எண்ணிக்கை 7 வீதத்தினால் குறைவு

இலங்கையில் புகைத்தல் பாவனையாளர்களின் எண்ணிக்கை 7 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் புகைப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
மூதாதையர்களிடையே அதிகளவில் புகையிலைப் பாவனை காணப்பட்டது. எனினும் தற்போதைய இளைஞர்கள் மத்தியில் புகையிலைப் பாவனை வெகுவாகக் குறைந்துள்ளது.
தற்போது சிகரெட்டுக்களின் விலை உயர்வும் மக்கள் மத்தியில் குறிப்பாக இளையோர் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் புகைத்தலுக்கு எதிரான செயற்றிட்டங்களின் ஊடாக மக்களைத் தெளிவு படுத்தியமையும் புகைத்தல் பாவனை குறைவடைவதற்கு முக்கிய காரணம்.
இதேவேளை, இலங்கையில் ஒரு நாளைக்கு சுமாராக ஆயிரம் பேர் இறக்கின்றனர். குறைந்தது 650 பேர் இவ்வாறான புகைத்தல் மற்றும் மதுபான பாவனையினால் இறக்கின்றனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிங்கள பேரினவாத அரசை வீழ்த்த சிறுபான்மை சமூகங்கள் ஒன்றுபட வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் அழைப்பு

அம்பாறை. ஓக.17
"இன்றைய அரசு சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்க மறுத்து வருவதுடன், அந்த மக்களின் சமய வழிபாட்டு உரிமைகளை அப்பட்டமாகவும் மீறி வருகின்றது. எனவே இன்றைய சிங்கள, பௌத்த பேரின வாத அரசை வீழ்த்துவதற்கு சிறுபான்மை சமூகங்கள் ஒன்றுபட வேண்டும்"
இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.
கொழும்பு கிராண்ட்பாஸ் மஸ்ஜிதுல் தீனுல் இஸ்லாம் பள்ளிவாசல் தாக்குதல் மற்றும் அநுராதபுரம் மல்வத்து ஓயா பள்ளிவாசல் இடித்து தரை மட்டமாக்கப்பட்ட சம்பவங்களைக் கண்டித்து அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அறை கூவல் விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையை மாறி மாறி ஆட்சி புரிந்து வந்த அரசுகள் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து வந்ததன் விளைவே நாட்டில் ஆயுதப் போராட்டம் தலை தூக்குவதற்குக் காரணமானது.
1970 களில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசுகொண்டு வந்த முதலாவது குடியரசுச் சாசனமும், 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசு கொண்டு வந்த நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையும் சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ள வில்லை.
அதேபோல் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசும் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்க மறுத்துவருவதுடன், அம்மக்களின் சமய, வழிபாட்டு உரிமைகளை அப்பட்டமாகவே மீறி வருகின்றது.
குறிப்பாக முஸ்லிம்களின் [illegible] பள்ளிவாசல் தொடக்கம் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் வரை 24 பள்ளி வாசல்கள் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தொழுகையில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.
**அநுராதபுரத்தில்**
கடந்த வியாழக்கிழமை அநுராதபுரம் மல்வத்து ஓயா பள்ளிவாசல் நகர சபையின் கட்டளைக்கு இணங்க கனரக வாகனங்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.
பள்ளிவாசலினுள்ளிருந்த குர்ஆன், தப்ஸீர் மற்றும் ஏனைய ஆவணங்களைக் கூட எடுப்பதற்கு அங்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையென்பது வேதனையான விடயமாகும்.
**ஜனாதிபதியின் வாக்குறுதி**
2012 இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் பிரசாரத்திற்காக கல்முனை வந்த ஜனாதிபதி, பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் மத்தியில் உரை [illegible] அமைச்சரும் தனது கவனத்துக்கு கொண்டு வரவில்லையெனக் கூறியதுடன் இனி ஒரு பள்ளி வாசலும் தாக்குதலுக்குள்ளாகாது எனவும் பிரகடனம் செய்தார். ஆனால் அவரது கூற்று தற்சமயம் முற்றாகவே மீறப்பட்டுள்ளது.
**சட்டம், ஒழுங்கு**
நாட்டில் இன்று முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரை சட்டம், ஒழுங்கு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. பௌத்த தேரோக்கள் தலைமையில் சிங்களக் காடையர்களும், குண்டர்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வந்து பள்ளி வாசல்கள் மீது தாக்குதல் நடத்திய போதெல்லாம் பொலிஸார் வேடிக்கை பார்த்து நின்றனர்.
இந்தச்செயலானது மஹிந்த ராஜபக்ஷ அரசின் பாரபட்சத் தன்மையை அப்பட்டமாகவே வெளிப்படுத்தி நிற்கின்றது.
சிறிமாவோ அரசில் புகழ் பூத்த முஸ்லிம் அமைச்சர்கள் இருந்த போதும், புத்தளம் பள்ளிவாசல் படுகொலைக்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லை.
ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் முஸ்லிம் சமூகத்துக்காக அன்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தமை வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.
அதேபோன்று காலியில் நடந்த கலவரம் தொடர்பிலும் அன்று எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அண்ணன் அமிர்தலிங்கம் குரல் கொடுத்தார்.
அதேவரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் இன்றைய தலைவர் இரா.சம்பந்தன் ஐயா முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்தமையையும் நாம் மறந்துவிடக்கூடாது.
**நம் கண்முன்**
இதேவேளை, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலும், மல்வத்து ஓயா பள்ளிவாசல் உடைத்தெறிப்பும் இன்று புத்தளம் பள்ளிவாசல் படுகொலையை நம்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன.
இந்த நிலைமை மத ரீதியான ஒரு போராட்டத்தைத் தோற்றுவித்து விடுமோவென்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## சபாபதி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. பஸ் நடத்துனர்)

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் 126 A, அரசடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி சுப்பிரமணியம் நேற்று (16.082013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (அதிபர் - யா/சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), வசந்தன் (சுவிஸ்), திருமாலினி (கனடா), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜாராணி (ஆசிரியை-யா/இந்து மகளிர் கல்லூரி, ரூபமதி (சுவிஸ்), உதயகுமார்(கனடா), மேனகா(லண்டன்) ஆகியோரின் மாமனும், சாருகா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாஸ்வதன் (யா/இந்துக் கல்லூரி), ஆரபி, விதுசன், சாரங்கன், பிரதீபன், ஆரணி, வினோஜன், சாருயன், நிரூயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அன்னம்மா மற்றும் சின்னராசா (கனடா), நல்லம்மா, நடராசா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்கள்ளான சிவகுரு, சின்னையா மற்றும் சௌந்தராராணி, சின்னத் தம்பி, தங்கராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

126 A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(31422)
(10)

தகவல்: சு. பரமேஸ்வரன்
0777 24 2326, 021 222 5530

## திருமதி இராசம்மா ஐயாத்துரை



மீனாட்சி அம்மன் கோவிலடி சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் தச்சந்தோப்பு, வேலம்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது 91/15, பத்திரகாளி கோயிலடி வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஐயாத்துரை கடந்த 13.08.2013 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- மரகதம் தம்பதியரின் அருமை மருமகளும் ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து, நாகம்மா, கார்த்திகேசு ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், சுப்பிரமணியம், சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ருக்மணி, குலமணி, கனகலட்சுமி, பரமேஸ்வரன், சாம்பசிவம், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நாகராசா (இ.போ.ச. சாரதி), இராமச்சந்திரன், இராசலிகங்கம் (இராசம் லொறி பொடி பில்டர்), நேசமலர், லோகேஸ்வரி (ஆசிரியை), விஜயலட்சுமி ஆகியோரின் அருமை மாமியும் சதீஸ்ரூபன், சுதர்ஷன், சிந்துஜா, சுஜிதா, அகிலகாந், சுகந்தன், சுகாஜினி, ரகுராம், தர்ஷன், சசிகரன், நிஷாந்தினி, கலைமதி, வசந்தராஜ், பிரபாலினி, தர்ஷாளினி, மனோராஜ், ரமணன், ருக்சாந், அகல்ஜா, கேசவன், கயாளினி, தர்ஷிகன், கௌசிகா, கிருசிகன், அவந்திகா ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும் சிவிஸ்கா, தனுஸ்கா, அனஸ்கா, அனோஜின், தருண், அபிலாஸ், அகர்சன், ராகேஷ், அஸ்விகா, அக்ஷரா, அனிஸ்ரா, அஷ்நயா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோயிலாக்கண்டி மேற்கு, வேலம்பிராய் புனைமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91/15, பத்திரகாளி கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
0217903589, 0776681338
பரமேஸ்வரன்

(31423)

தகவல்:
வேலுப்பிள்ளை ஐயாத்துரை (கணவர்)
(முன்னாள் இ.போ.ச. சாரதி) மக்கள்,
மருமக்கள். வேலம்பிராய்

## திருமதி வேதநாயகி நமசிவாயம்

(பெண்கள் தொண்டர் சபை ஆரம்பகால உறுப்பினர்-
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம்)



வவுணாவத்தை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கிழக்கு வளவு மல்லாகத்தை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி வேதநாயகி நமசிவாயம் நேற்று 16.08.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கதிரவேலு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகெங்கை, சிவநாயகியின் சகோதரியும், சர்வானந்தன் (Plate limited, Colombo), நித்தியானந்தன் (ஜேர்மனி), கணேந்திரன் (கனடா), அஞ்சனா (ஜேர்மனி), விஜயபாலன் (அளவெட்டி- மல்லாகம் ப.நோ. கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சித்திராங்கனி, வசந்தி, கெங்காதேவி, சந்தன குமாரன், மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியும், வல்லிபுரம், சண்முகநாதனின் (வவுனியா) சிறிய தாயும், செந்தூரன், நிதர்சன், நித்தியா, கவிதா, கோபிசாந், ஆரண்யா, வித்தியா, சிவகனி, தர்மதன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜேந்தினி (யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக் காக பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிழக்கு வளவு
தம்பி குடும்பம், மல்லாகம்.
T.P: 077 136 4164

(31417) (10,16)

தகவல்:
பிள்ளைகள்.

# குமார் பொன்னம்பலத்தின் நினைவுப் பேருரை

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் "தற்கால சர்வதேசசட்ட மற்றும் அரசியல் ஒழுங்கில் போருக்குப் பின்னரான தமிழர்களின் சுய நிர்ணய உரிமைப்போராட்டம்" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத் துறைவிரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் உரை நிகழ்த்துவார்.

(வ-14)

# விபத்தில் கொல்லப்பட்ட குடும்பஸ்தர் சடலம் அடையாளம் காணப்பட்டது

மோட்டார்சைக்கிள்- சைக்கிள் விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் உயிரிழந்தவரின் சடலம் ஐந்து நாள்களின் பின்னர் நேற்று அடையாளம் காணப்பட்டது.

சுழிபுரம் காளிகோயிலடியைச் சேர்ந்த நாகன் வைரவன் (வயது-75) என்ப வரே கடந்த 11 ஆம் திகதி விபத்தில் சிக்கி சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மறுநாள் உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்தும் எவரும் உரிமை கோராததால் ஐந்து நாள்களாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில் அவரது மகன் நேற்று அடையாளம் காட்டி சடலத்தை எடுத்துச் சென்றார்.

(ஓ-4-78)

# கண்ணீர் அஞ்சலி

சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி.மி.சொமாலை
பெரேரா அ.ம.தி. அவர்களின் அன்புத்தாயார்

## மிக்கேல் செபஸ்ரியம்மா

அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(31413) (46.8.3)

பணியாளர்கள்
சுகவாழ்வு நிலையம், 217, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி புவனகுமார் (புத்தா)



கண்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட நல்லதம்பி புவனகுமார் 15.08.2013 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் நல்லதம்பி-புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா-தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மகுலராணியின் அன்புக் கணவரும், கௌதமி, பிரசாந் ஆகியோரின் அருமைத் தந்தையும் சாந்தகுமார், ஜெயக்குமாரி (ராசாத்தி), மோகனகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மகுலராணி, மகேந்திரன், தவேந்திரன், லோகேஸ்வரன், வசந்தகுலராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.08.2013 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(C/11193)
(7.8.3)

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்
குடும்பத்தினர்
தொ.பே. 021 224 1390

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம் (ஆடம்மான்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம் நேற்று முன்தினம் (15.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- முத்தம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், ஞானலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம், மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி திருஞானம், திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வரதராசா (சுவிஸ்), செல்வராசா (பிரான்ஸ்), சாந்தினி, வதனி (பிரான்ஸ்), றஞ்சினி (பிரான்ஸ்), தவலிங்கம், குணலிங்கம் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினேஸ்வரி (சுவிஸ்), அருந்ததி (பிரான்ஸ்), ஜெயசோதி, அண்ணாத்துரை (பிரான்ஸ்), பஞ்சசோதி (பிரான்ஸ்), கலாரதி, சாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், பிரசாந், நிதுஷன், அனோஜன், ஜெனார்த்தனன், சஞ்சீவன், அபிராஜினி, அனுராதை, திவ்வியா, துஷியா, தனுஜா, ஹரிசன், சாருஜன், கீர்த்திகா, நிதர்சனா, சௌமியா, சரணியா, வினோஜன், சபீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்.

(10,16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### சம்பந்தன், சுமந்திரனின் எம்.பி. பதவியை பறிக்குக

இவ்வாறு சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

"சம்பந்தனும், சுமந்திரனும் புலம் பெயர் புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எனவே, இவ்விவகாரம் குறித்து சம்பந்தப்பட்ட எம்.பிக்களும் அரச அறிவிப்பொன்றைக் கோரவேண்டும். பிரிவினை வாதத்துக்குத் துணைபோயிருப்பவர்களாயின் அது நாட்டின் அரசமைப்பை மீறும் செயலாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியும் என்று மேற்படி ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார். (கு)

### சிறிதரன் எம்.பியிடம் 5 ஆவது முறை விசாரணை

வலகத்துக்குச் சென்று அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அண்மையில் கனடாவுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அங்கு ஆற்றிய உரையில், 'ஈழ மண்ணில் இனி புலிகளை உருவாக்க முடியாது. கனடாவில் தான் இனிப் புலிகளை உரு வாக்க வேண்டும்' என்று கூறி யிருந்தார்.

அது தொடர்பிலும் பெண் களை ராணுவத்துக்கு இணைத்துக் கொள்ளுதல், காணிகள் அபகரிப்பு என்பன தொடர்பாக வும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் விசாரணை நடத்தப் பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-6)

### பிரமந்தனாறில் வியாழன் இரவு இளைஞர் அடித்துப் படுகொலை

நால்வரையும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்ட பதில் நீதிவான், அன்றையதினம் அடையாள அணி வகுப்பை நடத்துமாறும் உத்தர விட்டார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட இளைஞரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலத்தைப் பார்வையிட்ட பதில் நீதிவான் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற் கொண்டு அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தர விட்டார். (த-400-6)

### கூட்டமைப்பினர் மீது நெடுந்தீவில் தாக்குதல்

னரே தாக்கினார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக அமைப்பாளர் பேர்னாட் குற்றம் சுமத்தி உள்ளார். தான் தாக்கப்பட்டமை குறித்து ஆரியசேன அச்சம் காரணமாகவே பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை என்றும் அவர் மிகவும் பயந்துபோயுள்ளார் எனவும் பேர்னாட் மேலும் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பியின் சார்பில் வடமாகாணத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் தவராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்தச் சம்பவத்துக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. எமது வேட்பாளர்களோ உறுப்பினர்களோ இவ்வாறான செயலில் ஈடுபடவில்லை. சம்பவம்பற்றி நானும் கேள்வியுற்றேன். வீட்டு மதில் ஒன்றில் சுவரொட்டி ஒட்டப்பட்டமையால் அங்கு சிறு சலசலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நெடுந்தீவு முழுக்க முழுக்க ஈ.பி.டி.பியின் ஆதரவுக் கோட்டை என்பதால் அங்கு என்ன நடந்தாலும் குற்றச் சாட்டு ஈ.பி.டி.பியின் மீதே விழுகிறது என்று கூறினார். (த-4-7)

### வெலிவேரிய விசாரணைக்கு அவகாசம் கோரும்இராணுவம்

ணைக் குழு, அறிக்கை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வேலிவேரிய, ரத்துபஸ்வலவில் பொது மக்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்களில் 3 பேர் கொல்லப்பட்டு, 50 பேர் வரை காயமடைந்தனர்.

இதையடுத்து மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையிலான இராணுவ விசாரணைக் குழுவை கடந்த 2ஆம் திகதி, இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் தயாரத் நாயக்க நியமித்திருந்தார்.

பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர, பிரிகேடியர் இந்துனில் சில்வா, பிரிகேடியர் திலக் வீரக்கோன் ஆகியோரை உள்ளடக்கிய இந்த இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கையை 15 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த விசாரணைக் குழு இன்னமும் விசாரணைகளைப் பூர்த்தி செய்யாததால், எதிர்வரும் 21ஆம் திகதி வரை காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழு, வெலிவேரிய தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட படையினரின் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளது.

அதேவேளை, பொலிஸாரின் வாக்குமூலங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. வெலிவேரிய பொலிஸ் நிலையத்தில் வைத்து அடுத்த சில நாள்களில் பொதுமக்களின் வாக்குமூலங்களை இராணுவ விசாரணைக்குழு பதிவு செய்யவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த)

### குற்றங்களைக் காப்பவரே இங்கு பாதுகாப்புச் செயலர்

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அன்று வடக்கில் பல வருடங்களாக இருந்த புலிகளின் தீவிரவாதம் அழிக்கப்பட்டாலும், இன்று நாடு முழுவதும் அரசுடன் தொடர்புடைய தீவிரவாதம் இயங்கிவ ருகிறது.

உலகளாவிய ரீதியில் இலங்கையில்தான் பெண்கள் துஷ்பிரயோகம் அதிகளவில் இடம்பெறுகிறது. நாளொன்றுக்கு 7 பெண்கள் துஷ்பிரயோகமும், 3 சிறுவர் துஷ்பிரயோகமும் இலங்யையில் இடம்பெறுகின்றன.

இராணுவம், பொலிஸ் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினரால் அரசுடன் தொடர்புடைய தீவிரவாதம் இயங்கி வருகிறது. அரசு தமது அதிகாரத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்துகிறது.

யுத்த சட்டத்துக்கமைய கோவில்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றின் மீது தாக்கு தல் நடத்த முடியாது. வெலிவேரிய சம்பவத்தில் அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியது மட்டு மன்றி, தமது உயிரைக் காத்துக் கொள்வதற்காக அங்கு அடைக்கலம் புகுந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் - என்றார்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


### திருமலை மாணவர் படுகொலை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு

ளும் உரிமை தமக்கு இருப்ப தாகவும் மருத்துவர் மனோ கரன் தெரிவித்துள்ளார்.

உண்மையான கொலையாளிகளையும் என்ன நேர்ந்தது என்பத்னையும் இந்த அறிக் கையின் மூலம் புரிந்து கொள்ள முடியும் எனக் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 12 விசேட அதிரடிப் படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

### பஸ் – மோ. சைக்கிள் விபத்தில் பளையில் நேற்று குடும்பஸ்தர் சாவு

பளை நகர்ப் பகுதி வர்த்தகரான வ.தியாகராசா என்பவரே மரணமானவராவார்.

பளை கச்சார்வெளியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் அருள்சுதர்சன் (வயது -40) , பளை நகரைச் சேர்ந்த பாஸ்கரன் சஜீவன் (வயது -18) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரையும் பளை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரிக்கு கொண்டு வரும் வழி யில் வர்த்தகர் மரணமானார். இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ப.அருள்சுதர்சன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிள் பலத்த சேதங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்ப்பட்டது.

பளைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (த-9)


**வீடு வாடகைக்கு உண்டு**

K.K.S. றோட் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு வாடகைக்குண்டு.
(அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:-
077 2798 265, 077 358 6649

**காணி விற்பனைக்கு**

யாழ் பிரதான வீதிக்கு அருகில் 4ஆம் குறுக்குத் தெருவில் 1 ½ பரப்பு கட்டடக் காணி விற்பனைக்குண்டு.
விலை 70 இலட்சம்
தொடர்பு:-
077 6340 324, 077 6231 563

**விற்பனைக்கு**

1 வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான அதன் குட்டிகளும் வான்கோழி, வண்ரம், கினிக்கோழி, மணிதாரா, வெள்ளடியன், கோழிகளும் குஞ்சுகளும் விற்பனைக்கு.
தொடர்பு:- லி.மயூரன்
ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக புன்னாலை கட்டுவன் தெற்கு, பூதராயர் கோயிலடி, டயலோக் டவர் அருகில்

2013 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு... VACANCY
அடிப்படை தகைமைகளான O/L, A/L உடன் எமது அமெரிக்க நிறுவனத்தில் இணைந்து பணிபுரியலாம். சர்தேச ரீதியில் இயங்கும் எமது வடமாகாண மாவட்டக் கிளைகளுடன் நீங்களும் இணையுங்கள்.
★ பயிற்சி வழங்கப்படும், பயிற்சியின் போது 12000/- - 15000/-. பயிற்சியின் பின் 50000/- பெறலாம்.
★ உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம். (31426)
இன்றே அழையுங்கள். 0778602777,0775566224

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

புதியவரவு சல்வார் 1200/= தொடக்கம்,
கொட்டன் சாறி 440/= தொடக்கம்
ஆண்களுக்கான சேட் -390/= தொடக்கம்,
இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள
இந்தியன் றொப்- 400/= தொடக்கம்.

114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021 2219393

மாமனிதர்
**குமார் பொன்னம்பலம்**
அவர்களது
75ஆவது பிறந்ததின நினைவுப் பேருரை
"தற்கால சர்வதேச சட்ட மற்றும் அரசியல் ஒழுங்கில் போருக்குப் பின்னரான தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்"

உரையாற்றுபவர்:
குமாரவடிவேல் குருபரன்,
சட்டத்துறை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
காலம் : நாளை (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.30 மணி - 6.00 மணி வரை
இடம் : திருமறைக் கலா மன்றம் (கலைத்தூது மண்டபம்), பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.
- மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு-
தொடர்புகளுக்கு:- 077 606 8834

**மடிகணனிகள் 45,000/- முதல்**
(15.6"/500GB HDD /2GB DDR III)
**கணனிகள் 46,000/- முதல்**
(18.5"/500GB HDD /2GB DDR III)
**LED TV 18,000/- முதல்**
3 வருட உத்தரவாதத்துடன்
Genuine Products
DELL hp TOSHIBA lenovo SAMSUNG
மேலும் பல விலைக்கழிவுடன்
Subwoofers, Printers, Routers, Web Camera, Scanner, Headphone, Laptop Cooling Pad & Accessories
ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.
MICRO PC SYSTEMS
வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw, 011-2367405, யாழ்ப்பாணம்:-218, Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St, 021-2262929, கிளிநொச்சி:-A9 வீதி கச்சேரி முன்னால், 021-2285593, திருகோணமலை:- 235, Main St (வசீஹரன் ஹாட்வெயார் முன்னால்), 026-2226977


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.17
இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் குழு நிலைப் போட்டிகள் மற்றும் காலிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதனத்தில் இடம் பெறவுள்ளன.
இன்று இடம்பெறும் குழு நிலைப் போட்டிகள் மற்றும் காலிறுதி ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு.
குழு நிலைப்போட்டியில் பங்கு பற்றும் அணிகள்

**காலை 9மணி**
காமாட்சி விளையாட்டுக் ழகம் எதிர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

**மாலை 3மணி**
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம்.

**மதியம் 12**
சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம்.

**மதியம் 2மணி**
பொற்பதி விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் கிரேஸ் விளையாட்டுக்கழகம். (இந்தப்போட்டியில் வெற்றிபெறும் அணி இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் காலிறுதியாட்டத்தில் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.) (ற-23)

★ ★ ★


யாழ்ப்பாணம், ஒக.17
மொரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தால் தீவக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
இந்தச் சுற்றுத் தொடரில் 30 விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

## ரியல் மாட்ரிட் அபார வெற்றி

இன்டர் மிலன் அணிக்கு எதிரான நட்பு உதைபந்துப் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது.
அமெரிக்காவில் உள்ள செயின்ட் லூசியாவில் நடந்த இந்த ஆட்டத்தில் இன்டர் மிலன், ரியல் மாட்ரிட் அணிகள் மோதின.
ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு காகா (11ஆவது நிமிடம்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (38 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இதற்கு இன்டர் மிலன் வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.
முதல் பாதி முடிவில் ரியல் மாட்ரிட் அணி 2:0 என முன்னிலை வகித்தது.
இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த மாட்ரிட் அணிக்கு 67ஆவது நிமிடத்தில் காசிமிரோ ஒரு கோல் அடித்தார். கடைசி வரை போராடிய இன்டர் மிலன் வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மாட்ரிட் அணி 3:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்றது. (ற)

## இருதயராஜா மென்பந்துக் கிரிக்கெட்

# அனலைதீவு லக்கிஸ்ரார் இறுதியில்



யாழ்ப்பாணம், ஒக.17
மொரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் ஊர்காவற்துறை பிரதேச செயலக கழகங்களுக்கு இடையே நடத்திய மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும், ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது.
நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய லக்கிஸ்ரார் அணி, 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
அதில் கஜிபன் 23 ஓட்டங்களையும், காண்டீபன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் ஊர்காவற்துறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் நிதர்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3இலக்குகளையும், கஜன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
57 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 36 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
21 ஓட்டங்களால் வெற்றிபெற்ற அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அதில் இந்து 8 ஓட்டங்களையும், சந்துருகுமார் 5 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பில் கஜீபன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், துவாகரன் ஒரு பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)

## பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக.17
மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலகர் தரம் 11 பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்திலிருத்து மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ற-23)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி


யாழ்ப்பாணம், ஒக.17
தெல்லிப்பழை கலைச்செல்வி சனசமூக நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுகிழமை பொன்னாலை மான்பாய்த்தவெளி மாட்டு வண்டிச் சவாரித் திடலில் இடம் பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## மெய்வன்மை போட்டிகள் அடுத்த மாத இறுதியில்

யாழ்ப்பாணம்.ஒக. 17
இலங்கை மெய்வன்மை சங்கத்தால் வருடா வருடம் நடத்தப்படும் சிரேஸ்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 16, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
இந்தப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் தலைவர், செயலாளரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## விளையாட்டு அலுவலர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு, ஒக.17
கல்வி அமைச்சின் பாடசாலை விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆறு விளையாட்டுக்களுக்கான விளையாட்டு அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்டப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், வலய மட்டத்தில் விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தேசிய மட்டத்திலான விசேட வதிவிடப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.
இரண்டு கட்டமாக நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் முதற்கட்டமாக ஊவா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில், ஜிம்னாஸ்ரிக், உதைபந்தாட்டம் மற்றும் றக்பீ போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மேலதிக பயிற்சிகளும் வழங்கப்படும். (ற-86)




# தங்கம் வென்றார் கெம்போய்

உலக தடகள சம்பியன்சிப் தொடரில் ஆடவர் 3 ஆயிரம் மீற்றர் ஸ்ரிபின்செஸ் போட்டியில் கென்ய வீரர் இசெகில் கெம்போய் மூன்றாவது முறையாக உலக சம்பியனாகத் தெரிவானார்.
கென்ய நாட்டு ரசிகர்கள் ஆடவர் 3 ஆயிரம் மீற்றர் ஸ்டீபிள்செஸ் போட்டியை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். நடப்புச் சம்பியன் கெம்போய் மீதான எதிர்பார்ப்பே இந்த ஆவலுக்குக் காரணமாகும்.
ரசிகர்களின் எதிர்பார்ப்பை சிறிதும் ஏமாற்றாத கெம்போய், சொல்லி வைத்தாற்போல் இம்முறையும் தங்கப் பதக்கத்தை வென்றார். அவர் பந்தய தூரத்தை 8 நிமிடம் 6.01 விநாடிகளில் கடந்து தொடர்ந்து 3ஆவது முறையாகவும் உலக சம்பியனானார்.
அவரைத் தொடர்ந்து 8 நிமிடம் 6.37 விநாடிகளில் வந்த கென்யாவின் மற்றொரு வீரரான கன்செஸ்லஸ் கிப்ருடோ வெள்ளிப் பதக்கத்தையும், பிரான்ஸ் வீரர் மெக்கிஸ்ஸி 8 நிமிடம் 7.86 விநாடிகளில் வந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களும் கென்யாவுக்கு கிடைத்ததால் அந்நாட்டு ரசிகர்கள் உற்சாகத்தில் மிதக்கின்றனர்.
தங்கம் வென்ற கெம்போய், தனக்கே உரித்தான பாணியில் நடனமாடி ரசிகர்களை குதூகலப்படுத்தினார். வெற்றிக்குப் பின், தனது வெற்றியை கென்யாவின் ஜனாதிபதி உகுரு [illegible] என்று உடையில் [illegible]திருந்ததைக் காணி[illegible]பித்து [illegible]யைத் தெரிவித்தார்.
2009ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற போட்டியிலும், 2011ஆம் ஆண்டு தென்கொரியாவில் நடைபெற்ற போட்டியிலும் கெம்போய் தங்கம் வென்றிருந்தார். அது தவிர 2004 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும், இதேபிரிவில் இவர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். (ற)

**கென்ய நாட்டு ரசிகர்கள் ஆட வர் 3 ஆயிரம் மீற்றர் ஸ்ரிபின்செஸ் போட்டியை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். நடப்புச் சம்பியன் கெம்போய் மீதான எதிர்பார்ப்பே இந்த ஆவலுக்குக் காரணமா கும்.**

## சிந்துவை வீழ்த்தினார் சாய்னா



இந்தியன் பூப்பந்து லீக் ஆட்டத்தில் சாய்னா நெவால் 21:19, 21:8 என்ற நேர் செற் கணக்கில் உலக பூப்பந்துப் போட்டியில் பதக்கம் வென்ற சிந்துவை வீழ்த்தினார்.
புதுடில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் ஹாட் ஷாட்ஸ் அணியும், லக்னௌவின் அவாத்தே வாரியர்ஸ் அணியும் மோதின. இதில், ஹைதராபாத் வீராங்கனை சாய்னாவும், லக்னௌ வீராங்கனை பி.வி.சிந்துவும் மோதினர்.
ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்த ஆட்டம் நடைபெற்றது. உலக சம்பியன்சிப் கிண்ணப் போட்டியில் முன்னணி வீராங்கனைகளுக்கு அதிர்ச்சி அளித்த சிந்து, சாய்னாவை வீழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்டத்தில் சாய்னாவே ஆதிக்கம் செலுத்தினார்.
முதல் செற்றில் ஒரு கட்டத்தில் சிந்து 14:10 என்ற முன்னிலையில் இருந்தார். பின்னர் சுதாரித்துக் கொண்ட சாய்னா, அதிரடியாக விளையாட 17:15 என்று முன்னிலை பெற்றார். ஆனால் சிந்துவும் சிறப்பாக விளையாட, 17:17 என்று புள்ளிகள் சமநிலையை எட்டியது. இதையடுத்து சிறப்பாக விளையாடி 21-19 என்ற புள்ளிக் கணக்கில் முதல் செற்றை சாய்னா கைப்பற்றினார்.
இறுதியில் 21:8 என்ற நேர் செட்களில் சிந்துவை வீழ்த்தி சாய்னா வெற்றி பெற்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான ஆட்டத்தில் கயானா வெற்றி பெற்றது

கரீபியன் பிரீமியர் லீக் தொடரின் கயானா, ஜமைக்கா அணிகளுக்கிடையிலான போட்டியில் கயானா அணி வெற்றி பெற்றுள்ளது. இறுக்கமான போட்டியாக அமைந்த இப்போட்டியில் கயானா அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
ஜமைக்காவின் சபீனா பார்க், இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜமைக்காக அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது விக்கெட்டுக்காக 9.5 பந்துப்பரிமாற்றங்களில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, இறுதி நேரத்தில் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தது. இறுதி 14 பந்துகளில் 15 ஓட்டங்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தன. துடுப்பாட்டத்தில் கயானா அணி சார்பாக ஜேம்ஸ் ஃபிராங்ளின் 29 பந்துகளில் 40 ஓட்டங்களையும், மார்ட்டின் கப்ரில் 36 பந்துகளில் 39 ஓட்டங்களையும், லென்டில் சிமன்ஸ் 36 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஜமைக்கா அணி சார்பாக வேர்ணன் பிலாந்தர் 2 இலக்குகளையும், கிறிஸ் கெய்ல், முத்தையா முரளிதரன் இருவரும் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். 140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜமைக்காக அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



9.1 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 66 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்ட ஜமைக்கா அணி இறுதி 31 பந்துகளில் 44 ஓட்டங்கள் தேவைப்பட்டதோடு, கிறிஸ் கெய்ல் உட்பட 7 இலக்குகளும் கைவசமிருந்தன. எனினும் அவ்வணி அதன் பின்னர் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தது.
துடுப்பாட்டத்தில் ஜமைக்கா அணி சார்பாக கிறிஸ் கெய்ல் 46 பந்துகளில் 43 ஓட்டங்களையும், சட்விக் வோல்ட்டன் 20 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிறிஸ்தோபர் பார்ண்வெல் ஓர் பந்துப்பரிமாற்றத்தில் 4 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும், கிரிஷ்மர் சாந்தோக்கி 33 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும், மொஹமட் ஹபீஸ், ஸ்டீவன் ஜேக்கப்ஸ், வீரசம்மி பேர்மாள், சுனில் நரைன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இதில் சுனில் நரைன் 4 பந்துப் பரிமாற்றங்களில் 10 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்தார். இப்போட்டியின் நாயகனாக சுனில் நரைன் தெரிவானார்.

(ஙு-400)

# கயானா அணியில் இலங்கை வீரர் மலிங்க

இலங்கை 20/20 அணியின் உப தலைவர் லசித் மலிங்க கரீபியன் பிரீமியர் லீக் போட்டிகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கயானா அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றவே அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கயானா அணி சார்பாக வெளிநாட்டு வீரர்களில் ஒருவராக விளையாடி வரும் மொஹமட் ஹபீஸ் அவ்வணியிலிருந்து விலகவுள்ளதன் காரணமாகவே லசித் மலிங்க இப்போட்டிகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இதன் காரணமாக மொஹமட் ஹபீஸ் பாகிஸ்தான் அணியுடன் இணைய வேண்டிய தேவையுள்ளதன் காரணமாகவே லசித் மலிங்க இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். இலங்கையரான முத்தையா முரளிதரன் ஏற்கனவே ஜமைக்கா அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றி வரும் நிலையில், இலங்கையின் மஹேல ஜெயவர்தன ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
இதன்படி கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் பங்கு பற்றவுள்ள 3ஆவது இலங்கையராக லசித் மலிங்க மாறியுள்ளார்.
இதேவேளை, பார்படோஸ் அணியில் பங்குபற்றி வந்த உமர் அக்மலும் சிம்பாப்வே தொடருக்காக விலகவுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக பாகிஸ்தான் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றி, தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்துவரும் அஸார் மஹ்மூட்டை அவ்வணி ஒப்பந்தம் செய்துள்ளது.

(ஙு-400)



**இலங்கையரான முத்தையா முரளிதரன் ஏற்கனவே ஜமைக்கா அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றி வரும் நிலையில், இலங்கையின் மஹேல ஜெயவர்தன ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.**

# ஆட்டநிர்ணய சதி இலங்கை வீரருக்கு தொடர்பு

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில், இடம்பெற்ற ஆட்ட நிர்ணய சதி குறித்த தகவலை மறைத்ததாக இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த தொடரின் போட்டி ஒன்றில் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபடுமாறு இலங்கை வீரர் ஒருவர் அணுகப்பட்ட போதும், அதனை அவர் நிராகரித்துள்ளார். எனினும் இது குறித்து அவர் சர்வதேச கிரிக்கட் பேரவைக்குத் தகவல் வழங்கி இருக்கவில்லை.
இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள வீரர் நேற்றுமுன்தினம் இலங்கை கிரிக்கட் நிறைவேற்று குழுவின் முன்னால் அழைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. குற்றம் சுத்தப்பட்டுள்ள வீரர் முன்னர் இலங்கை கிரிக்கெட் அணியில் விளையாடி இருந்த போதும், பின்னர் சரியாக திறமையை வெளிப்படுத்தாக காரணத்தினால் அணியில் இருந்து நீக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது.
பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரின், டாகா கிளேடியேட்டர் அணியில் பங்கு பற்றி இருந்த 9 வீரர்கள் ஆட்டநிர்ணய சதி தொடர்பான குற்றச்சாட்டுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர். தற்போது அவர்களுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.
இந்த விசாரணைகள் நிறைவடையும் வரையில் குறித்த 9 வீரர்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படமாட்டாது என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது. குறித்த 9 வீரர்களில் 7 பேர் மீது, பணத்துக்காக போட்டியில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதே நேரம், இருவர் இந்த ஆட்ட நிர்ணயம் குறித்த தகவல்களை அறிந்திருந்த போதும், அதனை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அறிவிக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆட்ட நிர்ண சதி குறித்த தகவல்களை வழங்காத இரண்டு வீரர்களில் ஒருவர் இலங்கையர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரின் பெயர் விவரங்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை.

(ஙு-400)

# கிரிக்கெட் வீரர்களுக்கான விருது வழங்கல் செம்ரெம்பரில்

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ளது. இம்முறை இவ்விருதுகள் 'டயலொக் இலங்கை கிரிக்கெட் விருதுகள்' என அழைக்கப்படவுள்ளன. இந்த விருது நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 2012/2013ஆம் பருவகாலத்திற்கான விருதுகளில் இம்முறை வழக்கத்தை விட அதிகமான விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும், உள்ளூர், சர்வதேசப் போட்டிகளுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும் இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.
ஆண்கள், பெண்கள் என 150 இற்கு மேற்பட்ட கிரிக்கெட் வீரர்களுக்கும் விருதுகள் இம்முறை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த நிஷாந்த ரணதுங்க, டயலொக் மக்கள் தெரிவு விருது என மக்களின் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு பிரபலமான வீரர் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.
ஆண்களுக்கான பிரிவுகளில் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர், டெஸ்ட் பந்து வீச்சாளர், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் சிறந்த துடுப்பாட்ட வீரர், பந்து வீச்சாளர், சகலதுறை வீரர் ஆகிய விருதுகளும், இவ்வருடத்திற்கான சிறந்த வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரருக்கான விருதும், டயலொக் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதும், டயலொக் மக்கள் தெரிவு வீரருக்கான விருதும் உட்பட விருதுகள் வழங்கப்படவுள்ளன. பெண்கள் பிரிவில் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை, சிறந்த பந்துவீச்சாளர் ஆகிய விருதுகள் மட்டும் வழங்கப்படவுள்ளன. இதற்கான 3 வருட காலத்திற்கான ஒப்பந்தத்தில் இலங்கை கிரிக்கெட் சபையும், இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் பிரதான அனுசரணையாளரான டயலொக் நிறுவனமும் நேற்று மாலை கைச்சாத்திட்டனர்.

(ஙு-400)

# இங்கிலாந்து உள்ளூர் அணியில் கௌதம் கம்பீர்

இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் சம்பியன் தொடரில், எசக்ஸ் அணிக்காக விளையாட இந்திய வீரர் கௌதம் கம்பீர் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இந்திய அணியின் தொடக்க வீரர் கௌதம் கம்பீர், 31. இதுவரை 54 டெஸ்ட் (4021 ஓட்டங்கள்), 147 ஒருநாள் (5238 ஓட்டங்கள்), 37 சர்வதேச டுவெண்டி-20' (932 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடி உள்ளார். சமீபகாலமாக மோசமான துடுப்பாட்டம் காரணமாக இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவிக்கிறார்.
இந்நிலையில் இவர், இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் சம்பியன் கிண்ணத் தொடரில் விளையாட சசக்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இவர், நியூஸிலாந்தின் ஹமிஷ் ரூதர்போர்டுக்கு பதிலாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். ரூதர் போர்டு, நியூஸிலாந்தில் நடக்கவுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க சென்றுவிட்டார். இதனையடுத்து கம்பீர் வரும் ஆகஸ்ட் 20ஆம் திகதி கோல்செஸ்டர் நகரில் நடக்கவுள்ள நார்தாம்ப்டன்ஷயர் அணிக்கு எதிரான உள்ளூர் சம்பியன்கிண்ணப் பிரிவு -2 போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து கம்பீர், தனது டுவிட்டர்' இணைய தளத்தில் வெளியிட்ட அறிக்கையில், ரசிகர்களுக்கு நற்செய்தி. இன்று முதல் மீண்டும் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ளேன். இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் போட்டியில், சசக்ஸ் அணிக்காக விளையாட உள்ளேன்.' என, தெரிவித்தார். இப்போட்டியில் கம்பீர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, திறமையை நிரூபிக்கும் பட்சத்தில், மீண்டும் இந்தியாவுக்காக விரைவில் விளையாடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



(ஙு-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17/08/2013

# முச்சதச் சாதனை படைப்பார் தவான் பயிற்சியாளர் நம்பிக்கை



"ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 300 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை ஷிகர் தவான் படைக்க வாய்ப்பு உள்ளது."என, பயிற்சியாளர் லால் சந்த் ராஜ்புட் நம்பிக்கை தெரிவித்தார். இந்திய அணியின் அதிரடி வீரர் ஷிகர் தவான், அறிமுக டெஸ்ட் (எதிர்- ஆஸி..) போட்டியில் அதிவேக சதம் அடித்து உலக சாதனை படைத்தார். பின் தென் ஆப்ரிக்கா ஏ' அணிக்கு எதிரான முத்தரப்பு லீக் போட்டியில், 248 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம், 50 பந்துப் பரிமாற் போட்டியில் அதிக ஓட்டங்கள் பெற்ற இந்திய வீரர் என்ற சாதனை படைத்தார். இதற்கு முன் சச்சின், சேவாக் மட்டுமே இரட்டை சதம் அடித்திருந்தனர். இது குறித்து இந்திய ஏ' அணி பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட் கூறியதாவது:

தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக தவான் சிறப்பாக செயற்பட்டார். இதற்கு முன் இம்மாதிரியான ஆட்டத்தை நான் பார்த்தது கிடையாது. சச்சின், சேவாக்கை போல தவானும் இரட்டை சதம் அடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. இவர் வியக்கத்தக்க துடுப்பெடுத்தாடினார். இதனால், எதிரணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. மொத்தம் 30 நான்கு ஓட்டங்கள், 7 ஆறு ஓட்டங்களையும் அடித் தால் தென் ஆப்ரிக்க அணி பந்துவீச்சாளர்கள் திணறிவிட்டனர். தற்போதுள்ள சூழ்நிலை யில், எந்தவொரு ஓட்டமும் சாத்தியமே. இதன்படி, தவான் எதிர்காலத்தில் ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில், ஒரு இன்னிங்சில் 300 ஓட்டங்களை எட்ட வாய்ப்பு உள்ளது. கடந்த இரண்டு மாதமாக நடந்த சாம்பியன்ஸ் கிண்ணம் முதல் சிம்பாப்வே தொடர் என அனைத் திலும் தவான் அசத்தினார். இவரைப்போல, இளம் வீரர்கள் இருப்பதால், இந்திய அணியின் எதிர்காலம் சிறப்பாக உள்ளது. இவ்வாறு லால் சந்த் ராஜ்புட் கூறினார்.

**வீடு வாடகைக்குண்டு**

இல. 05, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் (வலம்புரி நிறுவனத்துக்கு அருகில்) சகல வசதியும் கொண்ட புதியவீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: ச.சிவசோதி - 077 379 6373

**உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு**

புதிய TAFFE RC தொடர் இலக்கம் 900 மணி வேலை செய்த நிலையில் பெட்டியுடன் உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. (35226)(7.6.3)

தொடர்பு: 077 068 7437 குடியிருப்பு, வவுனியா.

# தென்னாபிரிக்க ஆடுகளம் இந்திய அணிக்கு சவாலாகும்


முத்தரப்பு தொடரில் கோப்பை வென்றது மகிழ்ச்சி. இருப்பினும், வரும் நவம்பர் மாதம் தென் ஆப்ரிக்க தொடரில் பங்கேற்கும் போது, இப்போதுள்ள ஆடுகளம் போல இருக்காது." என, இந்திய ஏ' அணி தலைவர் புஜாரா தெரிவித்தார்.

தென் ஆப்ரிக்கா சென்ற இந்திய ஏ' அணி, முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்றது. மூன்றாவது அணியாக ஆஸ்திரேலிய ஏ' அணி விளையாடியது. இதன் இறுதி ஆட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதின.

இந்திய அணியின் இலக்கை (243/10) துரத்திய ஆஸ்திரேலிய அணி, 46.3 பந்து பரிமாற்றத்தில் 193 ஓட்டங்களுள் சுருண்டு தோல்வி அடைய, இந்திய அணி கிண்ணத்தை வென்று அசத்தியது. இதுகுறித்து தலைவர் புஜாரா தெரிவித்ததாவது:

முத்தரப்பு தொடரில் பங்கேற்ற ஆடுகளங்கள் எல்லாம் சமதளமாக இருந்தன. இதனால் அதிக ஓட்டங்கள் எடுக்கமுடிந்தது. இத்தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டு லீக் போட்டியில் தோல்வியடைந்தோம். இதனால், எப்படியும் ஒரு போட்டியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்த வேண்டும். தவிர, இத்தொடரில் சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றியே தீர வேண்டும் என, எல்லோரும் விரும்பினோம்.

எங்களது பலமே துடுப்பாட்டம் தான். கடைசிப் போட்டியில் இறுதி துடுப்பாட்ட வீரர்கள் சொதப்ப, பந்து வீச்சாளர்கள் எழுச்சி பெற்று, கிண்ணத்தை வெல்ல உதவினர். இது மகிழ்ச்சியாக உள்ளது. இருப்பினும், அடுத்து வரும் நவம் பர் மாதம் இந் திய அணி தென் ஆப்ரிக்கா வரும் போது, இப்போதுள்ள ஆடுகளங்கள் போல இருக்காது. முற்றிலும் வித்தியாசமாகத்தான் இருக்கும். அப்போது, ஆடுகளம் மட்டுமன்றி, சூழ்நிலைகளையும் பயன்படுத்துவது. வானிலை மற்றும் பிற அம்சங்களைப் பொறுத்து தான் வெற்றி கிடைக்கும். இவ்வாறு புஜாரா கூறினார். (ஙு-400)



**பெண் வேலையாள்கள் தேவை**

பாஷையூரில் இயங்கிவரும் தனியார் கடலுணவு நிறுவனத்துக்கு
பெண் வேலையாள்கள் தேவை.
வயதெல்லை - 18 -45
தொடர்பு:- 765ஏ, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம். 0770581671

**கணினி திருத்தம் COMPUTER REPAIR**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna. லப்டொப் மேசைக்கணினிகள் திருத்தம்!
Laptops,Desk Computers Repair! On the Spot Solution! On your Home! Call me!

**ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.**

தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்
தொடர்புகளுக்கு - 077 3818799
பிரணவன் என்ரபிறைசஸ்
இல- 365, பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

**3 தரம்! விலை!!**

இப்பொழுது அதி உயர் தரத்திலான டிஜிற்றல் பிறிண்டர்களை மூன்று விலைகளில் உங்களின் தேவைகளிற்கேற்ப பெற்றுக்கொள்ளுங்கள்.

தொகையான வேலைகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன...

**மற்றும் உயர்தர ஓவ்செற் பிறிண்டிங்**

- புத்தகங்கள்
- லேபிள்கள்
- துண்டுப் பிரசுரங்கள்
- போஸ்டர்கள்
- அழைப்பிதழ்கள்



ANDRA DIGITAL PRINTING

379, கஸ்தூரியார் வீதிஇ யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000 Mob : 0776622981, 0777481696.



வேல்லை - பெருங்குளம்
அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில்
வருடாந்த உற்சவம்
2013



விஜய வருடம் ஆவணி 3ஆம் நாள்
19.08.2013 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு
அம்மன் தேரில் பவனிவருதல்.
விஜய வருடம் ஆவணி 4ஆம் நாள்
20.08.2013 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு
தீர்த்தோற்சவம்
அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்து தரிசித்து
அம்பிகையின் அருள் பெறுவீர்களாக.
வேலணை. தேர், தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.



புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

உற்சவ காலத்தை முன்னிட்டு
08.09.2013 வரை
விசேட கழிவு வழங்கப்படும்.

நல்லூர் ஆதீனத்திற்கு அருகாமையிலுள்ள பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள எமது புதிய பூபாலசிங்கம் புத்தகசாலை நிறுவனத்தில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள், சிறுவர்களுக்கான நூல்கள் மற்றும் நாவல், இலக்கியம், கவிதை, ஆன்மீகம், அரசியல், வரலாறு, சமயம், சங்கீதம்மற்றும் உங்களுக்குத் தேவையான அனைத்து நூல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி : 011-5920959

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org